பக்கங்கள் : பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 தை 27 ஞாயிற்றுக்கிழமை (10.02.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 76

# முன்னாள் அமைச்சர் ஸ்ரீபதி சூரியாராய்ச்சி கல்கமுவவில் வாகன விபத்தில் பலியானார்!

## மற்றும் மூவரும் உயிரிழந்தனர்!!



கொழும்பு,பெப்.10

முன்னாள் அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் அமைப்பாளருமான கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீபதி சூரியாராய்ச்சி(வயது 45) வாகன விபத்து ஒன்றில் நேற்றுப் பலியானார். இவ்விபத்தில் இவருடன் மேலும் மூவர் உயிரிழந்திருக்கின்றனர்.

நேற்று சனிக்கிழமை பிற்பகல் 1.15 மணியளவில் அநுராதபுரத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த ஸ்ரீபதி சூரியாராய்ச்சியின் 'சணி' ஜீப் வாகனம் விபத்தில் சிக்கியது. அநுராதபுரம் - குருநாகல் வீதியில் கல்கமுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெதகம பிரதேசத்திலேயே இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்து இடம்பெற்றபோது குறிப்பிட்ட வாகனத்தில் ஆறுபேர் பயணித்துக் கொண்டிருந்தனர். அவர்களில் வாகனச் சாரதியும் மற்றும் ஒருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்து விட்டனர்.

தம்புத்தேகம வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் மொஹான் பிரேம் லால் கூறுகையில், "படுகாயமடைந்த ஸ்ரீபதி சூரியாராய்ச்சி எமது வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டார். எனினும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது உயிரிழந்திருந்தார்" என்றார்

உயிரிழந்த ஸ்ரீபதி சூரியாராய்ச்சியினதும் மற்றும் இருவரினதும் சடலங்கள் (14ஆம் பக்கம் பார்க்க)



# கிளிநொச்சியை இராணுவம் நிச்சயம் கைப்பற்றியே தீரும்!

## புலிகளின் தாக்குதல்களைக் கண்டு தாம் பின்வாங்கப் போவதில்லை என்கிறார் தளபதி



கொழும்பு,பெப்ரவரி10

கிளிநொச்சியைக் கைப்பற்றுவதே எமது திட்டம். அதனை நிச்சயம் கைப்பற்றியே தீருவோம்.

அந்தப் பிரதேசத்தைக் கைப்பற்றிய பின்னர், கடந்த காலத்தைப்போன்று அங்கிருந்துவிலகமாட்டோம்.

நாட்டின் வேறு பகுதிகளில் தாக்குதல்களை நடத்தி எங்களைத் திசைதிருப்புவதற்கு விடுதலைப் புலிகள் முயல்கின்றனர். அத்தகைய தாக்குதல்களைக் கண்டு நாம் பின்வாங்கப்போவதில்லை.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா.

கொழும்பிலிருந்து வெளிவரும் சிங்கள வார இதழ் ஒன்றுக்கு அளித்த செவ்வியில் இந்த விடயங்களை அவர் கூறியுள்ளார்.

அவரது செவ்வியின் சாராம்சம் வருமாறு-

53, 55, 57, 58, 59 ஆகிய படையணிகள் வன்னியைச் சுற்றிவளைத்துவிட்டன. இதனால் எமது கவனத்தை திசை திருப்ப விடுதலைப் புலிகள் முனைகின்றனர். நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இடம் பெற்றுவரும் தாக்குதல்கள் அத்தகைய நோக்கங்களைக் கொண்டவையே ஆகும்.

இத்தகைய தாக்குதல்களைக் கண்டு நாம் பின்வாங்கப் போவதில்லை. கிளிநொச்சியை நிச்சயம் கைப்பற்றுவோம். வன்னியில் உள்ள 2 லட்சம் மக்களையும் விடுதலைப் புலிகளின் பிடியில் இருந்து விரைவில் மீட்போம்.

இராணுவத்தில் 33,000 பேரை கடந்த வருடம் மட்டும் இணைந்திருக்கின்றோம்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தளபதி நேற்று வன்னியில்

வவுனியா, பெப். 10

வன்னிப் பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாக களத் தளபதிகளுடன் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத்பொன்சேகா நேற்று விரிவாக ஆராய்ந்தார்.

வன்னிக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட இராணுவத் தளபதியை வன்னிக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய வரவேற்றார்.

வன்னிக் கட்டளைத் தலைமையகத்தில் களமுனைத் தளபதிகளை இராணுவத் தளபதி சந்தித்து போர் நடவடிக்கைகள் குறித்துக் கேட்டறிந்தார்.

வவுனியா, மன்னார் போர்முனைகளில் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து களமுனைத் தளபதிகளுக்கு இராணுவத் தளபதி அறிவுறுத்தல்களை வழங்கினார் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.(அ-1 )

## கோதுமை மாவின் விலை கிலோ 81 ரூபா! பாணின் விலையில் 20ஆம் திகதி வரை மாற்றமில்லை

யாழ்ப்பாணம்,பெப்.10

குடாநாட்டில் கோதுமை மாவின் விலை நாளை திங்கட்கிழமை தொடக்கம் ஒரு கிலோ 81 ரூபாவாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என யாழ். அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

தெற்கில் கோதுமை மாவின் விலை கடந்த டிசெம்பர் மாதம் 25ஆம் திகதி ஒன்பது ரூபாவால் அதிகரிக்கப்பட்டிருந்தது.

அந்த விலையேற்றத்தின் பிரகாரம் நாடெங்கும் கோதுமை மா கிலோ 75 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

எனினும் குடாநாட்டில் ஏற்கனவே பழைய விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டு கையிருப்பில் போதியளவு கோதுமை மா இருந்ததால் விலை உயர்த்தப்படவில்லை.

கையிருப்பில் இருந்த கோதுமை மா முடிவடையும் நிலையில் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ள கோதுமை மா தற்போது ப.நோ.கூ. சங்கங்களுக்கு செயலகத்தால் வழங்கப்பட்டுள்ளது. (14ஆம் பக்கம் பார்க்க)

## வாகனம் அதிவேகத்தில் செலுத்தப்பட்டதாக ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளதாம்

கொழும்பு,பெப்.10

முன்னாள் அமைச்சர் ஸ்ரீபதி சூரியாராய்ச்சி உட்பட நால்வர் உயிரிழந்தமைக்கு அதிக வேகத்துடன் வாகனம் செலுத்தப்பட்டமையே காரணம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மிகவும் வேகமாக பயணித்துக்கொண்டிருந்த ஸ்ரீபதி சூரியாராச்சியின் வாகனம் கட்டுப்பாட்டை இழந்து, பாதையைவிட்டு விலகி வீதியோரத்தில் இருந்த மரம் ஒன்றுடன் மோதியுள்ளது என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் அறியவந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மாஹோ பிரதேசத்துக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் இந்த விபத்துத் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வடமேல் மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜயந்த ஜயசிங்க தெரிவித்தார்.

(அ-2)

www.slt.lk




ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான், சிங்கப்பூர், அவுஸ்திரேலியா மற்றும் இந்தியா உட்பட 73 நாடுகளுக்கு நிமிடத்திற்கு ரூபா. 10/-

மத்திய கிழக்கு உட்பட 144 நாடுகளுக்கு நிமிடத்திற்கு ரூபா. 25/-

SLT MAXtalk

• செக்கன் அடிப்படையில் கணிப்பீடு
• மறைமுக கட்டணங்கள் இல்லை
• மொபிடெல் வாடிக்கையாளர்களுக்கு இலவச பிரவேச இலக்கம் - 1266

துரித தொலைபேசி இல:
011 2555555

Sri Lanka Telecom

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



பொலிஸ் மா அதிபரின் பணிப்பின் பேரில் 111ஆவது விசேட நடவடிக்கைப் படையணி அலுவலகம் ஒன்று யாழ்.பொலிஸ் நிலைய வளாகத்தில் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. அலுவலகத்தை சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரியா திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

## தவக்கால விசேட வழிபாடுகள்

யாழ்ப்பாணம், பெப்.10

தவக்காலத்தை முன்னிட்டு விசேட வழிபாடுகளை குருக்கள், துறவிகள், மடசார்பற்ற சபைகளுக்கான ஆணைக்குழு ஏற்பாடு செய்துள்ளது.

குடாநாட்டில் நான்கு இடங்களில் இந்த விசேட வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

இன்று ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத்திலும் எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்திலும் 24ஆம் திகதி கொழும்புத்துறை தூய செபமாலை அன்னை ஆலயத்திலும் மார்ச் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் தூய மரியன்னை ஆலயத்திலும் இந்த வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

வழிபாடுகள் எல்லா இடங்களிலும் மாலை 4 மணிக்கு ஆரம்பமாகி 5 மணிக்கு முடிவடையும். (அ-50)


## அறிவித்தல்

FORUT அனுசரணையுடன் VOGT யினால் 2004 இல் நடத்தப்பட்ட தொழிற்பயிற்சிகளான

1) தையல் இயந்திர திருத்தற் பயிற்சி (பெண்கள்)
2) வீட்டு மின் இணைப்பு பயிற்சி (ஆண்கள்)

என்பவற்றினை நிறைவு செய்தவர்கள் அதற்குரிய சான்றிதழ்களை வடமராட்சி நல்லொழுக்க நிறுவன VOGT அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

இணைப்பாளர்,
வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் (VOGT),
விக்னேஸ்வரா வீதி,
நெல்லியடி, கரவெட்டி.
(C/551420)

## துரித தபால்கள் பொதிகள் சேவை

FedEx Express

நீங்கள் குறிப்பிடும் எந்த முகவரியிலும் ஒப்படைக்கப்படும்

உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் சில மணிநேரங்களில் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள

WESTERN UNION

திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)


## மரண அறிவித்தல்

### திருமதி செல்லம்மா கந்தப்பு

சாமியன் அரசடி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா கந்தப்பு நேற்று (09.02.2008) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மறைந்த அதிபர் சு.கந்தவனம் - பார்வதி தம்பதியின் மகளும் அமரர் முருகேசு கந்தப்பு (துறைமுகக் கூட்டுத்தாபனம்) அவர்களின் மனைவியும் சுதாகர்(கனடா), சுமதி (ஆஸ்திரேலியா), சுரேஸ்குமார், அமரர் சுகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் மேனகா(கனடா), தேவகரன்(ஆஸ்திரேலியா), பாமினி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2008) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் மு.ப. 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் சோனப்பு மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.சுரேஸ்குமார்
(மகன்)

## கண்காட்சியும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், பெப்.10

தென்மராட்சி கல்வி வலயம் நடத்தும் ஆக்கத்திறன் கண்காட்சியும் நூல் வெளியீடும் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை நடைபெறவுள்ளது.

தென்மராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராஜா (ஆரம்பக் கல்வி) தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்துகொள்கிறார்.

இந்நிகழ்வில் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் த.சிவகுமார் எழுதிய 'தொடர்பாடல் தேர்ச்சிக்கான ஆக்கத்திறனும் கிரகித்தலும்' என்ற நூல் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

இக்கண்காட்சி நேற்று ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. (அ-2)

## சமய சந்நிதிகளில்

நீர்வேலி, பெப்.10

சிறுப்பிட்டி மேற்கு ஸ்ரீஞான வைரவர் ஆலயக் கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.45 மணிக்கு நடைபெறவுள்ளது. (202-110)

* * *

சுழிபுரம், பெப்.10

சுழிபுரம் மேற்கு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில் வருடாந்த கொடியேற்ற உற்சவம் நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. தினமும் காலை திருவிழா 8 மணி முதலும் மாலைத் திருவிழா பி.ப.2 மணி முதலும் நடைபெறவுள்ளது. தேர்த்திருவிழா எதிர்வரும் 21ஆம் திகதி வியாழக்கிழமையும் தீர்த்தத்திருவிழா மறுநாள் வெள்ளிக்கிழமையும் நடைபெறவுள்ளன. (1-28)

* * *

யாழ்ப்பாணம், பெப்.10

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய இலட்சார்ச்சனை நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 21ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

21 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்குத் தீர்த்தமும் பிற்பகல் 3 மணிக்கு மஹாலட்சுமிக்கு விசேட பூசையும் நடைபெறும். (202)


வெற்றித்தேர்வு
By:Mr.S.நிர்மலன் (ADE)
திருமலை
★ புலமைப்பரிசில் Gr. 5 பரிந்துரைக்குட்பட்ட பரீட்சைகள்
★ Gr. 1 முதல் O/L வரை
★ Gr.6 To 11 Eng. Medium
★ ENG. LITERATURE 10, 11
★ A/L HINDU CULTURE
Mr. S.கார்த்திக்
★ POLY. SCIENCE
Mr. T.கஜன்
SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்.

## மணமகன் தேவை

73ஆம் ஆண்டு பிறந்த உத்தரட்டாதி நட்சத்திரம், 7இல் செவ்வாய் மெத்த கிரகபாவம் 52 வீரியைக்கு அரசாங்க உத்தியோகத்தர் (உள்நாடு) அல்லது தாரதரமுள்ள வெளிநாட்டு மணமகன் தேவை. தகுந்த சீதனம் வழங்கப்படும்.
விளம்பர இல. 3058
C/o உதயன்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள MAZDA NPHY XXXX கன்ரர் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 2263284
(70970)

THE ROYAL COLLEGE OF JAFFNA
சுலபமான முறையில் ஆங்கிலத்தில் எழுத, வாசிக்க, கதைக்க, பயில By:விக்னேஸ்வரன் ஆச்சாரி, 428 (302) K.K.S.வீதி, யாழ்ப்பாணம், பிளாக்வீதி, சங்கானை.
(71007) "THE ROYAL IS THE BEST"

## பராமரிப்பாளர் தேவை

பெண்நோயாளர் ஒருவரின் முழுநேர பராமரிப்பிற்கு பெண் உதவியாளர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்க்கப்படலாம்.
தொடர்பு: சி.சுந்தரமூர்த்தி
கதிரிப்பாய், அச்சுவேலி.
0212263421
(70999)

வெங்காயம், சுருட்டு ஏற்றுமதியாளர்களின் கவனத்திற்கு ...

எங்களிடம் பெரிய மரப்பெட்டிகள், பெரிய காட்போட் பெட்டிகள் மற்றும் உரப்பை வகைகள் கைவசம் உண்டு. தேவையானோர் உடன் தொடர்பு கொள்ளவும்.
சிவா நறுமணப் பூங்கா
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல 021 222 2567


## மரண அறிவித்தல்கள்

### சின்னப்பு செல்லப்பா

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னப்பு செல்லப்பா நேற்று(09.02.2008) சனிக்கிழமை 35/8, குமாரசாமி வீதி, கந்தர்மடம் என்ற தற்காலிக இல்லத்தில் காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
35/8, குமாரசாமி வீதி, சித்தாமணி
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (மனைவி).

### தருமலிங்கம் வில்வராஜன்(வில்வா)

(முன்னாள் உத்தியோகத்தர், கொமர்ஷல் வங்கி)



வட்டுக்கோட்டை, மூளாய் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட தருமலிங்கம் வில்வராஜன் மெல்போண், ஆஸ்திரேலியாவில் 02.02.2008 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் புஸ்பராணியின் அன்புக் கணவரும் பிரசன்னா, நியானா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற தருமலிங்கம் மற்றும் புவனேஸ்வரி தம்பதிகளின் மூத்த புதல்வனும் சோதி(மெல்போண்), தேவராஜன் (கொழும்பு), மலர் (மெல்போண்), சிவா(சிட்னி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஸ்ரீபாலச்சந்திரன், சந்திரசேகரன், ரவீந்திரி, யசோதை ஆகியோரின் மைத்துனரும் ஸ்ரீசங்கர், ஸ்ரீ சியாம், சுரேஷ், ஜெனனி, அபிராமி ஆகியோரின் அன்பு மாமனாரும் அச்சனா, அஜந்தன், கிரிஷ்சான், சாயிசுஷன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(11.02.2008) திங்கட்கிழமை மெல்போண், ஆஸ்திரேலியாவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த.தேவராஜன்
(முகாமையாளர், கொமர்ஷல் வங்கி, மட்டக்களப்பு)

### கந்தையா லெட்சுமிப்பிள்ளை



வேலணை கிழக்கை பிறப்பிடமாகவும் மன்னார், பெரியகடையை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா லெட்சுமிப்பிள்ளை நேற்று (09.02.2008) சனிக்கிழமை மன்னாரில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிள்ளையார் கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற விசுவலிங்கம் - சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற பிள்ளையார் - நாகமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகளும் கோணேஸ்வரி, மகேஸ்வரி (இந்தியா), சண்முகரத்தினம் (சுவிஸ்), தவமணி (கனடா), கமலாதேவி, சரவணநாதன் (தபால் அதிபர் GRANDPASS), சண்முகநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு, மயில்வாகனம், மற்றும் மங்கையர்க்கரசி (நியூஸிலாந்து), தியாகராசா (கனடா), செல்வராணி, ஜெயமதி ஆகியோரின் மாமியும் பரமலிங்கம் (கனடா), குணசிங்கம், மகாலிங்கம், காலஞ்சென்றவர்களான பாக்கியம், அன்னலெட்சுமி ஆகியோரின் சகோதரியும் பாஸ்கரன், சிறிதரன், மனோரஞ்சன், சிறிரஞ்சினி (மன்னார்), சிறிகாந்தன், சிறிராஜ், சிவகரன், குகன், ரமேஸ், சுரேந்திரன், நிராசன், சியாமளன், சர்மளன், துவா, கஜனிவாஜி, ஆதீபன், துசானி, ரஜீதா, கௌசிகா, அனுசியா, கீரிபன், சுகிர்தா, சுஜந்தி, அனுபாயன், யனார்த்தன், சிந்து, பவன், சிறிதரன் (தவம், ஆதவன் ஸ்ரோர்ஸ், மன்னார்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2008) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு இடம் பெற்று மன்னார் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சரவணநாதன் (மகன்)
023 222 2355
ஐ.சிறிதரன் (தவம் - பேரன்)

### சரவணமுத்து செல்லாச்சிப்பிள்ளை



உசன், கந்தசாமி கோயிலடியை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து செல்லாச்சிப்பிள்ளை நேற்று (09.02.2008) சனிக்கிழமை மட்டுவிலில் காலமானார்.

அன்னார் கணபதிப்பிள்ளை சரவணமுத்துவின் அன்பு மனைவியும் மகேந்திரன் (கிளிநொச்சி கல்வி வலயம்), இராஜேந்திரம் (மீசாலை), கணேசானந்தன் (கச்சாய்), உருத்திராபூபதி (உசன்), பாலச்சந்திரன் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தாயும், செல்வராணி, சந்திரேஸ்வரி, கனகேஸ்வரி (நூலகர், நகரசபை, சாவகச்சேரி), குணராசா (இ.போ.ச,கோண்டாவில்), ஜெயதேவி ஆகியோரின் மாமியும் கேமப்பிரியா, சுவர்ணப்பிரியா, துசிதப்பிரியா, சஞ்சிகா, ஐந்துரி, ஜெசாமினி, ஜெய்சினி, ஜரோசாந்தன், ஜெயமதுரன், கௌசிகன், நிருஷன் ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான சின்னம்மா, செல்லம்மா, சுப்பிரமணியம் மற்றும் கணபதிப்பிள்ளை, தம்பிஜயா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் மட்டுவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனல் வீதி, க.குணராசா
மட்டுவில் தெற்கு, (மருமகன்).
சாவகச்சேரி. (71009)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்காலச் சந்ததியினர் அனைவரையும் வலுவிழக்கச் செய்து வரும் கொடிய யுத்தம்!

இந்நாட்டின் சமுதாய உறுப்பினர்களில் பெரும்பாலானோர் தமது அன்றாட வாழ்க்கையைச் சுமுகமாக முன்னெடுத்துச் செல்ல இயலாத துர்ப்பாக்கிய நிலையில் வாழ்பவர்களே ஆவர். நாட்டின் இளைய சந்ததியினரைப் பொறுத்தவரையில், நாட்டில் நிலவும் சமுதாய சிக்கல் நிலை தொடர்பாக அவர்கள் புரிந்துணர்வோ அல்லது தெளிவான கருத்தெதனையுமோ கொண்டிருப்பர் என எதிர்பார்க்க இயலாது. பெரியவர்களது கருத்து நிலைப்பாடு மற்றும் நடவடிக்கைகளால் உண்மையில் பாதிப்புறுவோர் இச்சின்னஞ்சிறிசுகளே யாவர். பெரியவர்கள் காரணமாக உருவாகும் மோதல் நிலை, மற்றும் குழப்பங்களுக்கு அநியாயமாக முகம் கொடுக்க நேர்வதும் இந்த இளம் சமுதாயத்தினரே ஆவர். அநியாயமான வகையில் எனக் கூறுவதன் மூலம் சிலவேளைகளில் மட்டும் யுத்தத்தில் சிறுபராயத்தவர் உயிரிழக்க நேர்வதை நியாயப்படுத்த இயலும் என ஒரு சிலர் கருதக் கூடும். ஆனால் யுத்தகாரணமாக சிறுபராயத்தவர் உயிரிழக்க நேர்வதை எந்த விதத்திலும், எவரொருவராலும் நியாயப்படுத்திவிட முடியாது. வயதில் பெரியவர்கள் போன்று இளம் வயதுடைய தரப்பினர்களுக்கு இவ்விடயம் தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ளும் வாய்ப்போ, கருத்து வெளிப்படுத்தும் வாய்ப்போ கிட்டுவதில்லை. யுத்தம் தொடர் பாக அவர்களது கருத்து என்னவென் பது குறித்த நாம் ஒருபோதும் எமது பிள்ளைகளிடம் கேட்டறி வதில்லை. உண்மையில் நம் நாட்டில் சிறார்கள் யுத்தத்தின் பகடைக்காய்களாகவே அமைய நேர்கிறது அல்லது யுத்தத்தின் பலாபலனை அனுபவிக்கும் தரப்பினர்களாக மட்டுமே ஆக நேர்கிறது. யானைகள் தம்மிடையே சண்டையிட்டுக் கொள்ளும் சந்தர்ப்பத்தில், அருகிலுள்ள மரங்கள் செடி கொடிகள் சேதம் அடைய நேர்வதுபோன்றே, மனிதர்களது சிக்கல்கள்-அதன் பலனாய் உருவாகும். மோதல்கள் காரணமாக இளைய சமுதாயத்தினரே பலதரப்பட்ட வகைகளிலான பாதிப்புக்களுக்கு முகம் கொடுக்க வேண்டி நேர்கிறது. அந்தவகையில் இன்று இந்நாட்டின் இளம் சமுதாயத்தவர் பதற்றமும் குழப்பமும் நிறைந்ததொரு அமைதியற்ற சூழலிலேயே வாழ வேண்டி நேரிட்டுள்ளது. எமது பிள்ளைகள் இந்நாட்டின் எதிர்காலப் பரம்பரையினரே என்பதை நாம் மனதிலிருத்தி, எமது நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியது மிக அவசியமானதொன்றாகும். அந்த வகையில் இன்று நாம் எமது எதிர்காலப் பரம் பரையினரின் எதிர்கால நல்வாழ்வை நாமே நாசப்படுத்தும் வகையில் இந்த யுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றோம்.

**முரண்பாடுகள் மூல காரணம்**

நாட்டில் இடம்பெற்றுவரும் இந்த யுத்தத்தினை வெவ்வேறு தரப்பினர்களால் பலதரப்பட்ட கோணங்களில் நின்று விமர்சிக்க இயலும். ஆனால் கடைசியில் இந்த யுத் தத்துக்குக் காரணமாய் அமையும் அரசியல் பின்னணி அல்லது இயற்கை வளங்கள் தொடர்பான முரண்பாடுகள் என்பன வற்றின் அடிப்படையிலேயே இந்த யுத்தம் உருவாகித் தொடர்கிறது என்பது உண்மையானால், எமது இளைய சந்ததியினரின் எதிர்கால சுபீட்ச வாழ்க்கையை கருத்திற்கொண்டாவது, யுத்தத்தைத் தவிர்த்து, நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் உருவாக்க உற்சாகம் காட்டிச் செயற்பட வேண்டியது எமக்கு உரிய பொறுப்பும் கடமையுமாகும். அதனை ஒரு புறத்தில் இந்நாட்டின் ஒழுக்கசீலம்மிக்க கலாசாரப் பின்னணி கொண்ட இந்நாட்டின் பொதுமக்களது பொறுப்பாகக் கொள்ளல்வேண்டும். அதேசமயம் மறுபுறத்தில், சர்வதேச சட்டங்கள் மற்றும், மனித உரிமைகள் விடயத்தில் வைத்து நோக்கினாலும் கூட, இந்நாட்டின் பொது மக்களது வாழ்க் கையில் அமைதியும் சமாதானமும்மிக்கதொரு சூழ்நிலையை உருவாக்க உதவ வேண்டியதும் இந்நாட்டின்சகல தரப்பினருக்குமான பெரும் பொறுப்பும் கடமையுமாகும். விஷேடமாக, இந்த நாட்டின் சகல பிரஜைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்த அரசுக்கு அதற்கான விசாலமான பொறுப்புண்டு. இந்த யுத்தம் கடந்த 30 ஆண்டுகள் காலமாக இந்த நாட்டில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது. யுத்த சூழல் நிலவும் எல்லைப் புறக் கிராமங்கள் தொடர்பில் மட்டுமன்றி, நாட்டின் வடபகுதியோ மற்றும் நாட்டின் தென்பகுதியோ குறித்து நாம் கவனத் தில் கொண்டாலும் கூட, இந்நாட்டின் குறிப் பிடத்தக்க அளவிலான சிறார்களது பாடசாலைக்கல்வி வாழ்க்கை தடைப்பட்டுக் போயுள்ளது. அச்சிறார்களது இளமைக் கால மகிழ்ச்சிகரமானதான வாழ்க்கையும் நாசமடைய நேர்ந்துள்ளது. கடந்த காலக்கட்டம் முழுவதிலும் யுத்தம் காரணமாக பெரும் தொகையான பாடசாலைக் கட்டடங்கள் முற்றுமுழுதாக நாசமடைய நேர்ந்தது. குறிப்பிட்ட அப்பகுதிகளில் சிறுவர் சிறுமியர் பெரும்பாலானோர் அகதிமுகாம்களில் தமது பெற்றோருடன் வாழ்ந்து வருகின்றனர். இதிலிருந்து யுத்தம் என்பது மனித விரோத செயற்பாடு என்பது மட்டுமல்லாது நாட்டின் இளைய சிறார்கள் தரப்பிற்கும் நாசத்தை ஏற்படுத்தவல்லதொன்றே என்பது தெளிவாகப் புலனாகின்றது. சமாதானத்தை விரும்பும் தரப்புகள் என்றவகையில், இத்தகைய சிக்கல் களுக்கு நாட்டின் சிறுவர் சிறுமியர் முகம் கொடுக்க நேர்ந்துள்ள நிலையை மாற்றியமைத்து, இந்த எதிர்காலச் சந்ததியினரை நற்பிரஜைகளாக உருவாக்க வேண்டிய தலையாய பொறுப்பு இந்நாட்டின் குறிப்பிட்டதொரு தரப்பு பொதுமக்களுக்கே என்றல்லாது, இந்நாட்டின் ஒவ்வொரு மனிதர்களுக்கும் உள்ள பாரிய பொறுப்பாகும். அது இந்நாட்டின் பாரம்பரிய பண்பாடு களைக் கட்டிக் காக்கும் வகையிலானதொரு செயற் பாக அமைய வேண்டும். •

**போஷாக்கற்ற சிறுவர்கள்**

இன்று நாம் அறிந்தவகையில் எல்லைப் புறக் கிராமங்கள் மற்றும் வட கிழக்குப் பிரதேசங்களில்


வன்னியில்....


வாழ நேர்ந்துள்ள சிறார்கள் மத்தியில் உடற் போசாக்கின்மை பெருமளவில் பரவிக் காணப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. அதேசமயம் அச்சிறார்கள் உள ரீதியிலும் பெரும் பாதிப்புக்கு உட்பட்டுள்ளமை புள்ளிவிவரங்களின் அடிப்படையில் உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்கள் வளர்ந்து பெரியவர்களாக உருவாகும் வேளையில் அவர் கள் உளரீதியில் பெருமளவில் மனக் காயங்களால் சிரமப்பட நேர்வதற்கு பெருமளவு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அவர்கள் இன்று எதிர்கொள்ளும் யுத்தசூழ்நிலைப் பாதிப்புக்கள் காரணமாக நேரான, சீரான வாழ்க்கைப் பாதையினின்றும் தடம் புரண்டு, மன ஆரோக்கியமற்ற, மனத்தாக்கத்திற்கும் மனக்காயங்களிற்கும் உள்ளானதொரு சமூகமாக உருவெடுக்கத் தக்க அபாயம் படிப்படியாக அதிகரித்து வருகின்றது. அவர்களது மனங்களில் மன வைராக்கியம், கடும் குரோத மனப்பாங்கு என்பவை போன்ற வன்முறைப் போக்கும் மனங்களில் நிரந்தரமாகவே குடிகொண்டு அவர்களைக் கட்டுப்பாடற்ற, கட்டுப்பாடுகளை மீறிச் செயற்பட விளையும், பண்பாட்டுக் கலாச்சா

# அரசியல் தலைவர்களின் அதிகாரப் போட்டிக்கு இரையாகிச் சீரழிகிறது சிறிலங்கா

ரத்தை புறந்தள்ளிச் செயற்பட விளையும் போக்கை அவர்கள் மத்தியில் உருவாக்க வழி அமைப்பதாக அமையும்.

விசேடமாக, தமது இனத்துக்குப் புறம்பான ஏனைய இனத்தவர்கள் மீது கோபம், குரோதம் என்பவற்றை உருவாக்கித் தமது எதிரிகளாகக் கருதி அத்தரப்பினர் மீது வன்முறை வழியில் செயற்படத் தூண்டும் மனநிலையை அவர்கள் மத்தியில் உருவாக்கி வைக்கின்றது. இவற்றுக்கெல்லாம் காரணம் சமூக ரீதியிலும், மனரீதியிலும் தாம் வலுவான அரசியல் தரப்புக்களால் அடக்கி ஒடுக்கப்படுவதாக அவர்கள் மனங்களில் படிப்படியாகப் பதிந்து வரும், மனஉணர்வுகளே ஆகும். அத்தகையதொரு ஆரோக்கியமற்ற, சமூகத்திற்குக் கேடு விளைவிக்க வல்ல மனத்தாக்கமே இன்று வடக்குக் கிழக்கு என்றல்லாது நாட்டின் ஏனைய பிரதேசங்களில் வாழ நேர்ந்துள்ள சிறார்களின் மனங்க ளில் படிப்படியாக நிலை பெற்று வருகின்றது.

இன்றைய கால கட்டத்தில் நாட்டின் வடக்குக் கிழக்குப் பகுதிகள் என்றல்லாது நாட்டின் தென் பகுதிச் சிறார்கள் மத்தியி லும்-யுத்தம் என்பது - யுத்தத்தின் காரணமான பலவகைப் பாதிப்பு என்பது அவர்களது வாழ்க்கையிலீ அச்சமாக அமைந்த விட்டுள்ளது. தற் கொலைக் குண்டுத் தாக்குதல், பிரத்தியேகப் படுகொலைகள், ஆயுதக் கலாசாரம் மற்றும் இரத்தம் சிந்த நேர்தல் போன்றவை இன்று இந்நாட்டின் இளம் சமுதாயத்தினரின் மனங்களில் அச்சம், பதற்றம், விரக்தி என்பவற்றைத் தோற்றுவிக்கும் காரணிகளாக அமைகின்றன. அதே சமயம் நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களில் இடம்பெறும் இத்தகைய குழப்பமான, பயங்கரமான சம்பவங்களை நாடளாவிய ரீதியில் வாழும் எமது இளம் எதிர்காலசந்ததியினரின் மனங்களுக்கு எடுத்துச் சென்று பதிய வைக்கும் கைங்கரியத்தை இந்நாட்டின் இலத்திரனியல் ஊடகங்கள் முன்னின்று செயற்படுத்தி வருகின்றன. அத்தகைய செயற்பாடுகள் அந்த இளம் சிறார்களின் மனங்களில்- இத்த கைய சம்பவங்களில் தொடர்புபடும் தரப்புகள் மீது எதிர்ப்புணர்வு, கோபம், குரோதம், வெறுப்பு என்பனவற்றை அந்த இளம் சமுதாயத்தின் மனங்களில் ஆழமாக நிலைபெற வழி வகுப்பனவாக அமைந்து வருகின்றன. இவை அந்த இளம் உள்ளங்களின் மத்தியில் பாரதூரமான தாக்கங்களை வளர்க்கக் காரணமாகிவிட்டுள்ளன. இந்த உலகம் அழகும் வனப்பும் மிக்கதொன்றே. உலகில் மனித வாழ்க்கை என்பது ஆனந்தம்மிக்கதே. இதனாலேயே [illegible] தொன்றாகக் கொள்[illegible] குலத் தவராகிய எம்மாலேயே இந்த உலகம் அசுத்தப்படுத்தப்படுகிறது. இந்த உலகத்தைத் தெரிந்துகொண்டே நாம் எமது செயற்பாடுகள் மூலமாக நரகமாக்கி வருகின்றோம். குறுகிய, சந்தர்ப்பவாத அரசியல் அபிலாஷைகளின் பால் நின்று செயற்பட நாம் விளைவதன் காரணமாக இந்த நாட்டின் ஒட்டுமொத்த சமுதாயத்தின் மத்தியில் பிறழ்வுகள், பேதங்கள், பிரிவினைகள் என்பனவற்றை நாமே உருவாக்கிக் கொள்கின்றோம். நாம் எமது குறுகிய அரசியல் நோக்கங்களின்றும் மாறியாக வேண்டியுள்ளது. நம் தாய் நாடு என்பது குறித்து நாம் சிந்திக்கும் அதே வேளை இந்நாட்டில் வாழும் மனித குலம் குறித்தும்சிந்திக்க வேண்டும். சிறுவர்களைப் படையில் சேர்த்துப் பயிற்று வித்து யுத்தத்தில் ஈடுபடுத் துவது என்பது மிலேச்சத்தனமானதொரு செயற்பாடாகும். எமது நாட்டின் விடுதலைப்புலிகள் அமைப்பு சிறுவர்களைப் படையில் சேர்த்து யுத்தத்தில் ஈடுபடுத்தி வருவதாகப் பலதரப்புக்கள் மத்தியிலிருந் தும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வரு கின்றன. ஆனால் சிறுவர்களைப் படையில் சேர்த் துக்கொள்ளும் இத்தகைய செயற்பாடுகள் தொடர்பாக உலகளாவியரீதியில்கவனம்செலுத்தப்பட்டு வருகிறது. அதே போல் அது நியாயமற்ற சட்டத்திற்குப் புறம்பானதொரு குற்றச் செயற்பாடாகக் கொள்ளத்தக்கது என்ற கருத்து வலுப்பெற்று வருகின்றது. இது சிறுவர்களது மனநிலையைப் பெரிய அளவில் மாற்றம் அடையச் செய்யும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டு வருகின்றது. இத்தகைய விதத்தில் சிறுவர்களைப் படையில் சேர்த்து யுத்தத்தில் ஈடுபடுத்துவது எந்த விதத்திலும் நியாயப்படுத்தி


தம்புள்ளவில்....

விட இயலாத ஒரு செயற்பாடகக் கொள்ளப்படத் தக்கதாகும்.

**எதிர்காலத்தவர் நிலைமை மோசமாக்கப்படுகின்றது**

யுத்த சூழல் நிலவும் பிரதேசங்களில் உணவில் தன்னிறைவு நிலை குறை வடையும் பின்னணி, உணவுத்தட்டுப்பாடு நிலவும் பின்னணி ஏற்பட நேர்வதால் குறிப்பிட்ட அப்பகுதிகளில் பொருள்களின் விலை உயர்வடைய நேர்வது தவிர்க்க இயலாத ஒன்றே ஆகும். இந்நாட்டைப் பொறுத்தவரை முழு நாடுமே இத்தகைய சிரம நிலைக்கு முகம்கொடுக்க நேர்ந்துள்ள மைக்கான அடிப்படைக் காரணமே பல தசாப்தங்களாகத் தொடர்ச்சியாக நாட் டில் பேரழிவை விளைவித்து வரும் யுத்தமே ஆகும். அத்த கையதொரு பின்ன ணியில் இந்நாட்டின், சிறார்களது உடற் போசாக்கின்மை நிலைமை நாளுக்கு நாள் உயர்வடைந்த செல்லும் அபாய கரநிலை நிலவி வருகிறது. சிறுவர் உடற் போசாக்கற்ற தன்மை காரணமாக சிறார்களது உடல் மட்டுமன்றி மனதும் பலவீனமடைய நேர்கிறது. உடலுக்கு உணவு அவசியமாவது போன்றே இளம் சமுதாயதினருக்கு உளவலுவும் அத்தியவாசியமானதொன்றே. யுத்த சூழ்நிலை ஒன்றின் காரணமாக அச்சம், கோபம், வெறுப்பு, விரக்தி போன்ற மனத்தாக்கங் களுக்கு உள்ளாக நேர்வதால் இச் சிறார்களது மனவலு பாதிப்புற்று அவர்கள் மனநிலை ரீதியில் பலவீன முறவும் நேர்கிறது. இன்றும் இந்நாட்டின் சிறார் களுக்கு உடலுக்கு அவசியமான தரமான, போசாக்கான உணவு கிட்டாத நிலை போன்றே, யுத்தம் காரணமான புறத்தாக்கங்களால் அவர்களது மனதுக்குத் தேவையான அமைதி, மகிழ்ச்சி, திருப்தி என்பன போன்ற வலுவும் கிட்டுவதில்லை. அவர்கள் தொடர்ச் சியாக இடப் பெயர்வுகளுக்கு உட்பட்டும் வைராக்கியம், மனக்குரூரம் மற்றும் கவலை போன்ற உணர்வுகளின் பாதிப்பால் தாக்க முற்றும் இறுதியில் நோய்வாய்ப்படவும், சில சமயங்களில் மரணத்தை எதிர்கொள்ளவும் நேர்கிறது. அத்த கைய நிலைப்பாட்டின் மத்தியில் ஏதோ ஒரு வகையில் அவர்களால் தமது வயிற்றுப் பசியைப் போக்கிக்கொள்ள முடிந்தாலும், அவர்கள் மனதளவில் பெரும் விரக்தி நிலையிலேயே வாழ நேர்கிறது. தென் பகுதிச் சிறார்கள் யுத்தத்தின் நேரடிப்பகுதிக்கு உட்படும் நிலை நிலவாத போதிலும், பொருள் களின் விலைஉயர்வு காரணமாக அவர் களின் அன்றாட உணவுத் தேவைகளில் பற்றாக்குறை [illegible] இயலாத ஒன்றே. அதன் கார[illegible] விளைவுகளும் அவர்களைப் பெருமளவில் தாக்கத்துக்கு உள்ளாக்கி வருகின்றன.

**மனவலுவிலும் கவனம் செலுத்தப்படவேண்டும்**

சிறார்களது அடிப்படை மனிதஉரிமைகள் தொடர்பாக நாம் அதிகபட்ச கவனம் செலுத்த முயன்றுவருவது உண்மையே. சிறார்களை வீட்டுப்பணியாளர்களாக அமர்த்துதல், பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்துதல் போன்ற சட்டத்திற்கு முரணான செயற்பாடுகள் குறித்து முன்னைய காலங்களை விட அண்மைக் காலமாக இந்நாட்டில் அக்கறை காட்டப்பட்டு வருவதாக கருத முடிகிறது. ஆயினும் தற்போதைய அக்கறையை விட மேலதிகமாக இவ்விடயத்தில் நாம் தீவிரமாக கவனம் செலுத்தியேயாக வேண்டியுள்ளது. இத்தகைய விடயங்களை வெவ் வேறாக வேறுபடுத்தி கையாள முயல்வதை விட, ஒட்டுமொத்தமாக இந்நாட்டின் சிறார்களது அனைத்து அடிப்படை உரிமைகளும் உரியவகையில் பாதுகாக்கப்பட வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகியுள்ளது. சிறார்களது உடல்ரீதியான வலுநிலை வளர்ச்சி தொடர்பாக அவசியமான போசாக்குக் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளமை போன்றே அவர்களது மனவலு விருத்திக்கு நாட்டில் சமாதானமும் அமைதியும் நிலவவேண்டியது அவசியமான தொன்றாகும்.

கல்வித்துறைச் செயற்பாடுகள் தொடர் பாக நோக்கும்போது சிறார்களது வெற்றி வாய்ப்புக் குறித்தே பெருமளவில் பேசப்படு கிறது. ஆயினும் இந்நாட்டில் கடைக்கொள்ளப்படும் கல்வி வழங்கல் செயற்பாடுகளை திறம்பட நிர்வகிப்பதில் பெரும் சிக்கல்கள் நிலவிவருகின்றன. அந்தவகையில் சிறுவர்களது அபிலாஷைகளை நிறைவேற்றி வைக்கும் வகையிலான, திருப்தியுறவைக்கும் விதத்திலான கற்பித்தல் நடைமுறை இந்நாட்டில் கடைப்பிடிக்கப்படுகின்றதா? என்பது கேள்விக்குரியதொன்றாகி விட்டுள்ளது. தற்போது நடைமுறைப்படுத்தப்படும் கற்பித்தல் செயற்பாடுகளில் சிறார்கள் பலவித புறக் காரணிகளால் மனத்தாக்கங்களுக்கு உள்ளாகும் நிலையே நிலவி வருகின்றது. ஐந்தாம் தரத்தில் கல்வி கற்கும் சிறார்கள் கூட, அடிக் கடி முகம் கொடுக்க நேரும் பரீட்சைகள் காரணமாக அமைதியற்றதொரு பதற்றத்துடனேயே தமது கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள நேர்ந்து வருகின்றது. இத்தகைய சிரமங்கள் மத்தியில், ஒரு தரப்பு சிறார்கள் தமது திறமையைச் சிறப்பாக வெளிப்படுத்தி வருவதையும் கூட எம்மால் அவதானிக்க முடிகிறது என்பது மகிழ்ச்சிக்குரியதொரு விடயமே. குறிப்பாக சுகாதாரத்துறைச் செயற்பாடுகள் குறித்து ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது குழந்தைகளின் மரண விகிதம் இந்நாட்டில் மிகமிகக் குறைந்த மட்டத்திலே நிலவி வருகிறதாகவும் கொள்ளமுடிகிறது. இருந்த போதிலும், ஒட்டு மொத்தத்தில் நோக்கும்போது குழந்தைகள் தொடர்பாக நிலவும் சிக்கல்கள் இந்நாட்டில் தற்போதும் கணிசமான அளவுக்கு பாதிப்பை ஏற்படுத்தி வருவதாகக் கொள்ளமுடிகிறது. குறிப்பிட்ட அனைத்துப் பிரச்சனைகளுக்கும் அடிப்படைக் காரணமாக அமைவது இந்நாட்டில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் யுத்தமே என்பதை எவ்வித சந்தேகமுமின்றி உறுதிபடக்கூறி விட முடிகிறது. இந்நாட்டில் இடம்பெறும் யுத்தம் காரணமாக சிறுவர்கள் படையில் இணைக்கப்படுவதால் யுத்தத்தால் பாதிப்புக்கு உள்ளாவது, மற்றும் சிறுவயதில் பெற்றோர்களை இழக்கும் பரிதாபநிலைக்கு உள்ளாவது மற்றும் இவை காரணமாக சிறார்கள் யுத்த மனோபாவத்துக்கு வயப்பட நேர்வது, ஆகிய பாரதூரமான பாதிப்புகள் காரணமாக சிறார்களது இளவயது வாழ்க்கை கைநழுவிப் போவது உண்மையில் துரதிருஷ்டவசமான தொன்றேயாகும். அந்தவகையில் நாட்டின் சிறார்களது இளமைக்கால வாழ்க்கை மகிழ்ச் சியும், அமைதியும், உற்சாகமும் கொண்டதாக அமைய வழிவகுப்பது- அத்தகைய சிறார்களது இளமைக்கால வாழ்க்கைக்கு மதிப்பளித்து, கௌரவித்து உதவி அவர்களை இந்நாட்டின் எதிர்கால நற்பிரசைகளாக உருவாக்கி வைக்கும் விதத்தில் செயற்பட வேண்டியது இந்நாட்டின் ஒட்டுமொத்த சமுதாயங்களது பொறுப்பும் கடமையுமாகும். ★

சிங்களத்தில்: திலீஷா அபேசுந்தர

தமிழில்: ராஜா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மக்களின் வாழும் சூழல், நோய்கள் மாறிய போதிலும் என்றும் பயன்தருபவை எமது ஆயுள்வேத மருந்துகளே

**ஈழத்தில் மிக நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்ட ஆயுள்வேத வைத்தியப் பரம்பரையின் ஏழாவது பரம்பரையைச் சேர்ந்தவராக வைத்தியத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர் வைத்தியகலாநிதி றோ.மகேஸ்வரன். ஆங்கில மருந்துகளையோ, மருத்துவ உபகரணங்களையோ நாடாமல் முற்றிலும் தூய்மையான ஆயுள்வேத மருந்துகளையே பயன்படுத்தும் வைத்தியர்களில் ஒருவர். அவர் தந்தையாரின் நினைவாக ஆரம்பிக்கப்பட்ட பசுபதி ஆயுள்வேத வைத்தியசாலை மூலம் கடந்த 37 வருடங்களாக மருத்துவ சேவை ஆற்றிக்கொண்டிருப்பவர். மிக இளம் வயதிலேயே கல்வியைக் கைவிட்டு வெளிநாடுகளுக்குப் பொருள் தேடச் செல்பவர்கள் மத்தியில், தமது 70ஆவது வயதிலும் யாழ்.பல்கலைக்கழகத்திற் சைவசித்தாந்தத் துறையில் முதுகலைமாணிப் பட்டப்படிப்பை மேற்கொண்டு வருபவர். அவரை அவரது தாவடி இல்லத்திலே சந்தித்தோம்.**

*கேள்வி:* ஆயுள்வேத மருத்துவத் துறையில் உங்களுக்கு எவ்வாறு ஆர்வம் ஏற்பட்டது?

*பதில்:* எனது ஆர்வம் பரம்பரை வழியாக வந்தது. நந்தீஸ்வரர் என்ற புகழ்பெற்ற வைத்தியரால் ஆரம்பிக்கப்பட்டு நாகப்பர், சுப்பிரமணியம், ஆறுமுகம் பிள்ளை, நாகலிங்கம்பிள்ளை எனது தந்தையார் பூரணம் பசுபதிப்பிள்ளை எனத் தொடர்ந்து வந்த பரம்பரையின் 7ஆவது உறுப்பினர் நான்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் தாவரவியற்துறையில் விஞ்ஞானப் பட்டதாரியான என்னை, 'எனது அடியை நீ பின்பற்ற வேண்டும்' என்று தந்தையார் கேட்டுக்கொண்டார். தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை, என்பதற்கிணங்கத் தந்தையின் கட்டளையை வேதவாக்காகக் கொண்டேன்.

மேலும் அம்பலவாணப் பரிகாரியார், காரைக்கால் மணியத்தார், குளப்பிட்டி நடராஜாப் பரிகாரியார் முதலிய பெயர்போன சித்த ஆயுள்வேத பண்டிதர் பலரது வழிகாட்டல்களும் எனக்கு ஆர்வத்தை ஏற்படுத்தின.

*கேள்வி:* உங்களது தந்தையார் எவ்வாறு உங்களைப் படிப்படியாக மருத்துவத் துறையில் வளர்த்தெடுத்தார்?

*பதில்:* சிறுவயதில் இருந்தே மருந்துப் பொருள்களை வாங்கச் செல்லல், மருந்து தயாரிக்கும் போது கூட்டிச் செல்லல், மருந்து தயாரிக்கும் போது பொருள்களை எடுத்துக் கொடுத்தல் என என்னை ஈடுபடுத்தினார். என்னை ஆயுள்வேதக் கல்லூரியிலே சேர்த்துத் தனது இலட்சியத்தை நிறைவேற்றிய பின்னரே (1964) அவர் மரணமானார்.

**பத்திரகாளி மந்திரத்தின் தார்ப்பரியம்**

*கேள்வி:* நீங்கள் மருத்துவத்துறைக் கல்வி நிறுவனங்களில் பெற்ற பயிற்சிகள் பற்றிக் கூறுங்களேன்?

*பதில்:* கொழும்பு நாவின்ன ஆயுள்வேத ஆய்வுநிறுவனத்திலும் நான் கல்வி கற்றேன். இந்நிறுவனத்தின் தலைவராக இருந்த ஆர்.ஆர். பட்டாக் அவர்களே. வாதம், கிரந்தி என்பன பற்றிய அடிப்படைத் தத்துவங்களை எனக்கு உணர்த்தினார்.

நான் முதலாம் வருடத்தில் கற்ற வேளையில் விரிவுரையாற்ற வந்த பாரம்பரிய முறிவு நெறிவு வைத்தியர் ஒருவர் தம்மைத் தனியே வந்து சந்திக்கச் சொன்னார். எனக்கு பத்திரகாளியம்மனின் மந்திரத்தைச் சொல்லி ''இது உனக்குப் பல சித்துக்களைத் தரும் இதை உச்சாடனம் செய்'' என்று கூறினார். நான் இன்றும் உச்சாடனம் செய்யும் இந்த மந்திரமே பல நோய்களைத் தீர்க்க எனக்குத் துணை நின்றது.

*கேள்வி:* ஆயுர்வேதம், ஆயுள்வேதம் என்றும் இரண்டு சொற்கள் உங்கள் மருத்துவத்துறையைக் குறிக்கப்பயன்படுகின்றன. இவற்றுள் சரியானது எது?

பதில்: ஆயுள்+வேதம் என்ற இரண்டு வட சொற்களின் புணர்ச்சியாலே தான் இந்த இரு சொற்களும் உருவாகின. இவற்றுள் ஆயுள்வேதம் என்பதே சரியானதாகும். ''உயிர் வாழ்வதற்கான விஞ்ஞானம்'' என்பது இதன் பொருள் ''ஆய்+உள்+வேதம்'' என்று பிரித்தால் அது உனக்குள் இருக்கும் மெய்ப் பொருளை ஆராய்ந்து கண்டு கொள். அதுஎல்லா வகையான சித்துகளையும் கொடுக்கும் என்றும் பொருள் கொள்ளலாம்.

சித்த வைத்தியம் என்ற தொடரையும் கேள்விப்பட்டிருப்பீர்கள். அட்டமா சித்திகளும் கைவந்தவர்கள். தமது சித்துகள் மூலம் வைத்தியம் செய்யும் போதே இத் தொடர் பொருத்தமானதாக அமையும்.

*கேள்வி:* உங்களது வைத்தியத்துக்கு எத்தகைய நூல்கள் உதவிசெய்கின்றன?

*பதில்:* ஈழத்தில் ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் இயற்றப்பட்ட பரராசசேகரம், செகராசசேகரம் முதலிய நூல்களும் இருபாலைச் செட்டியார் வைத்திய விளக்கம், சொக்கநாதர் தன்வந்திரியம், இரத்தினாவளி முதலிய நூல்களும் துணை செய்கின்றன. பரம்பரையாக எனக்குக் கிடைத்த ஏடுகளிலிருந்தும், முன்னோர் பயன்படுத்திய கைமருந்துகளிலிருந்தும் மருத்துவமுறைகளை அறிந்துகொள்கிறேன்.

**ஆயுள்வேதத்தின் சிறப்பு**

*கேள்வி:* ஆயுள் வேதத்திற்கும், ஆங்கில மருத்துவமுறைக்கும் இடையேயான சாதக - பாதக அம்சங்கள் எவை?

*பதில்:* இன்றைய நவீன உலகிற்கு ஆங்கில மருத்துவமும் தேவையாக இருப்பதால் அதனை நான் கண்டிக்க விரும்பவில்லை. ஆயுள்வேதத்தின் சிறப்புகளை மட்டும் கூறுகிறேன். எந்த நோய்க்கும் மருந்துகள் உள்ள ஒரு பரிபூரணமான வைத்தியம் இதுவாகும். நவீன மருத்துவத்தில் மருந்துகளுக்கு எதிராக நோய்க்கிருமிகள் விரைவில் இயைபாக்கம் பெறுவதால், புதிது புதிதாக மருந்துகளைக் கண்டுபிடிக்க வேண்டியுள்ளது. ஆயுள்வேதத்தில் எத்தனையோ நூற்றாண்டுக்ளுக்கு முன்னர் கூறப்பட்ட மருந்துகள் - நோய்கள், பழக்க வழக்கங்கள், வாழும் சூழல் என்பன மாற்றம் அடைந்த போதிலும் இன்றும் என்றும் பயன்தருவது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.



**ஆயுள்வேதம் குன்றிப் போயுள்ளமைக் குக் கூறப்படும் பொதுவான காரணம் ஏற்புடையதல்ல என்கிறார் வைத்திய கலாநிதி றோ.மகேஸ்வரன்**

கேள்வி: எக்ஸ்-றே, ஸ்கான் என்று நவீன விஞ்ஞான உபகரணங்கள் மூலம் ஆங்கில மருத்துவம் நோய்களை இனங்காண்கிறது நீங்கள் எவ்வாறு அறிந்துகொள்கிறீர்கள்?

*பதில்:* இக்கருவிகளைக் கண்பிடித்தவர்கள் ஆங்கில மருத்துவர்கள் அல்லர். விஞ்ஞானிகள். எனவே ஆயுள்வேத வைத்தியர்களும் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம். எம்மிடம் விழி, நா, சலம், நாடி முதலிய அட்டவிதப் பரிசோதனை முறைகள் உள்ளன. இவற்றுள் நாடிப்பரிசோதனையே முக்கியமானதாகும். நாடித்துடிப்பைச் சரியாகப் பரிசோதிப்பதன் மூலம் ஒருவரது நோயின் வகை, எத்தகைய விடம் தீண்டியுள்ளது; கர்ப்பம் தரித்துள்ளாரா; மரணம் எப்போது நிகழும்; என்பனவற்றையெல்லாம் மிகச்சரியாகக் கூற முடியும்.

**ஆயுள் வேதம் அருகிப் போனமைக்கு...**

*கேள்வி:* ஆயுள்வேதத்தில் பல அரிய மருத்துவ முறைகள் அருகிப் போனமைக்கு, மருத்துவ முறைகளைத் தனது பிள்ளைக்குக் கூட தாம் இனிப் பிழைக்க மாட்டோம் என்ற நிலை வந்த பின்னர் தான் கூறுவது. மருத்துவ ஏடுகளைப் பிறர் பயன்படுத்த முடியாத படி தன்னோடு சேர்த்து எரிக்கும் படி கூறுவது போன்ற இரகசியம் பேணும் தன்மைதான் காரணம் என்று கூறப்படுகிறது. இதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?

*பதில்:* இது மிகவும் தவறான கருத்தாகும். ஆயுள்வேதம் ஆயுள்மறை என்றும் சொல்லப்படும். இங்கு மறைப் பொருளாய் இருக்கும் மருத்துவ உண்மைகளை அறிந்து கொள்ளும் பக்குவம் மாணவருக்கு வர வேண்டும். ஈடுபாடுடைய மாணவன் ஆசிரியரின் ஆசியுடன் தான் அவற்றை அறியலாம். இத்தகைய தன்மைகளற்ற மாணவருக்கு வைத்தியர் சொல்லாது விட்டிருக்கலாம். வசியம், கற்பத் தடை, மரணத்தை ஏற்படுத்தும் மருந்துகள் என்பவற்றைக் கூறும் ஏடுகள் தீயவரின் கையிற் சேர்ந்தால், அது சமூகத்துக்கே தீமையை ஏற்படுத்தும். எனவே தான் தன்பிள்ளையிடம் தீய குணங்கள் காணப்பட்ட நிலையில் தந்தை அவற்றை எரித்திருக்கலாம். எனது தந்தையாரிடம் சுதுமலை அண்ணாமலைப்பரிகாரி, நயினாதீவுப் பரிகாரி போன்றவர்கள் வந்து தங்கியிருந்து புதிய மருத்துவ முறைகளைக் கற்றுச் சென்றதை நான் பார்த்திருக்கிறேன்.

*கேள்வி:* ஏழாவது பரம்பரையாகத் தொடர்ந்த இந்த மருத்துவத் தொழில் உங்கள் பின் எட்டாவது பரம்பரையாலும் மேற் கொள்ளப்படுமா?

*பதில்:* ஆம் எனது மகள் வைத்திய கலாநிதி திருமதி புவனலோஜினி ஜீவானந்தனும் மருமகன் வைத்திய கலாநிதி ஜீவானந்தனும் லங்கா ஆயுள் வேதக் கல்லூரியில் பயின்று பட்டம் பெற்று இப்போதே இத் தொழிலைச் சிறப்பாகச் செய்து வருகின்றனர்.

*கேள்வி:* நீங்கள் மருத்துவத்துறையில் வகித்த பதவிகள் தொடர்பாகக் கூறுங்கள்.

*பதில்:* நான் கைதடி சித்த வைத்தியக் கல்லூரியில் வருகை நிலை விரிவுரையாளராகவும் லங்கா ஆயுள் வேதக் கல்லூரி அதிபராகவும் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் சுதேச மருத்துவத்துறையின் முதலாவது மாகாணப் பணிப்பாளராகவும் பணியாற்றியுள்ளேன். தற்போது யாழ். பல்கலைக் கழகப் பேரவை உறுப்பினராகவும் இருக்கிறேன். இலங்கை அரசு எனது சேவையைப் பாராட்டித் தங்கப் பதக்கமும் ''சகஸ்ரா அபிஷேகச் சூரி'' என்னும் பட்டமும் தந்துள்ளது. ✱

செவ்வி கண்டவர்:-
ம.பா.மகாலிங்கசிவம்

# ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் பாகிஸ்தான் சுற்றுப்பயணம் ரத்தாகுமா?

மார்ச் ஏப்ரல் மாதங்களில் பாகிஸ்தானில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டிகளை நடத்துவதற்கான இடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

கராச்சி உட்பட நான்கு நகரங்களில் போட்டி நடத்துவதற்கான ஏற்பாடுகளை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை மேற்கொண்டுள்ளது.

பாகிஸ்தானில் அண்மைக் காலமாக தொடர்ந்து தீவிரவாதமும் கலவர சம்பவங்களும் அதிகரித்து வருவதையடுத்து, ஆஸ்திரேலியா தனது சுற்றுப்பயணத் திட்டத்தை மறுபரிசீலனை செய்தது. அதற்கேற்ப பாகிஸ்தான் முன்னாள் பிரதமர பெனாசிர் பூட்டோ கராச்சி நகரில் படுகொலை செய்யப்பட்டார். இதைத் தொடர்ந்து நாடு முழுவதும் கலவரம் பரவியது. இந்நிலையில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை தனது பயணம் குறித்து மறுபரிசீலனை செய்தது.

மேலும், போட்டி நடைபெறும் இடங்களை மாற்றுவது, பாதுகாப்பை பலப்படுத்துவது உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்தது. ஆனால், பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிப்பதுடன் போட்டி நடைபெறும் இடங்களை எக்காரணம் கொண்டும் மாற்ற இயலாது என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துவிட்டது.

இந்நிலையில், பாகிஸ்தானில் நடைபெறவுள்ள மூன்று டெஸ்ட் போட்டிகள், ஒரு 20 ஓவர் போட்டி, ஐந்து ஒருநாள் போட்டிகள் குறித்த அறிவிப்பை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

லாகூர், முல்தான், பைசலாபாத் மற்றும் கராச்சி ஆகிய நகரங்களில் போட்டி நடத்தப்படும் என்று அறிவித்துள்ளது.

"எங்கள் நிலையில் மாற்றமில்லை. அவுஸ்திரேலிய வீரர்கள் திட்டமிட்டபடி இங்கு வந்து விளையாடலாம். 1998 இற்குப் பின் அவுஸ்திரேலிய வீரர்கள் பாகிஸ்தானில் விளையாடவில்லை. அவர்களின் வருகைக்காகவும் விளையாட்டைப் பார்ப்பதற்காகவும் பாகிஸ்தான் ரசிகர்கள் ஆவலோடிருக்கிறார்கள்".

பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் நசீம் அஸ்ரப் டுபாயிலிருந்து பி.ரி.ஐ. செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்துள்ளார்.

பிற நாட்டுத் தலைவர்கள் பாகிஸ்தானுக்கு வரும்போது அளிக்கப்படும் அதே பாதுகாப்பு ஆஸ்திரேலிய வீரர்களுக்கும் அளிக்கப்படும். அதற்கான முழுப் பொறுப்பும் எங்களை மட்டுமே சார்ந்தது என்றும் அவர் தெரிவித்தார். பாகிஸ்தான் வரும் ஆஸ்திரேலிய் வீரர்களுக்காக இங்கிலாந்தில் உள்ள லொயட்ஸ் காப்பீட்டு நிறுவனத்தில் 120 கோடி ரூபாவுக்கு காப்பீடு செய்ய பாகிஸ்தான் கிரிக்கெட் சபை திட்டமிட்டிருந்தது.



அதேசமயம் ஆஸ்திரேலிய அணி பாகிஸ்தான் வருவதைத் தவிர்த்தால் 24 கோடி ரூபா நஷ்டஈடு கோரவும் திட்டமிட்டிருந்தது.

**நடுவர்களை தேர்வு செய்வதற்கு குழு**

சர்வதேச போட்டிக்கான நடுவர்களைத் தேர்வு செய்வதற்காக குழுவொன்று நியமிக்கப்படுவதாக சர்வதேச கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் நடுவர்களாகப் பணியாற்ற முன்னணி நடுவர்களைக் கொண்ட பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை தேர்வு செய்து வெளியிட்டு வருகிறது.

இந்நிலையில், இந்தக் குழுவில் இடம்பெறவுள்ள நடுவர்களை தேர்வு செய்வதற்காக தனியே குழு ஒன்றை அமைக்க சர்வதேச கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது.

இதுவரை சர்வதேச கிரிக்கெட் சபையே நடுவர்களைத் தேர்வு செய்து வந்தது. ஆனால், சிட்னி டெஸ்டின்போது ஸ்ரீவ் பக்னர் அளித்த முடிவுகள் பெரும சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில் நடுவர் களைத் தேர்வு செய்ய தனிக்குழுவை அமைப்பது பொருத்தமானது என சர்வதேச கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது.

புதிய குழுவில் ஸ்ரீவ் பக்னர் மற்றும் சர்ச்சைக்குரிய டரல் ஹேர் ஆகியோர் பரிசீலிக்கப் படுவார்களா என்று தெரியவில்லை.

# நடுவர்களைத் தேர்வு செய்யக் குழு அமைக்கிறது ஐ.சி.சி.

**இந்திய கிரிக்கெட் லீக்கில் புதிதாக 7 பாகிஸ்தான் வீரர்கள்**

இந்திய கிரிக்கெட் லீக்கில் 7 பாகிஸ்தான் வீரர்கள் இணைகிறார்கள்.

இந்திய கிரிக்கெட் லீக் சார்பில் கடந்த ஆண்டு 20 ஓவர் போட்டி நடத்தப்பட்டது. இன்சமாம், லாரா, அத்தப்பத்து உட்பட புகழ்பெற்ற வீரர்கள் இதில் பங்கேற்றனர். இரண்டாவது 20 ஓவர் போட்டிகள் அக்டோபர் மாதம் நடைபெறவுள்ளன. இந்தப் போட்டிக்காக சர்வதேச வீரர்களை சேர்க் கும் பணியை இந் திய கிரிக்கெட் லீக் தொடங்கி யுள்ளது.



இந்திய கிரிக்கெட் லீக்கின் பாகிஸ்தான் பிரதிநிதியாக பாகிஸ்தான் முன்னாள் அணித் தலைவர் மொயின்கான் செயற்பட்டு வருகிறார். அவர், இந்தியன் கிரிக்கெட் லீக்கிற்காக விளையாடுவது தொடர்பாக 7 பாகிஸ்தான் வீரர்களிடம் பேச்சுவார்த்தை நடத்திவருகிறார்.

இதில் முஸ்டாக் அகமது, சக்லைன் முஸ்டாக் ஆகியோர் 2003 ஆம் ஆண்டுக்குப் பின் பாகிஸ்தான் அணியில் இடம்பெறவில்லை. இவர்கள் தற்போது இங்கிலாந்தில் உள்ள கவுண்டிப் போட்டியில் ஆடி வருகிறார்கள். இவர்களைத் தவிர நவீத் லத்தீப், ஹசன் ராஜா, முகமது ஹபீஸ், ஹுமாயூன் பர்கத், இம்ரான் நசீர் ஆகியோரிடமும் பேச்சுவார்த்தை நடப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதில் இம்ரான் நசீர் மற்றும் ஹபீஸ் ஆகியோர் பாகிஸ்தான் அணிக்காக 20 ஓவர் உலகக் கிண்ணப் போட்டியில் ஆடியவர்கள். அதன் பின் அவர்கள் ஒரு நாள் போட்டிகளிலும் விளையாடியிருக்கிறார்கள். ஹசன், லத்தீப் உள்ளூர் போட்டிகளில் சிறப்பாக விளையாடி வருகின்றனர். ஆனால், பாகிஸ்தான் அணிக்காக வாய்ப்புக் கிடைக்கவில்லை. எனவே, இவர்கள் இந்தியன் கிரிக்கெட் லீக்கில் இணைகிறார்கள். இந்தியன் கிரிக்கெட் லீக்கில் விளையாடும் வீரர்களுக்குப் பாகிஸ்தான் அணியில் இடமளிக்கப்படாது என்று ஏற்கனவே பாகிஸ்தான் கிரிக் கெட்சபை எச்சரித் திருப்பதும் குறிப்பிடத்தக்கது. ✱

டிலான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரம், ஜனநாயகம் என்பவைகளின் அர்த்தம்தான் என்ன?

''சுதந்திரம்'' உலகெங்கிலும் அனைவராலும் உச்சரிக்கப்படும் வார்த்தை.

பேச்சுச் சுதந்திரம், எழுத்துச்சுதந்திரம், மதவழிபாட்டுச் சுதந்திரம், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம் இவ்வாறு பலவகையான சுதந்திரங்கள் சுதந்திரம் என்ற அடைமொழியுடன் பேசப்படுகின்றன. உண்மையில் சுதந்திரம் என்றால் என்ன? சுதந்திரம் என்பதன் அர்த்தம் என்ன? சுதந்திரத்திற்கு அடுத்தபடியாகப் பேசப்படும் வார்த்தை ஜனநாயகம். ஜனநாயகம் என்றால் என்ன மக்கள் தம்மைத் தாமே ஆட்சி செய்வது தான் ஜனநாயகம் என்று கூறப்படுகிறது. ஒரு ஜனநாயக நாட்டில் தேர்தல் மூலம் மக்கள் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படுகின்றனர். தேர்தல் மூலம் மக்கள் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படுவதை எவ்வாறு மக்களாட்சி என்று கூறலாம்.

தேர்தல் மூலம் மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படும்போது பெரும்பான்மை (இங்கு பெரும்பான்மை என்பது இனத்தைக் குறிப்பதாக அமையாது) ஆதரவு பெற்ற கட்சிகள் ஆட்சிப் பீடம் ஏறுகின்றன. இவர்கள் சட்டங்களை இயற்றி அமுல்படுத்தும்போது இவர்களது சட்டங்களையோ திட்டங்களையோ ஏற்றுக்கொள்ள விருப்பமில்லாதவர்களுக்கும் ''எதிர்க் கருத்துக் கொண்டவர்களும்'' அரசாங்கம் வகுக்கும் சட்டதிட்டங்களை ஏற்குமாறு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். கட்டாயப்படுத்துகின்றனர்.

### விருப்பத்துக்கு மாறாக ஒன்றைத் திணிப்பது ஜனநாயகமா?

இவ்வாறு ஒரு கருத்தை விடயத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கும் ஒருவர்மீது அவரது விருப்பமின்றி தமது கருத்துக்களைத் திணிப்பதற்குப் பெயர்தான் ஜனநாயகம் அல்லது சுதந்திரம்.

கல்விச்சுதந்திரம், அடிப்படைச்சுதந்திரம், கல்வி கற்கும் உரிமை, அடிப்படை உரிமை ஒரு நபருக்கு கல்வி மறுக்கப்படுவது அடிப்படை மனித உரிமை மீறல். ஆனால் கட்டாயக்கல்வி என்ற பெயரில் கல்வியைத் திணிப்பதும் அடிப்படை மனிதஉரிமைமீறலே. ஆஸ்திரேலிய பழங்குடியின மக்களுக்கு ஆஸ்திரேலிய அரசு கட்டாயக்கல்வி அளிக்கிறது. ஆஸ்திரேலிய ஆதிவாசிகளை பொலிஸார் பிடித்து கொற கொறவென இழுத்து வந்து பாடசாலையில் அமர்த்துகின்றனர்.

இன்னொரு வகையில் பார்க்கப்போனால் தாம் விரும்பிய நேரம் விரும்பியதை வேட்டையாடி, விரும்பியதை விரும்பிய நேரம் உண்டு, விரும்பிய நேரம் உறங்கி தாம் நினைத்தவாறு காடுகளில் உல்லாசமாகத் திரிந்த மக்களின் அடிப்படை உரிமைகள், சுதந்திரம் யாவும் பறிக்கப்படுகின்றன. தாம் விரும்பிய நேரம் உண்டு, உறங்கி, ஆனந்தமாகப் பொழுதைக் கழித்தவர்கள் கட்டாயக் கல்வி என்ற பெயரில் கல்வி கற்றுவிட்டுப் பின்னர் வேலை தேடி அலைய வேண்டுமா? இன்று உலகம் முழுவதும் வேலையில்லாத் திண்டாட்டம் பெரும் பிரச்சினையாகவுள்ளது.

பிரான்ஸில் பத்திரிகைத் துறையில் பட்டப் படிப்பை முடித்த 2000 பேர் வேலையில்லாமலிருக்கிறார்கள். கல்விச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்போதும் அப்போது பதவி வகிக்கும் கட்சிகள் தாம் நினைத்ததை மக்கள் மீது திணிக்கின்றன. இலங்கையில் ஒவ்வொரு அரசாங்கமும் தமது பதவிக்காலத்தில் ஒவ்வொருவிதமான கல்வித்திட்டத்தை அறிமுகம் செய்வது இதற்கு நல்ல உதாரணம்.

### மத சுதந்திரம்

அடுத்ததாக மத சுதந்திரம் ஒவ்வொரு தனி மனிதனும் தான் விரும்பிய மதத்தைப் பின்பற்றுவதற்கு ஒரு ஜனநாயக நாட்டில் இடமுண்டு. ஆனால் எந்த ஒரு மதத்தையும் பின்பற்றாமல் விடுவதற்கு இலங்கை போன்ற நாடுகளில் சுதந்திரம் இருக்கிறதா தெரியவில்லை. நாஸ்திகனான சிங்கள நண்பர் ஒருவர் தனது பிள்ளையை பாடசாலையில் சேர்ப்பதற்குக் கொண்டு சென்றபோது விண்ணப்பப் படிவத்தில் சமயம் என்ற கூட்டில் எதையுமே தெரிவு செய்யவில்லை. பாடசாலை அதிபர் நீங்கள் என்ன சமயம் என்றார். பிள்ளையின் தந்தை எனக்கு கடவுள் நம்பிக்கை இல்லை. நான் எந்த ஒரு சமயத்தையும் பின்பற்றுவதில்லை என்றார். நீங்கள் அப்படிச் சொல்லமுடியாது. ஏதாவது ஒரு கூட்டுக்குள் புள்ளடியிட்டால்தான் உங்கள் பிள்ளையை பாடசாலையில் சேர்க்கலாம் என்றார் அதிபர். உடனே பிள்ளையின் தந்தை விண்ணப்பப் படிவத்தை வாங்கி பௌத்தம் என்ற கூட்டுக்குள் புள்ளடியிட்டு விட்டுக் கொடுத்தார்.

தெற்காசிய நாடுகளில் ஜனநாயகம் என்ற பெயரில் பெரும்பான்மைச் சர்வாதிகாரமே நடைபெறுகிறது. பெரும்பான்மைச் சர்வாதிகாரத்திற்குப் பெயர் சுதந்திரமா? இலங்கையின் 60ஆவது சுதந்திர தினம் கொண்டாடப்பட்டுள்ளது. இலங்கை பிரித்தானியரிடமிருந்து விடுதலையடைந்து 60 ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ளன.

கடந்த காலங்களில் எதுவித குற்றங்களும் இன்றி, எந்த நீதிமன்றத்திலும் நிறுத்தப்படாமல், இரு தடவைகள் நாட்டை ஆட்சி செய்த இரண்டு தலைவர்களின் குடியுரிமை பறிக்கப்பட்ட சம்பவங்களும் இலங்கை வரலாற்றில் இடம்பெற்றிருக்கின்றன.

இலங்கை ஒரு இறைமையுள்ள ஜனநாயக சோஷலிசக் குடியரசு. இலங்கைச் சட்டப்படி தேசியக்கொடியை அவமதிப்பது தண்டனைக்குரிய குற்றம். சினிமாத் தியேட்டரில் தேசியக் கொடி காட்டப்பட்டபோது அவமதித்த குற்றத்திற்காக சிங்களவர்கள் கூட நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றிருக்கின்றன.

தனக்குச் சுதந்திரம் இல்லையென்று கருதும் ஓர் இலங்கைப் பிரஜை மீது சிங்களவனோ, தமிழனோ, முஸ்லிமோ சுதந்திர தினம் கொண்டாடுமாறு கேட்பது சுதந்திரமா?

### பெரும்பான்மையோர் தம் கருத்தை ஏனையோர் மீது திணிப்பது ஜனநாயகம் ஆகுமா?

இலங்கை சுதந்திரமடைந்தபோது தாம் அடிமைகளாக்கப்பட்டு விட்டுதாக தமிழர்கள் கூறுகின்றனர். பெரும்பான்மைச் சர்வாதிகாரம் ஆண்டு தோறும் சுதந்திரதினம் கொண்டாடப்படுகிறது. (இங்கு பெரும்பான்மை என்பது இனத்தைக் குறிக்கவில்லை) இலங்கையில் உள்ள அனைத்துக் கட்சிகளும் தமிழ், முஸ்லிம் கட்சிகள் உட்பட தொண்டர் படை அல்லது ஆதரவாளர்கள் என்ற பெயரில் அடியாட்களை வைத்திருக்கின்றன. இவர்கள் தமது இனத்தைச் சேர்ந்த தமக்கு எதிரானவர்களுடன் தமது நலன்களுக்குத் தடையாக உள்ளவர்களுடன், தமது கருத்துக்களை ஏற்க மறுப்பவர்கள் மீது (ஏனைய இனத்தவர்கள் மீது அல்ல) வன்முறையிலீடுபடுகின்றனர். எதனைச் செய்யவும் தயங்குவதில்லை.

இலங்கை பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் இருந்தபோது சிங்கள, முஸ்லிம் கலவரம் ஏற்பட்டபோது பிரிட்டனுக்குச் சென்று முறையிட்டார் சேர்.பொன்.இராமநாதன். ஆனால், ஜே.ஆர், சிறிமா போன்றோரின் குடியுரிமைகள் பறிக்கப்பட்டபோது யாராலும் யாரிடமும் முறையிட முடியவில்லை. காரணம் இலங்கை ஒரு சுதந்திர நாடு. பெரும்பான்மைச் சர்வாதிகாரம் அதிகாரத்தில் இருக்கும்வரை சுதந்திரம் பற்றிப் பேசுவதில் அர்த்தமில்லை. சுதந்திரத்தை ஒருவர் மீது திணிப்பதற்குப் பெயர் சுதந்திரமா? ★

—ந.பரமேஸ்வரன்—

## ஒருநாளுக்கு 34 தடவைகள் கண்ணாடி பார்க்கும் பிரி.பெண்கள்



அழகு சாதனங்கள் போடவும், தம்முடைய அழகின் நிலையை உடனுக்கு உடன் அவதானிக்கவும் கண்ணாடி பார்க்கும் பெண்களின் பழக்கம் குறித்த ஆய்வொன்று நடத்தப்பட்டது. இதன்படி சராசரியாக பிரிட்டன் பெண்கள் ஒரு நாளைக்கு சராசரியாக 34 தடவைகள் தம் முகங்களை கண்ணாடியில் பார்க்கிறார்கள். ஆண்கள் 27 தடவைகள் கண்ணாடியில் தம் முகங்களைப் பார்க்கிறார்கள். தம்மோடு சிறிய கண்ணாடியை எடுத்துச் சென்று முகம் பார்க்கும் பழக்கம் பெண்களிடையே தொடர்ந்து அதிகரித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

## சூரிய மண்டலத்தின் வயது



சூரிய மண்டலம் 456 கோடியே 80 லட்சம் வருடம் பழமை வாய்ந் தது என அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி அறிஞர் பிரடறிக் மொய்னியர் மற்றும் உதவிப் பேராசிரியர் டேவிஸ் குயிங் சுயின் ஆகியோர் கர்போனசியஸ் சாடிரைற் என்ற எரிக் கல்லை ஆராய்ச்சி செய்து சூரியமண்டலத்தின் வயதைக் கணித்துள்ளனர்.

கர்போனசியஸ் சாடிரைற் என்ற எரிகல்லின் வயது 456 கோடியே 80 லட்சம் வருடம் என கணிப்பிடப்பட்டுள்ளது. இந்த எரிகல்லை வைத்து சூரிய மண்டலத்தின் வயதும் 456 கோடியே 80 லட்சம் வருடம் என முடிவுக்கு வந்துள்ளனர்.

## காதல் வலிக்கு விடுமுறை





காதல் வலியால் அவதிப்படும் நெஞ்சங்களின் காயத்தை ஆற்றிக்கொள்ள உதவும் வகையில் ஜப்பானிய நிறுவனம் ஒன்று இதயவலி விடுமுறையை வழங்கி வருகிறதாம்.

அதாவது காதல் தோல்வியால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் அந்த அதிர்ச்சியிலிருந்து மீளும் வரை விடுமுறை எடுத்துக் கொள்ளலாமாம்.

டோக்கியோவை சேர்ந்த ஹைறம் அன்ட் கம்பனி இப்படி தோல்வி அடைந்த காதலர்களுக்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறையை வழங்குகிறது.

அண்மையில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பு ஒன்று காதல் விவகாரத்தில் ஈடுபடுபவர்களின் வேலைத் திறன் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கிறது. அந்த வகையில் பார்க்கும் போது காதல் தோல்வியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விடுமுறை அளிப்பது சரியான செயலாகவே தோன்றுகிறது. இந்த டோக்கியோ கம்பனி தனது ஊழியர்களுக்கு ஆண்டுக்கு இருமுறை விடுமுறை வேறு அளித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## கீழ்வாத நோயை ஏற்படுத்தும் சீனி அடங்கிய பானங்கள்




சீனியடங்கிய பானங்கள் அருந்துவதால், குறிப்பாக ஆண்களுக்கு கீழ்வாத நோய் ஏற்படலாம் என பிரித்தானிய மருத்துவ அறிக்கை தெரிவிக்கின்றது.

கீழ்வாதம் எனப்படுவது முழங்கால் மூட்டுக்களில் ஏற்படும் ஒரு நோய். கீழ்வாதம் முழங்காலில் வீக்கத்தை ஏற்படுத்துவதோடு, தாங்கவொண்ணா வலியையும் ஏற்படுத்தும். சாதாரணமாக 40 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கு இந்நோய் ஏற்படுவது வழக்கம். இந்நோய் யூரிக் அமிலம் சிறுநீரில் அதிகரிப்பதால் ஏற்படுகின்றது. யூரிக் அமிலம் சிறுநீரில் அதிகரித்து அவை சிறு துணிக்கைகளாகி மூட்டுக்களைச் சுற்றிப் படரும்.

கடந்த இரண்டுதசாப்த காலங்களை விட தற்போது அமெரிக்காவில் கீழ்வாத நோயால் பாதிக்கப்படுபவர்கள் அதிகரித்துள்ளனர். அதற்கான முதன்மைக் காரணம் குளிர்பானங்களை அருந்துவோரின் தொகை அதிகரித்திருப்பதேயாகும்.

காலம் காலமாக கீழ்வாத நோயாளர்கள் இறைச்சி, ஈரல், சிறுநீரகம், மதுபானங்கள் என்பவற்றையே உட்கொள்ளக் கூடாது என மருத்துவர்களால் ஆலோசனை வழங்கப்பட்டு வந்தது. ஆனால் தற்பொழுது இப்பட்டியலில் சீனியும் இணைக்கப்பட்டுள்ளது.

## இருதயநோயைத் தடுக்கும் கோழி முட்டை



இருதயநோயைத் தடுக்கும் கோழி முட்டையை தமிழகத்தைச் சேர்ந்த கோழிப் பண்ணை நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது.

தமிழகம் கோவை என்ற இடத்தில் அமைந்துள்ள சுகுணா பவுல்ட்ரி பாம் என்ற நிறுவனம் சுகுணா கார்ட் என்ற ஒரு வகை கோழி முட்டையையும் சுகுணா ஆக்ரிவ் என்ற மற்றொரு கோழி முட்டையையும் அறிமுகம் செய்து வைத்துள்ளது.

சுகுணா காட் ரக முட்டை ஏனைய முட்டையை விட 24 வீதம் கொழுப்புச் சத்துக் குறைவானது. இந்த முட்டை இருதய நோய், அதிக பதற்றம், ஒவ்வாமை, நீரிழிவு நோய் வராது தடுக்க ஆற்றல் கொண்டது. இருதய நோய் வராது தடுக்கும் விற்றமின் E, ஒமேகா அசிட் என்பன இந்த முட்டையில் உள்ளடங்குகின்றன.

சுகுணா ஆக்ரீவ் ரக முட்டை புற்றுநோய், எயிட்ஸ், ஹைபோதேரியம் ஆகிய நோய்கள் வராது தடுக்க உதவும். இதில் விற்றமின் E, [illegible] அதிகளவு உள்ளது. இதனைக் குழந்தைகள், பெரியவர்கள், கர்ப்பிணிப் பெண்கள் என அனைவரும் சாப்பிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையைச் சேர்ந்த செல்லையா சுயந்தன் என்பவருடைய தே.அ.அ (இல. 860953820V) சுன்னாகம் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

FINE SELECTION, NO.77, K.K.S.ROAD, CHUNAKAM. (76991)


## B & G INFO TECK

களபாவோடை ஏழாலை

**புதிய கணனி வகுப்புகள்**

- (A/L) GIT வகுப்புகள்
- 10, 11 ICT வகுப்புகள்
- Computer Typing
- 6 - 11 English Classes

ஆரம்பம் 16.02.2008

கணனி மூலம் அச்சுப் பதித்தும், கணனிகள் பழுது பார்த்தும் தரப்படும். (70998)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### தம்பையா கணேசமூர்த்தி

தோற்றம் 28-03-1958

மறைவு 11-01-2008

எமது குடும்பக் குலவிளக்கின் துயரச் செய்தி கேட்டு உடன் வந்தும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோர்களுக்கும், அவரின் இறுதிப்பயண வழிபாட்டில் கலந்துகொண்டவர்களிற்கும், இக்காலப்பகுதியில் தங்களின் சகல உதவிகள், ஒத்தாசைகள் புரிந்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (10.02.2008) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் பிரார்த்தனை நிகழ்வில் கலந்துகொண்டு ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

K.K.S.வீதி, சுன்னாகம். T.P.: 077 6412539 குடும்பத்தினர். (70992)

## மரண அறிவித்தல்



### இராஜநாயகம் றோகான் ராஜசிங்கம்

*(முன்னாள் யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி, கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அதிகாரி)*

தெல்லிப்பழை கிழக்கைச் சேர்ந்த இராஜநாயகம் றோகான் ராஜசிங்கம் 08.02.2008 வெள்ளிக்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் மொய்றா வினோதினியின் அன்புக் கணவரும் யாழ்.மத்திய கல்லூரி மாணவர்களான அனோ நிதர்ஷன், இவான் நிரோஜன் மற்றும் ஷெரோன் ராகவி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற இராஜநாயகம் மற்றும் திருமதி இராஜநாயகம் தம்பதியரின் அன்பு மகனும் பிலிப் நேரி - றெஜி தம்பதியரின் பாசமிகு மருமகனும் திரு.திருமதி சைரஸ் மீனலோஜினி, நிரஞ்சன் றிச்மன் ஆகியோரின் மைத்துனரும் அருளானந்தம் - தொம்மினிக்க தம்பதியரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு நேற்று (09.02.2008) சனிக்கிழமை இந்தியாவில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், விளையாட்டு ஆர்வலர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*315, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்.*


தொ.பேசி எண் - இந்தியா
00919940387714
00919840527620 (70994)

தகவல்:
ஞா.அருளானந்தம்
(பெரிய தந்தை).

## நினைவு அஞ்சலி

10ஆம் ஆண்டு 7ஆம் ஆண்டு





அமரர் சின்னப்பு வல்லிபுரம்
மலர்வு: 02.05.1912 உதிர்வு: 03.02.1998

அமரர் வல்லிபுரம் மாணிக்கலிங்கம்
மலர்வு: 09.06.1946 உதிர்வு: 28.01.2001

திதி: 10.02.2008

எம் தந்தையரே!
உங்களுடன் பகிர்ந்து கொண்ட அன்பு
அறிவு, அறம், ஆற்றல், அனுபவங்களில்
நாம் வாழ்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய நல்லூர்க் கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

566/3, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். (70995) குடும்பத்தினர்.

## விற்பனைக்கு

CANON 1215, 2020, 3025, 3325, 3225 போட்டோக் கொப்பி மெசினுக்குரிய உதிரிப்பாகங்கள் (SPARE PARDS - ஜப்பானிய தயாரிப்பு) தொகையை விற்று முடிக்கும் 40% கழிவுடன் விற்பனையாகின்றது.

*தொடர்பு:* 071 4142976, 011 2981830

## கணனி தட்டச்சு

யாழ்.பல்கலைக்கழக சுற்றாடலில் இயங்கும் கணனி நிலையத்திற்கு கணனி தட்டச்சு வேலை தெரிந்தவர்கள் தேவை. விண்ணப்பிக்கவும்.

*தொடர்பு:* விளம்பர இல. 3057, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (70985)

## விற்பனைக்கு

சுத்தமான பசு நெய், கொழுப்பு நீக்கிய பால் (NON FAT MILK) விற்பனைக்கு உண்டு.

"ஜனா பாம்",
*மல்லாகம் சந்தி, மல்லாகம்.* (#551390)

## தவறிவிட்டது

சுன்னாகம் புனித அந்தோனியார் வீதி, அல்பிறட் அனற் மரிய் பிறிஜிற் என்பவரது தே.அ. அட்டை (837054869V), வி.அ.அட்டை மற்றும் முக்கிய ஆவணம் அடங்கிய பேர்ஸ் 06.02.2008 அன்று சுன்னாகத்தில் தவறவிடப்பட்டுள்ளது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் புனித அந்தோனியார் வீதி, சுன்னாகத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொ.பே.: 0776313745.

## மணமகன் தேவை

1946ஆம் ஆண்டு, செவ்வாய் குற்றமுள்ள, 50¼ பாவமுடைய, சட்டப்படி விவாகம் நீக்கியவர். யாழில் ஒரு ஸ்தாபனத்தில் களஞ்சியப் பாதுகாவலர் + இரவு வாச்சராகப் பணி புரிபவருக்கு வயது 40 - 56 இற்கு இடைப்பட்ட தாரமிழந்தவர் தேவை. தரகர் தேவையில்லை. முதல் கடிதத்தில் வீட்டு விலாசத்துடன் விவரங்களை அனுப்பவும்.

உதயன், விளம்பர இல. 3056, யாழ்ப்பாணம். (70819)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,பெப்.10

யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் இ.அரிகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் கலந்துகொள்வார். (202)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.10

இலங்கை வர்த்தக கைத்தொழில் தொழிற் சங்கத்தின் 60ஆவது அகவை நிறைவு நிகழ்வும் தோழர் பாலா தம்புவின் 60வருட சேவை ஆய்வு நிகழ்வும் அகவிழி அலுவலகத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

சர்வதேச மார்க்சிசக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு வர்த்தக ஊழியர் சங்கத்தின் பிரதிநிதி சொ.சிவபாலன் தலைமை வகிப்பார். (202)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.10

கலாபூஷணம் சு.துரைசிங்கம் எழுதிய 'சுன்னாகத்தின் தமிழ் எழுத்து இலக்கிய முன்னோடிகள்' என்னும் நூலின் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல 10 மணிக்கு சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சுன்னாகம் கிழக்கு, சனசமூக நிலையம் சிவன் முன்பள்ளி ஆகியவற்றின் ஆதரவுடன் யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியர் ப.புஷ்பரட்னம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் செல்வி க.விக்னேஸ்வரி நிகழ்த்துவார். (202)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.10

யாழ்.மாவட்ட கலை, கலாசாரப் பேரவையின் செயற்குழுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது. (202)

## அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம்

உ
ஓம்விராட் விஸ்வப்பிரம்மனே நம
*அன்னை காளியம்பாள் திருத்தாள் போற்றி*
யாழ்.- திருவண்ணை - கன்னாதிட்டி
அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம்

### மஹோற்சவ விஞ்ஞாபனம்

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | - | 11.02.2008 திங்கட்கிழமை முற்பகல் 10 மணி |
| தேர்த்திருவிழா | - | 19.02.2008 செவ்வாய்க்கிழமை காலை 9 மணி |
| தீர்த்தத்திருவிழா | - | 20.02.2008 புதன்கிழமை காலை 9.30 மணி |
| பூங்காவனம் | - | 21.02.2008 வியாழக்கிழமை பிற்பகல் 4 மணி |

மேற்குறிப்பிட்ட திருவிழாக்கள் தவிர்ந்த மற்றைய நாள்களில் கொடி தம்பபூசை காலை 8 மணிக்கும் பிற்பகல் 3 மணிக்கும், வசந்தமண்டபப் பூசை காலை 9 மணிக்கும் பிற்பகல் 3.30 மணிக்கும் நடைபெறும்.

(70982) தேவஸ்தான ஆதீன கர்த்தாக்கள்.

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### லோறன்ஸ் அலெக்ஸ்சான்டர்
(சம்மாட்டி)

தோற்றம் 12-04-1953

மறைவு 10-02-2006

"மரணங்கள் தவிர்க்கமுடியாதவை ஆயினும்
சில மரணங்கள் சகிக்கமுடியாதவை"

நெஞ்சில் உரமும் நேர்மைத்திறனும்
வஞ்சமில்லா வாய்ப்பேச்சும் கொண்டவரே!
கேட்போரை மகிழவைத்த நீங்கள் இப்போது
விட்டாரைக் கலங்கவிட்டு
நீள்துயில் கொண்டு இறைபதம் எய்திய
எங்கள் குடும்ப விளக்கே! ஆத்ம ஜோதியே!
ஈராண்டு சென்றாலும் ஆறுமோ எம்மனம்
அகலுமோ உங்கள் நினைவு
நீங்கள் என்றென்றும் தோன்றாத் துணையாய் நின்று
எங்களை வழி நடத்துகிறீர்கள் என்ற மன அமைதியுடன்
உங்கள் ஆத்ம சாந்திக்காய்ப் பிரார்த்திக்கின்றோம்.

*யாவில் லேன், ஆனைக்கோட்டை.* (70889)
மனைவி, பிள்ளைகள், சகோதர, சகோதரிகள்.

## 41ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும். வீட்டுக்கிரியை அழைப்பும்



மலர்வு 20 05 1959

உதிர்வு 01 01 2008

அமரர்

### திருமதி கிரிசாம்பாள் இராசரத்தினம்

நாள்கள் நாற்பத்தொன்று ஆனது அம்மா
உம் அன்பு முகம் மறந்ததில்லை
அகிலத்தில் நாமுயர வழிகாட்டிய தெய்வமே!

எமது குடும்ப விளக்கு திருமதி கிரிசாம்பாள் இராசரத்தினம் அவர்கள் நோய்வாய்ப்பட்டு, யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்தவேளை, தன்னலம் கருதாது அன்னாருக்கு வைத்திய சேவை செய்த வைத்திய கலாநிதிகள், தாதிமார்கள், மற்றும் உதவியாளர்களுக்கும், வைத்திய சாலைக்கு நேரில் வந்தும் தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறிய எமது உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவருக்கும், அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து நேரில் ஓடோடி வந்து ஆறுதல் கூறி, இறுதிச் சடங்கில் கலந்து பல வழிகளி லும் உதவியவர்களுக்கும் அஞ்சலிப்பிரசுரங்கள், மலர் வளையங்கள் மூலம் அஞ்சலி செய்தவர்களுக்கும், இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது குடும்ப சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (10.02.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால், நிகழ்வில் கலந்து பிரார்த்திப்பதுடன், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

122/3, நந்தாவில் அம்மன் வீதி,
கொக்குவில் கிழக்கு.
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதுமைலோலன் என்ற புனைபெயருக்குள் மறைந்திருந்தவர் வி.கே.கந்தசாமி. அவர் அந்தப் புனைபெயரில் இலக்கியத்துறையில் மட்டுமன்றி பேச்சுத் துறையிலும், அரசியல்துறையிலும் பிரபல்யமானவர். அவரது எழுத்து நடை நறுக்கென்று இருக்கும். ஒரு சில சொற்களில் மணி மணியாக எளிமையாக எழுதுபவர். ஆனால் மேடைகளில் ஏறினால் எந்தப் பொருளிலானாலும் கண்ணை மூடியவாறு அடுக்குத் தமிழில் ரசனையும் பொருளும் விஞ்ச இடைவெளி இன்றிப் பொழிந்து தள்ளுவார். தமிழரசுக் கட்சிப் பிரசாரக் கூட்டங்களில் புதுமைலோலன் பேசுகிறார் என்றால் அந்தக் காலத்து இளைஞர் கூட்டம் எந்தளவு தூரம் என்றாலும் அங்கு திரண்டுவிடும்.

சிறுகதைத் துறையில், 1952 இல் எழுதிய அவரது முதலாவது சிறுகதை சுதந்திரனில் வெளிவந்தது. அதன் பின்னர் ஈழத்தில் பிரசுரமான சஞ்சிகைகளிலும் பத்திரிகை களிலும் நிறையவே எழுதினார். அவரது சிறுகதைகள் பல ஒரு தொகுதியாக வெளிவந்துள்ளன. வேறு பல பொது நூல்களையும் அவர் வெளியிட்டிருந்தார். ஆசிரியராகப் பணிபுரிந்து அதிபராகப் பதவி உயர்ந்தவர்.

அவர் ஒரு பகுத்தறிவு வாதி. புதுமைவிரும்பி. புதுமைலோலன் என்ற அவரது புனைபெயர் அதனைத் துலாம்பரமாக்குகிறது.

# அப்பே லங்கா

சிறைச்சாலைக் கதவு திறந்தது. அதிகாலையில் பறவைகள் வீட்டை விட்டு வெளியேறும் மகிழ்வு போல, சிறையிலே அடக்கியொடுக்கிக் கிடந்த கைதிகள் புறப்பட்டனர். நாளை புத்த ஜெயந்தி. ஆகையால் தண்டனை முடியாத கைதிகள் பலர் மன்னிக்கப்பட்டு - தண்டனைக் காலம் குறைக்கப்பட்டு - நாட்டிலே நடமாட விடப்பட்டனர். இக்கைதிகளுள் ஒருவன் ஏங்கிய முகத்துடன் சோர்ந்த உள்ளமுடன் வெளியேறினான். உடைகள் மாற்றப்பட்டு வேறு உடை தரித்துக் கைதிகள் வீட்டை நோக்கிப் புறப்படும் போதும் கூட அவன் தயங்கினான். நாடு போவதிலும் சிறைக்கூடம் சிங்காரமானது என எண்ணினானோ? சிறைக்கூடத்திலும் பார்க்க நாடு பொல்லாதது என நினைத்தானோ? அவன் பெயர் புஞ்சி சிங்கோ. காலிக் கணித்தாயுள்ள க்ராமம் அவன் பிறந்து வளர்ந்த சொந்த நாடு.

புஞ்சி சிங்கோ மனம் ஏன் வீடு செல்ல மறுக்கிறது!

ஆறு மாதங்களுக்கு முன்பு:

இரவு, கருமிருட்டு உலகைத் தன்னுள் ளடக்கி உனது விஞ்ஞான வெளிச்சங்கள் கூட என் கப்பிய இருளையகற்ற முடியாது என மனிதனைப் பார்த்துச் சவால் விடுவது போலிருந்தது.

அவள் கண்களிலே நீர். புஞ்சி சிங்கோவின் உள்ளத்திலே புயல். அவள் புஞ்சி சிங்கோவின் மனைவி மெனிக்கே. 'மெனிக்கே' என அவளைச் சிங்கோ அழைக்கும் போது மேனியெல்லாம் அன்புக் குரலால் உணர்ச்சிப்பட்டு; உந்தப் பட்டுக் காதல் உலகம் கண்டவள். அவளின் முழுப் பெயர் ''றண்மெனிக்கே''. ஆனால் சிங்கோ அழைப்பது மெனிக்கே என்று தான்.

''மெனிக்கே'' - அழகி, எழில் கூட்டும் பாவை, வண்ணப்பதுமை, புதுவனப்புச் செறிந்த பூவை, காவிய நாயகி, கண்ணைப் பறிக்கும் மின் வெட்டு, தங்க மொழித் தையல் என்று வர்ணிப்பார்களே அப்படிப்பட்டவளல்ல! அவள் மேனி அமாவாசை இருட்டு. அவளின் உடம்போ அழகாகவமையாத சதைப்பிடிப்பு. அளவுக்கதிகமான அவலட்சணம் நிறைந்தது. அவள் வதனத்தில் எந்தவிதக் கவர்ச்சியும் கிடையாது. பாலை வனம் போன்றுசெழுமை காட்டா கறுப்பு முகம் மெனிக்காவினது. அதுமட்டுமல்லாது, அவளின் கண்ணிற்குக் கீழே ஒரு வடு. அவ்வடு கறுப்பி மெனிக்காவின் முகத்தில் ஒரு தழும்பாகவிருந்தது. அத்தழும்பு உணர்த்தும் பாடம் ஏழ்மையைத்தான். பத்து வயதுச் சிறுமியாயிருந்த போது ஓரே துணையாயிருந்த தாய்க்கிழவியுடன் பசிவயிற்றுடன், ஏங்கிய வாழ்வு வாழ்ந்தாள் மெனிக்கா. தாய் கிழவி பிச்சையேற்பவள். மெனிக்கா அப்பிச்சையிலே பங்கு பெற்று வாழ்பவள். ஒரு நாள் பசியின் ஆட்சியில் கிழவியும் மெனிக்காவும் ஆட்பட்டனர். ஒருவரும் உதவவில்லை அன்று. ஆகையால்

மெனிக்கா பசியால் சுழன்றாள்; அழுதாள், தாங்க முடியாத பசி. உயர்ந்தவர்கள் பணத்தால் வளர்ந்தவர்கள் பணத்தால் புகழ் பெற்றவர்கள் பணத்தால்.... இப்படியே பணத்தால் பல வாழ்வு வசதி கொண்டு வாழும் அக்கிராமத்திலே ஏழ்மையிலே ஆழ்ந்து கிடந்தனர் தாயும் மகளும். தாங்க முடியாத பசியால், அயல் வீட்டுப் பலாமரம் அழைத்தது. அம்மரத்திலே பல பலாப்பழங்கள் தொங்கின. சொந்தக்காரரைக் கேட்டால் கொடுப்பார்களா? ஒரு பலாக்காய்ப் பிஞ்சையாவது கொடுப்பார்களா? திருடியானாள் மெனிக்கா....?.

''வாழ்வு வசதி ஒரு பக்கம் குவிக்கப்பட்டு வாழ முடியாத மக்கள் தொகையை இன்னோர் பக்கம் வாடவிட்டுக் கிடக்கும் சமுதாயத்திலே திருடர் ''பிக்பக்கட்'' ஆசாமிகள் உருவாக்கப் படுகிறார்கள்.

மெனிக்கா திருடியல்லள். திருடமனம் கொண்டவளல்லள். புத்தன் மொழியை உணர்ந்த பூவைதான். ஆனால் பசி- கோரப்பசி! கம்பி வேலியால் புகுந்தாள். ஒரு தடியால் பலாப்பழத்தைத் தட்டினாள். பழம் விழவில்லை. காய் ஒன்று வீழ்ந்தது. அதுவும் அவள் கண் மேல் விழவந்தது. கொஞ்சம் தவறிக் கண்ணின் கீழே வீழ்ந்தது. பலாக்காய் முள்கீறிவிட இரத்தம் ஓடியது. பலாக்காய்ச் சொந்தக்காரர் கண்டு விட்டால் என்ற பயத்தால் இரத்தம் ஓட ஓட ஓடினாள். தாயை நாடினாள். தாய்க்கிழவி இரத்தம் கண்டு துக்கப்பட்டதிலும் பார்க்க பலாக்காய் கண்டு மனம் மகிழ்ந்தாள். காரணம் தாங்க முடியாத பசி. பலாக்காயை உண்டனர். அவ்வூர் தர்மாஸ் பத்திரி மருந்து அவள் காயத்தை நீக்கியது. ஆனால் தழும்பு அப்படியே இருந்தது.

வாழ்வின் வரட்சியின் அந்தம் வரை வாழ்ந்து பழகிய மெனிக்கா, கால வளர்ச்சியால் பருவ மங்கையானாள். ஒவ்வொரு தினமும் வேதனைக் குரலொலியிட்டபடியே மெனிக்காவுக்குக் கழிந்தது. இந்த நிலையிலே உறுதுணையாயிருந்த தாய்க்கிழவி மூச்சு விட மறந்தாள். அதனால் ''வான்வீடு'' சென்றாள். பட்டினியால் இறந்த அக்கிழவி மெனிக்காவைத் தனிமையாக்கி விட்டாள். பருவக்குமரி. செங்காய்ப்பருவம். ஆனாலும் அவளிதழ் கொவ்வையல்ல. அவள் கண் மீன் அல்ல. அவள் கன்னம் ரோஜாவல்ல. அவள் மேனி தங்கமல்ல! ஆகவே ஆண்களின் விழியம்பு பாயவில்லை. பாயமுடியவில்லை. மெனிக்காவின் அவலட்சணம் அவளைக் காப்பாற்றியது. ஏழை மெனிக்கா எழிலுடனிருந்

தால், ''மைனர்''களின் கண்வீச்சு, பணக்காரரின் அன்பளிப்பு, பெரிய மனிதரின் ''ஒரு நாள் இன்பம்'' காதல் கீதமியற்றும் வாலிபரின் ''புது உலகம்'' கண்டிருப்பாள். அவள் விரும்பாவிட்டாலும் அந்த உலகுக்கு ஏழ்மை இழுத்திருக்கும் அல்லது இழுக்கப்பட்டிருப்பாள். அது இயல்பு, அனால் மெனிக்காவின் உடல் தோற்றமும் உடையழுக்கும் யாரையும் அவள் பக்கம் திரும்பச் செய்யவில்லை.

மெனிக்கா தாயிறந்த பிறகு தானே பிச்சையெடுத்து உண்ண ஆரம்பித்தாள். காலி புகையிரத ஸ்தானத்தைத் தனது பிச்சை உத்தியோகத்தின் கேந்திரஸ்தானமெனக் கண்டாள். ஒரு பக்கத்திலே இருந்து பிச்சை ஏற்பாள். மந்திரிகள் வந்தனர். சமூகத் தொண்டர் வந்தனர். பிக்குகள் வந்தனர். அவர்கள் கண்களில் ஒரு விநாடி மெனிக்கா படுவாள். ஒரு சதம் வீசப்படும். புண்ணியம் அவர்களுக்குச் சேர்க்கப்படும். அவ்வளவே!

புஞ்சி சிங்கோவும் எழைகள் உலகிலே உண்டாக்கப்பட்ட ஒரு திருடன். ''பிக்பாக்கட்''. சில வேளைகளில் கண்ணை மூடிக் குருடனாகப் பிச்சையேந்தி - நடித்து வாழ்பவன். அவனும் மெனிக்காவின் இனம். காலி ஸ்தானத்திலே இருவரும் இரண்டுமுறை சந்தித்ததும் ''பருவத் தேவை'' ஒன்றாக்கி விட்டது. அவர்களுக்குக் காதல் தெரியாது. ''லவ்'' புரியாது. ஆனால் தேவையேதோ ஒன்றாக்கியது. ஒன்றாகினர்.

அவர்கள் வாழ்வு ஓடியது. இருவரும் பிச்சையேந்தினர். வயிறு குளிரக் காணவில்லை. சிங்கோவின் திருட்டு வேலையும் ஆரம்பமானது.

மஞ்சளுடையிலே மக்கள் மத்தியிலே புத்தர் நாமம் கூறித் திருடி வாழும் பலரைக் கண்ட சிங்கோ, தான் மட்டும் திருடனாவதை வெறுக்கவில்லை.

பஸ்ஸுடன் பஸ்ஸாக ஓடுவான். சனத்திரளில் புகுவான். ''மணிபர்சு'டன் வெளிவருவான். அப்படியே ஒருநாள் மின்வெட்டும் நேரத்தில் ஒரு பர்சுடன் வெளிவந்தான். ஆனால் 'பர்சின்' சொந்தக்காரன் கண்டு விட்டான். பொலீசாரிடம் ஒப்படைக்கப்பட்டான். ஆறு மாதம் சிறைவாசம்கிடைத்தது. தன் சிறைவாசத்தை நீக்கி விடுமாறு பாராளுமன்ற உறுப்பினரிடம் கூடக் கெஞ்சினான். ஏனெனில் தேர்தல் காலங்களில் அந்த உறுப்பினருக்கு எவ்வளவோ திருட்டு தவிகள் புரிந்தவன். ஆனால் அவ்வுறுப்பினர் விரும்பினாலும் சட்டம் அவனை ஆறு மாதம் சிறைக்கம்பி எண்ணத்தான் செய்தது.

சிங்கோ சிறையிலிருந்த காலத்திலே இலங்கையின் தேர்தல் முடிவு அரசாங்கத்தை மாற்றி விட்டது. ஆட்சிபீடம் முழுதான மாற்றம் பெற்றது.

புத்த ஜெயந்தியும் வந்தது. ஆறு மாதம் நிறைய முன்பே விடுதலையும் சிங்கோவுக்குக் கிட்டி விட்டது. சிறை செல்லும் போது மெனிக்காவுக்குக் கூடச் சொல்லவில்லை. சொல்ல வசதியுண்டாகவில்லை. மெனிக்காவின் கதி? உழைக்கத் தெரியாதவளா....? இருந்தும் பிச்சையேந்த வேண்டியது தானே!

துயரத்துடன் காலிப்புகையிரத ஸ்தானத்திற்கு வந்தான். மெனிக்கா உட்காருமிடத்தைப் பார்த்தான். அவள் அங்கே இருந்தாள். ஆனால் மெலிந்து - உருமாறி நோய் கொண்டவளாயிருந்தாள். சிங்கோவை இழந்த ஏக்கமும் பசியின் கோரமும் அவளை உருமாற்றின. சிங்கோவைக் கண்டதும் மெனிக்காவின் மனதிலே ஓர் மகிழ்ச்சி, உடலிலே ஓர் குதூகலம்!

நாள்கள் சில ஓடின.

மொழி மனிதனின் நாகரிக வளர்ச்சி காட்டும் உயரிய பொருள். தாய் மொழியைத் தம் விழியாகக் கொள்ளல் மனிதர் கடன்.

இலங்கையில் சிங்களமும்தமிழும் ஆட்சி பீடமேற வேண்டியது நீதி, உரிமையும் கூட. ஆனால் ஹிட்லரின் வாரிசுகள், ரஸ்புடீனின் வழி செல்லும் மஞ்சள் காவிகள் ஆட்சியைத் தம் பக்கம் திருப்பி சிங்களமே ஆட்சி மொழியாக்க முனைந்தனர். தாய் தடுத்தாலும் நம் மொழி விழ விடேன் எனத் தமிழர் உரிமை முழக்கமிட்டனர். தோள் நிமிர்த்தி சிங்கமாகி, மனத்திண்மை கொண்டு சாத்வீகப் போராட்டத்தை ஆரம்பிக்கத் துணிந்தனர்.

காலிமுக மைதானத்தில் தமிழரின் சாத்வீகப் போராட்டம் தமிழுரிமைகோரி சத்தியாக் கிரகம்! காந்தியின் வழியிலே போர்- அறப்போர் - அது தமிழரின் உரிமைப் போர்.

அறப் போரை அழித்து விட- தடுத்து விட ஆட்சிப் பீடமேறிய பிரமுகர்களின் ஆணவப் பார்வை. அதனால் பல திருடருக்கும், ஏழைகளுக்கும் உழைப்பு. புஞ்சி சிங்கோவின் கையிலே நீல ரூபா நோட்டு. சத்தியாக்கிரகிகளுக்குத் துன்பம் கொடுக்கத்தான். அடி பழகத்தான். காலியிலிருந்து கொழும்பு நோக்கிப் பிரயாணமானான். அறப் போர் வீரர்களைத் துரத்தும் திருட்டுப் படையில் அங்கமானான். சிங்கோவின் கையிலே ஒரு மணிக்கூடு, பையிலே இரண்டு 'மணிபர்சு' 'பர்சு' நிறையப் பணம், மகிழ்வுடன் காலி வந்தான்.

''ஒரு நாளுமில்லாத மகிழ்வுடன் உள்ளீர்களே'' என்றாள் மெனிக்கா.

''மெனிக்கே, 'அப்பேலங்கா'.... 'சிங்கள லங்கா....'ஜெயவேவா'' - புஞ்சி சிங்கோ மகிழ்வுடன் கூறினான். தன் கையிலிருந்த மணிக்கூட்டை எடுத்தான். பணத்தை வெளியே எடுத்து எண்ணினான்.

மெனிக்கா திகைத்தாள். சிங்கோ எங்கேயோ திருடி விட்டானே; திரும்பவும் சிறைக் கூடமல்லவா போகப் போகிறானேயென துயரடைந்தாள்.

சிங்கோ சிரித்தான்.

''இதுவெல்லாம் தமிழர்களின் பொருள்கள். களவல்ல. பார்க்கப் பார்க்க - சொந்தக்காரர் அறிய, ஆட்சியறிய எடுக்கப்பட்டது.''

ஆச்சிரியமுடன் பார்த்தாள் மெனிக்கா.

''திகைக்காதே மெனிக்கா, தமிழுக்கு உரிமை கேட்டுச் சத்தியாக்கிரகமென்று ஏதோ தமிழர் செய்கிறார்கள் தெரியுமோ? அதற்கு நம் ஆட்சியினர் எதிர்ப்பு. தமிழரைக் கலைக்க நமக்குப்பணம். அதுமட்டுமல்லாது, சத்தியாக்கிரகிகளிடம் இருக்கும் பணம் பொருள்கள் யாவும் நமக்கு''

''சிறைக்கு அனுப்பாதா அரசாங்கம்'' எனக் கேட்டாள் மெனிக்கா.

''அவர்கள் நம் துணைவர். நாம் சிறு திருடர்.... அவர்கள்.... பெரும்....''

கைகொட்ட முடிந்தது அவளால். ஏனா? ஏழையின் பசி நீங்க முடிகிறதல்லவா?

''இனி மேல் நமக்குப் பயமில்லை'' எனக் குரலிட்டாள் மெனிக்கா.

''ஆமாம் மெனிக்கா! இது நமது லங்கா (அப்பேலங்கா) சிறைக்கு என்போன்ற கொள்ளைக்கூட்டம் போகாது இனிமேல். வேண்டுமானால் ''அப்பேலங்கா'' ப் பாராளுமன்றத்துக்கு நாம் போவோம்!''

மெனிக்காவின் கன்னம் சிங்கோ கரத்தால் தடவப்பட்டது. அம்முரட்டுக்கை கறுப்புக் கன்னத்தை ஊன்றித் தடவியதால் ஓர் சிறு ஒலி எழுந்தது. அவ்வொலி ''அப்பேலங்கா'' என்பது போலிருந்தது. 1956 (நன்றி: சுதந்திரன்சிறுகதைகள்)

# இலக்கியத்தில் காதல்; காலத்துக்கு காலம் பாடிய கவிஞர்களின் உட்பொருளும் நோக்கும் ஒன்றே

சங்க காலத்துப் புலவர்கள் தமது பாட்டுடைத் தலைவன், தலைவியின் பண்புகளை, உணர்வுகளை வெளிக்கொணர பொருத்தமான உவமான உவமேயங்களைக் கையாண்டு கவிதை இலக்கண மரபுக்கமைய தொகுத்த கவிதைகள் கருத்தாழமும், சொல் வளமும் இனிமையும் கொண்டு திகழ்ந்தன.

அது மட்டுமென்றல்லாது சங்ககாலப் புலவர்கள் இயற்கையின் எழிலைப் படம் பிடித்துக் காட்ட, மனித அவலங்களைச் சித்திரிக்க தம் கவிதைகளைப் பொருத்தமான வர்ணனைகளால் அழகு படுத்தியுள்ளனர்.

அந்த வகையில் அக்காலப்புலவர்களது கற்பனைத் திறன் ஒன்றையொன்று விஞ்சுவதாய் அமைந்த தன்மை படைத்தவை. அதேவேளை பின்வந்த காலத்து- கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த கவிஞர்களது கற்பனைத்திறனும் இவற்றுக்குச் சற்றும் தரம் குறைந்ததல்ல, மொத்தத்தில் தமிழ்மொழி உலகில் நிலைக்கும்வரை தமிழ்க்கவிதைகளும் சாகாவரம் பெற்றவையே.

நம் முன்னோர் மத்தியில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்கள், கவிஞர்கள் காதலின் ஆற்றலை தம் கவிதைக் கண்கொண்டு நோக்கிய விதம் குறித்து ரசிக்க இது ஒருதுளி மட்டுமே.

காதலின் ஆற்றலைக் கம்பனும், பாரதிதாசனும் ஒன்று போலவே கூறுகின்றனர். சீதையைப் புனைவு செய்து மண மண்டபத்திற்கு அழைத்து வந்தனர். அவள் அழகைக் கண்ட விசுவாமித்திரன் ''இவள் காதலைப் பெற இராமன் மேரு மலை போன்றதான இந்த ஒரு வில்லை மட்டுமா? ஏழு மலைகளேயானாலும் ஒருசேர முறித்து விடமாட்டானா!'' என நினைத்து வியக்கிறான்.

அச்சென நினைத்த முதல் அந்தணன் நினைந்தான்."
பச்சைமலை ஒத்த படிவத்து, அடல் இராமன்
நச்சுடை வடிக் கண்மலர் நங்கை இவள் என்றால்,
இச்சிலை கிடக்க! மலை ஏழையும் இறானோ?''

இந்த ஒரு வில்லை மட்டுமா ஏழு மலைகளே என்றாலும் முறிக்கச் செய்து விடுமே இவளுடைய கண்பார்வை. கம்பன் சொன்னவாறே காதற் பார்வையைப் பாரதி தாசனும் பாடுகின்றார்.


'கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால்
மண்ணில் குமருக்கு மாமலையும் ஓர் கடுமாம்?'

பாரதியும் கூட,

'நூற்றிரண்டு மலைகளைச் சாடுவோம்.
நுண்ணி டைப்பெண் ஒருத்தி பணியிலே!
காற்றி லேறியவ் விண்ணையும் சாடுவோம்
காதற் பெண்கள் கடைக்கண் பணி யிலே'

என்பான்.

''காதல் தோன்றுவதற்கு முதலாக நிற்பவை இரண்டு. ஒன்று நோக்கம் அல்லது காட்சி. மற்றொன்று உள்ளம். காட்சியும் உள்ளமும் கலந்து பெற்றெடுக் கும் குழந்தையே காதல்'' காதலர்கள் ஒருவரையொருவர் காணுகின்றனர் ஒருவரை யொருவர் விரும்பினாலும் நேரே பார்ப



கம்பன் பாரதிதாசன்

பதற்குப் பெண்ணுக்கு ஒருவகை நாணம், ஆணுக்கு ஒருவகைத் தயக்கம். நேரே உற்றுப் பார்ப் பது காதல் அன்று- வெறித்தனம். ஒருவர் பார்க்கும்போது மற் றொருவர் நேரே பார்க்கக் கூச்ச மடைகின்ற தன்மை, கண்டும் காணாதது போன்று இருத்தல்- இவையெல்லாம் காதலின் மேன்மைக்கு- மென்மைக்கு அடையாளங்கள்.

## இலக்கியப் பொழில்

இராமன் முன்னர் விசுவாமித்திர முனிவரோடு மிதிலை வீதியில் சென்றபோது சீதை அவனது வடிவழகைக் கண்டு அவனை இன்னானென்று அறியாமலே மன தில் காதல் கொண்டாள். பின்னர் வீரம் மிக்க அரசகுமாரன் ஒருவன் வில்லை வளைத்து முறித்து வெற்றி கண்டதாக கேள்விப்பட்டாள். தான் முன்னர் கண்டு மனதில் காதல் கொண்டவனே அவ்வீரனாக இருக்க வேண்டுமென ஊகித்தறிந்தாள்.

தசரதன் மற்றும் வசிட்ட முனிவர் அமர்ந் திருக்கும் மண்டபத்திலே தனது தந்தை சனகருக்கு அருகில் இப்போது சீதை அமர்ந் திருக்கின்றாள். வில்லை வளைத்து முறித்த தசரத மைந்தனும் அருகில் அமர்ந்திருக் கின்றான். தான் முன்னர் கண்டு மனதில் காதல் கொண்ட அவன்தானா இவன் என அறிய சீதையின் மனதில் ஒரு துடிப்பு; பரபரப்பு. நேரடியாகப் பார்த்துத் தெரிந்து கொள்ள நாணம் இடம் தரவில்லை. எப் படியாவது பார்த்துத் தெரிந்து கொண்டாக வேண்டுமே. தன் கைவளையல்களை திருத்துபவள் போல் குனிந்து கடைக்கண்ணால் அருகில் இருந்த இராமனைப் பார்த்து அவனே இவன் என அறிந்து கொண்டாளாம்.


''எய்யவில் வளைத்ததும் இறுத்ததும் உரைத்தும்,
மெய் விளைவு இடத்து முதல் ஐயம் விடல் உற்றாள்; ஐயனை அகத்தும் வடிவே அல, புறத்தும்
கைவளை திருத்துபு, கடைக்கணின் உணர்ந்தாள்!''

அகத்தே அதுவரை இருந்த வடிவம் தான் இங்கே புறத்தேயுமிருந்தது என்பதை அறிந்து சீதை எல்லையிலா உவகை கொண்டாள் என்கிறார் கம்பர்;

காதல், நாணம், ஏக்கம், பண்பாடு ஆகிய இத்தனை உணர்வையும் ஒரே கவிதையில் உள்ளடக்கிப் பெண்மையைப் பெருமைப் படுத்தும் தோற்றத்தை வெளிப் படுத்தும் கம்பனின் கவிவளம் தமிழுக்குக் கிட்டியதோர் பொக்கிஷம்.

காப்பியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அளவெட்டி அழகொல்லை வல்லவ
# இராஜகோபுரம் மற்றும் பரிவா
# பிரதிஷ்டா மகாகும்பாபி

## ஆசிச் செய்தி



அளவெட்டி அழகொல்லை விநாயகர் திருக்கோயிலுக்கும் இராஜகோபுரத்துக்கும் குடமுழுக்கு விழா.


எங்கும் எதிலும் பக்திச் சுவையை மேம்படுத்திவருபவர்கள் யாழ்.குடாநாட்டு மக்கள். இவர்களுள்ளும் அளவெட்டி வாழ் மக்களுக்கு இவ்வகையில் சிறப்பிடம் உண்டு. உழைப்பாளிகளும் பக்தியாளர்களும் மலிந்த இடம் அளவெட்டி. இவர்களுக்கு விநாயக பக்தியிலே முதலிடம் உண்டு. அழகொல்லை விநாயகர் என்றும், கும்பளாவளை விநாயகர் என்றும், பெருமாக்கடவை விநாயகர் என்றும் மூன்று பெருந்திருக்கோயில்களை இவ்வூர் அடக்கி உள்ளது.

இவற்றில் வடக்கே அமைந்த அழகொல்லை விநாயகருக்கு அழகொழுகும் சிற்பக் கலைக்கூடமாக இராஜகோபுரம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. ''கோபுர தரிசனம் கோடி புண்ணியம்'' என்பார்கள். இவ்வகையில் புண்ணியப் பேறுபெற்றவர்கள் இவ்வூர் மக்கள். தூலலிங்கமாகிய இக்கோபுரத்துக்கும் ஆலயத்திற்கும் இம்மாதம் பத்தாம் திகதி குடமுழுக்குக் கண்டு பரவசம் அடைய இருக்கிறார்கள்.

''பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
சரண அற்புத மலர் தலைக் கணிவோமே''

என்று அனைவரும் வணங்கி வாழ்த்தி ஆனந்தம் அடைவோமாக.

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி,ண
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.



## கிரியைகள் யாவும் இனிதாக நிறைவேற வேண்டும்



அகில அண்டங்களையும் இரட்சித்து சகல ஜீவராசிகளுக்கும் அருள்புரிந்து ஆட்கொள்ளும் பல வளங்களும் சீர்பூத்த திருவும் தழைத்தோங்கும் இயற்கை அழகும் வான் நோக்கிவளர்ந்த தென்னை, பனை, மரங்களும், பச்சைப்பசேலென காட்சியளிக்கும் வயல் வெளிகளும், நிறைந்த மக்களையும் கொண்ட மூர்த்தி, தலம், தீர்த்தம், தலவிருட்சம், இராஜகோபுரம் என்பவற்றை ஒருங்கே அமையப் பெற்றதாகிய அளவெட்டி அழகொல்லைப் பதியில் எம்பொருமான் வேண்டுபவர்களின் வேண்டுதல்களை எல்லாம் அருந்தளிக்க வல்லவன்.


அடியார்களின் பொற்பதமாய் பொன்னிறமாய், அற்புதமாய் அழகுற விளங்குபவன். இப்பெருமானுக்கு ஆகமவிதிகளுக்கு அமைய புதிதாக திருத்தி அமைக்கப்பெற்ற ஆலயத்திலே தைமாதம் 27ஆம் திகதி (10-02-08) தை உத்தரட்டாதி நட்சத்திரத்திலன்று மஹா கும்பபிஷேகமும் விநாயகருக்கு மங்கள இராஜகோபுரமும் அமைத்து இராஜகோபுர கும்பாபிஷேகமும் நடைபெறுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

இக்கிரியைகள் அனைத்தும் இனிதாக இடையூறுகளின்றி நல்லபடியாக நடை பெறுவதற்கு இறைவனை வேண்டி இந்நந்நாளில் விநாயகனின் கும்பாபிஷேக மலர் வெளியிடுவது மிகவும் ஆனந்தத்தை தருவதாகவுள்ளது. மலராக மலரும் கும்பாபிஷேக மலர் சிறப்புற அமைய வாழ்த்துகளையும் கூறிக்கொண்டு எல்லா மக்களுக்கும் பேரருள் கிடைக்கவும் நல்லாசிகூறி நல்குகின்றேன்.

''கோபுரதரிசனம் கோடி புண்ணியம்'' ''மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்''.

ஆலயபிரதம குரு,
சிவஸ்ரீ இரத்தினஐயர் மகாலிங்கக்குருக்கள்.

## அழகொல்லை விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவரின் இதயத்திலிருந்து எழுத்துருவில் ...



அழகொல்லை வாழ் அற்புதனே
பொற்பதம் போற்றுகின்றேன் புண்ணியனே
அடியவர் துயர் போக்கும் ஐங்கரனே
துதிக்கின்றேன் துணைவருவாய்
அழகிய கோபுரமாய் நிமிர்ந்து நின்றே
அடியார்க்கு அருள்மழை பொழிந்திடுவாய்
அன்பெனும் நாண்கொண்டு பிணைந்து நின்றேன்
அருளாசி அள்ளித்தந்திடுவாய்.

எத்தனையோ இடையூறுகள் மத்தியிலும் தடைகளை எல்லாம் தகர்த்து தடைக்கற்களைப் படிக்கற்களாக்கி நிமிர்ந்து நிற்கின்றது அழகொல்லை விநாயகர் ஆலயம். ''கோபுர தரிசனம் கோடி புண்ணியம்'' என்பர். ஆலயத்தில் நிமிர்ந்து நிற்கும் திருக்கோபுரம் அளவெட்டிக்கு மட்டுமன்றி அகிலமெங்கும் அருள்ஒளி வீசி எம்பெருமானின் புகழ் பரப்பி நிற்கின்றது. இறை ஆசியும் அருளும் இல்லாவிட்டால் இத்திருப்பணி இனிதே நிறைவேறி இருக்க முடியாது.

பழம் பெரும்பதியான இவ்வாலயம் காலச்சக்கர ஓட்டத்தில் உலர்ந்து, இடிந்து, பெயர்ந்து போய் மீளவும் புதுப்பொலிவு பெற்றது கண்டு இந்த அளவெட்டிக் கிராமமே புத்துயிர் பெற்றது போல் பூரித்து நிற்கின்றது. கும்பாபிஷேகம் காணும் இன்றையநாளில் இதுவரை காலமும் கண்ட பணியின் வெற்றிக் களிப்பில் இறும்பூது எய்தி நிற்கின்றது. அழகொல்லைச் சமூகம் அளவில்லா பூரிப்பில் அமிழ்ந்து அகம் மகிழ்கின்றது. அளவையூர்ச் சமூகம் இந்த அரிய சேவையில் கைகொடுத்து உதவி தோளோடு தோள்நின்றுழைத்த அனைவருக்கும் அழகொல்லை நாயகனின் அருளாசிகள் என்றும் கிடைக்க வேண்டுகின்றேன்.

சி.தவராசா,தலைவர்,
அழகொல்லை விநாயகர் ஆலயம், அளவெட்டி.


விநாயகர் களஞ்சியம் அன்
தொலைத்தொடர்பு சேவை, கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி.
060-221 2878, 0094602212878
021-4591935, 0094214591935

விநாயகர்
சைவ உணவகம்
கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி.

அராலிஊர் சிற்பாசாரியார் கந்தசாமி கோபாலசிங்கம்
அராலி மத்தி, வட்டுக்கோட்டை.
கோயில் கட்ட நிர்மாணங்கள், இராஜகோபுரங்கள், கருங்கல் விக்கிரகங்கள்,
சீமெந்து விக்கிரகங்கள் அனைத்து வேலைகளும் உரிய நேரத்தில் செய்து தரப்படும்.
021-4591 622, 077711121.

கஜமுகன் பல்பொருள் வாணிபம்
அருணோதயாக் கல்லூரி முன்பாக, அளவெட்டி.
060-2212517, 0094-602212517

கதிர்காமசிங்கம் சன்
அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.

விநாயகர் தொலைத் தொடர்பு சேவை
அளவெட்டி மேற்கு, அளவெட்டி.
060-2212561, 0094-602212561

றமணன் வீடியோ சென்ரர்
S.I.T. கொம்பியூட்டர் சென்ரர்,
அளவெட்டி.

நாகம்ஸ் தொலைத் தொடர்பு சேவை
கணேஸ்வரம் அளவெட்டி
021-222-5695, 0094-212225693, 021-4591451, 0094-214591451,
060-2213510, 0094-602213510
இன்ரநெற் வசதி உண்டு.


சுகப்பிரதா தொலைத் தொடர்பு சே
கும்பிழாவளைப்பிள்ளையார் கோயில் வீதி, அள
021-2227123, 0094-21 2227123,
060-2213322 , 0094 602213322. Fax:021459285
போட்டோ பிரதி, கவரிடுதல் என்பன செய்து தரப்படு


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# வாம்பா சமேத விநாயகர் ஆலய
# வாரமூர்த்திகளுக்குமான
# பிஷேகச் சிறப்புமலர்





## கும்பாபிஷேகத்தோடு எம் மண் விடிவு பெறவேண்டும்



அளவெட்டித் திருவூரில் அருள்நிறைந்த திருத்தலமாக விளங்குவது அழகொல்லைப் பிள்ளையார் கோயில். அடியவர்கள் இக்கோயிலை புனர் நிர்மாணம் செய்து, மகாகும்பாபிஷேகம் காண இருப்பது அறிந்து மிகவும் ஆனந்தம் அடைகிறேன். மிகத்தொன்மை வாய்ந்த ஆலயமாக விளங்கும் விநாயகர் ஆலயங்களில் இத்திருத்தலமும் முதன்மை பெறுகின்றது. இயற்கை எழில் மிக்க அழகாபுரி அளவெட்டி. இப்புண்ணிய பதியில் திருக்கோவில்களுக்குக் குறைவில்லை. தெய்வ காரியங்களை முன்னிலைப் படுத்தி வாழ்வதே இவ்வூரின் பண்பாடு. அவ்வகையில் அழகொல்லைப் பிள்ளையாருக்குப் பெருவிழா எடுத்து, விடிகாலை வரை விழாப் பொலிவு கண்டவர்கள் இவர்கள். அருள் நிறைந்த தம்குல தெய்வத்தின் பேரருளை வியந்து இராஜகோபுரம் அமைத் திருப்பது போற்றுதலுக்குரியது. இத்திருக்கோயில் கும்பாபிஷேகத்தோடு எம்மண் விடிவு பெறவேண்டும் என அனைவரும் பிரார்த்தனை செய்வோம். ஆலயப் பணியில் அயராது தொண்டாற்றிய மீளா அடியவரை வாழ்த்துவோம். சிவாச்சாரிய பெருமக்களின் சீரிய பணியைப் போற்றுவோம். அழகொல்லை ஆனை முகப்பெருமான் பேரருள் அகில உலகமெல்லாம் வாழும் அளவை மக்களுக்கு நல்லருள் பாலிக்க இறைஞ்சி அமை கிறேன்.

ஆறு.திருமுருகன்.


## அழகொல்லைப் பதிக்கு வாரீர்



ஙகொடு செந்நெல் வாழை
தவிட்டாத கனிவகைகள்
ங்கிதமாய் விளைந்து நிற்கும்
னிய நல் ''அளவை'' ஊரில்
கிடும் தமிழ் கலைகள் ஒன்றாய்
மிழர் தம் பண்பும் ஓங்க
கமின்றி சைவசமயம் தன்னை
க்குவமாய்ப் பேணும் ஊரில்
ங்கிய கோபுரமும் நல்ல
ப்பரும் மணிமண்டபமும்
கணும் புகழ்பாப்பி நிற்க
ழிலுற அமைத்தா ரன்றோ?
கரன் இவ் ''அழகொல்லை'' தன்னில்
ழகுற அமர்வான் கண்டீர்
கரன் புதல்வன் இங்குவந்து
ரிவர அமர்ந்திருந்து நாமும்
களைச் சூழும் இன்னலெல்லாம்
ழிதினில் களைவான் கண்டீர்
ங்க நற்கரி முகத்தானின்
ணையது கிடைக்க வேண்டில்
ாங்கிடும் குடமுழுக்கில் நீவிர்
னித நீர் தலையில் கொண்டு
கொல்லைப் பதியிற் கூடி
கமகிழ்ந்திட வாரீர் ஒன்றாய்!

விகடகவி
மு.திருநாவுக்கரசு,
(முன்னாள்
மாவட்ட நீதிபதி).

## பிரதேச செயலரின் வாழ்த்துச்செய்தி



உக்கிர சோழ மன்னனின் மகளான மாருதப்புரவீக வல்லிக்கு குதிரைமுகம் நீங்கப்பெற்றமையால் மாவிட்டபுரம் பெருமை பெற்றது. மாருதப்புரவீக வல்லிக்கு குதிரை முகம் நீங்கியபோதும் குதிரை முகம் இருப்பதான உணர்வு விநாயகப் பெருமானை வழிபாடு செய்யாமையினால் வந்த குறை ஒன்று இருந்தது. இக்குறையை நீக்கும் பொருட்டாக இளவரசியினால் ஏழு விநாயகர் ஆலயங்கள் புனருத்தாரணம் செய்யப்பட்டன. இவற்றில் ஓர் ஆலயமே மகாகும்பாபிஷேகப் பெருவிழாவைச் சந்திக்கும் அழகொல்லைப் பிள்ளையார் ஆலயமாகும்.

வழிபாட்டுப் பெருமைமிக்க அழகொல்லைப் பிள்ளையார் கோயில் தர்மபரிபாலனசபையினரின் பெருமுயற்சியால் அடியார்களின் பங்களிப்பில் தற்போது வானுயர்ந்த இராஜகோபுரத்துடன் அழகுற புனர்நிர்மாணம் செய்யப்பெற்று மிளிரும் இத்தலம் கும்பாபிஷேகம் கண்டு அருள்நிறைந்து எல்லா விக்கினங்களையும் தீர்த்தருளவேண்டும் என்று அழகொல்லை விநாயகரை வழிபடுவோமாக!

சு.முரளிதரன்,
பிரதேச செயலர்,வலி.வடக்கு,தெல்லிப்பழை.

## அருளாசிச் செய்தி



விநாயகரடியார்களுக்கு,

இலங்கையின் வடபால் அமைந்த யாழ்ப்பாணத்தின் வடக்கே கலைவளம், பொருள்வளம், நீர்வளம், தெய்வீகமணம் செறிந்து விளங்குவது அளவெட்டி என்னும் கவினுறு கிராமம். இங்கு புகழ்பெற்ற பல ஆலயங்கள், நிறைந்து காணப்படுவது சிறப்பானதாகும். இவ்வாலயங்களுக்கு எல்லாம் நடுநாயகமாக அமைந்து அடியவர்களின் விக்கினங்களை எல்லாம் தீர்த்தருளும் அருள்மிகு வல்லவாம்பா சமேத விநாயகராலயத்தில் மஹாகும்பாபிஷேகம் இன்று நடைபெறுவதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றோம். அழகிய சோலைகள் சூழ்ந்த இடம் ஆதலால் அழகொல்லை என்று பெயர் உண்டாயிற்று. இயற்கை அழகுடன், தெய்வீகச் சூழலும் சூழ்ந்த இப்பதி மிகத் தொன்மையான வரலாற்றினை தன்னகத்தே கொண்ட ஆலயமாகும். உக்கிர சோழனின் மகளாகிய மாருதப்புரவீகவல்லி குதிரைமுகம் நீங்கி அழகியமுகம் பெற்றபின் மாவிட்ட புரக் கந்தசாமி கோயில் முதலாக தென்திசை நோக்கி கட்டுவித்த ஆலயங்களில் விநாயகராலயமாக விளங்கும் அழகொல்லை விநாயகர் ஆலயத்திற்கு மேலும் சிறப்பூட்டும் வகையில் இராஜகோபுர புனராவர்த்தனம் செய்த சிற்பாச்சாரியார்களுக்கும், இப் புண்ணிய கருமத்திற்குதவிய அடியார்களுக்கும் எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் நல்லருள் பாலிப்பாராக. மேலும் இன்றைய கும்பாபிஷேகம் சிறப்பாக நிறைவேறி, எமது நாட்டில் சமாதானமும் சுபீட்சமும் நிறைந்த நல் வாழ்க்கை நிலவ வேண்டும்மென இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமஹா சந்நிதானம்,
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.

ச.திலிப்குமார்
S.S.T.Home Designing Agency
Draughtsmen and Consulting Technicians
முத்துமாரிஅம்மன் வீதி, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.
சண்முகநாதன், பிரதான வீதி, மானிப்பாய்.

லக்ஷனா பான்சி அன் தனலக்சுமி
பல்பொருள் வாணிபம்
கூட்டுறவாளர் வீதி, அளவெட்டிமத்தி,
அளவெட்டி.

விநாயகர் வீடியோ சென்ரர் அன்
கேபிள் விஷன்
கூட்டுறவாளர் வீதி, அலுக்கை
அளவெட்டி.

கந்தையா அன் -சன் அன்
நிருபாமசி K.R.
அளவெட்டி மேற்கு, அளவெட்டி.

விமல் போட்டோ அன் வீடியோ
அளவெட்டி தெற்கு, அளவெட்டி.
077-6305183

பொன்மலர் ஸ்ரோர்ஸ்
அளவெட்டி வடக்கு, அளவெட்டி.
060-221 2558, 0094- 60 2212558

டப்பு சேவை
் வீதி, அளவெட்டி.
7123,
X:021459285.
செய்து தரப்படும்.

கஜமுகன் ஹாட்வெயர்
147, 149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

இராசகோபுரம் கட்டுமானம், வர்ணம்:
ஸ்தபதி கி.மணிகண்டன்- திருச்சி,S.இந்தியா.
த.வ.சோமாஸ்கந்தன்- திருவெண்காடு, இந்தியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓராண்டு நினைவில்...




## அமரர் சைவப்பிதா பொன்.சாம்பசிவம்

(ஆசிரியர், சங்கானை, கல்வித்திணைக்கள உத்தியோகத்தர், முல்லைத்தீவு மாவட்டம்)

அன்பிற்கோர் சிகரமாய்
ஆழமான அறிவுக் கடலாய்
இல்லத் தலைவனுக்கோர் இலக்கணமாய்
ஈன்றவரைக் காத்ததில் கண்ணியனாய்
உலகம் புகழ்ந்தவனாய்
ஊருக்கோர் ஆலமரமாய்
எண் அறியவைத்த ஆசானாய்
ஏழைகளின் தோழனாய்
ஐங்கரனின் பக்தனாய்
ஒற்றுமைக்கு நாயகனாய்
ஓங்கார வடிவினனாய்
ஔவையின் ஞானம் பெற்றவனாய்
எங்களை அன்போடு அரவணைத்து
அறிவூட்டி வளர்த்து வரும் வேளையில்
இமைப்பொழுதில் கொடிய காலன்
எவ்வாறு கவர்ந்து சென்றானோ?
ஓராண்டு சென்றதப்பா உங்களைக்
காணாமல் எங்கள் உயிர் உள்ளவரை
உங்கள் நினைவில்...

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்
வல்ல செங்கற்படையானைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துடிக்கும்:
பாசமிகு மனைவி- விஜயரஞ்சினி,
அன்பு மகள்- கேசிகா, அன்பு மகன்- தனாதீபன்.

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.

(சி/551374)

**இறைச்சிக்கோழி விற்பனைக்கு**

புறொயிலர், சுல்பேட்
இறைச்சிக்கோழி
தினமும் சுத்தம்
செய்து குறைந்த
விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.

**நல்லூர் பாம்**
19, முருகேசர் லேன்,
நல்லூர். [70893]

**சாட்ஸ்- ரேக் கேபிள் T.V.சோப் 8 ஆம் ஆண்டில்......**



* டிஸ் டீவி மற்றும் கேபிள் டீவி உபகரணங்கள் நியாயமான விலையில் கிடைக்கும்.
* டிஸ் டீவிக்குரிய கட்டணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
* வியாபாரிகளுக்கும் மொத்த கொள்வனவுகளுக்கும் விசேட விலைக் கழிவு உண்டு.

டிஸ் டீ.வி. பக்கேஜ்கள் ரூபா 11000/=இல் இருந்து

விபரங்களுக்கு:
**சாட்ஸ் ரெக்**
இல.182, கே.கே.எஸ்.வீதி,
(குளப்பிட்டி சேச் அருகில்) கொக்குவில்.
T.P.: 021 2225908
(70849)

# ஓராண்டு நினைவஞ்சலி

## அமரர் கந்தையா நல்லதம்பி

(அச்சுவேலி லிபேட்டி சினிமா உரிமையாளர்)

மலர்வு 12.07.1928 உதிர்வு 20.02.2007

திதி: திருதியை



ஆண்டொன்று ஆனது ஐயா!
உங்கள் அன்பு முகம் மறந்ததில்லை
ஆருயிராய் நீங்கள் இருந்தீர்கள்
கண்மணிபோல் எம்மைக் காலமெல்லாம்
காத்தீர்கள்
தரணியிலே எம்மைத் தலைநிமிர
வைத்தீர்கள்
அகிலத்தில் நாம் உயர வழிகாட்டிய
தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

இன்று (10.02.2008) ஞாயிற்றுக் கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

லிபேட்டி,
அச்சுவேலி.

குடும்பத்தினர்.

(70838)

எமது உள்ளத்தில் உறைந்துள்ள அன்புத் தெய்வத்தின்

# ஆறாவது ஆண்டு நிறைவு நினைவு அஞ்சலி

மலர்வு 14.04.1947 உதிர்வு 17.01.2002

திதி: 10.02.2008



அன்புத் தெய்வமாய் அவனியிலே வலம் வந்தீர்
என்றும் எங்களுடன் இணைந்தே வாழ்ந்திருந்தீர்
துன்பம் எம்மை வாட்டத் தூரதேசம் போனீரோ?
இன்று உமை நினைத்து இதய அஞ்சலி செய்கின்றோம்

குடும்பத்தின் ஒளிவிளக்காய் ஒளிவீசிப் பிரகாசித்தீர்
குடும்பமே இன்று தவியாய்த் தவிக்கின்றதையா
ஆண்டுகள் ஆறு ஆகியே விட்டாலும்
ஈண்டு உமது உருவம் நெஞ்சை விட்டகலாது.

ஓம் சாந்தி!

என்றும் நினைவுடன் வாழும்:

யாழ்.மைதிலி ஜுவலர்ஸ்
157J, செட்டியார்தெரு,
கொழும்பு-11.

மைதிலி நகைமாடம்
894, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(70958)

## மண்கும்பான் உயர்குடித் தோன்றல் அமரர் ஐயம்பிள்ளை நடராசா

(உரிமையாளர்- மைதிலி நகைமாடம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பத்துக்கு ஒரு பால்மாடு வளர்த்து, வருமானத்தையும் வாழ்க்கை வளத்தையும் மேம்படுத்திக்கொள்வோம்

## பால்மா பைக்கெற்றுக்குச் செலவிடும் நிலையைத் தவிர்த்து சுயபொருளாதார வளர்ச்சிக்கு உதவலாம்

மனித உணவிலும் உடல்வளர்ச்சியிலும் பாலுக்கு மிக முக்கியமான இடமுண்டு. பால் நிறை உணவு மட்டுமல்ல. வாழ் நாள் முழுவதும் மனித வாழ்வில் பல்வேறு நிலையிலும் பயன்பாட்டிலுள்ளது. இந்த வகையில்தான் பண்டைய தமிழ்ச்சமூகத்தில் பசு செல்வமெனப் போற்றப்பட்டது. அன்று குடும்பங்களில் செல்வ நிலை அளவீட்டுக்கருவியாக பசு கொள்ளப்பட்டது. மாடு 'பட்டி'யளவில் குறிப்பிடப்பட்டது.

இந்து, தமிழர் மரபில் மாடு வணக்கத்துக்குரிய தெய்வமாகக் கொள்ளப்பட்டது. பசு



கோமாதா என அழைக்கப்பட்டது. தைப் பொங்கலுக்கு அடுத்த நாள் பட்டிப் பொங்கல் விழாவாக மாட்டிற்கு விழா எடுக்கப்பட்டது. பசுவிலிருந்து பெறப்படும் முக்கியமான ஐந்து பொருள்களையும் உள்ளடக்கிய கலவை பஞ்சகௌவியம் என உயர் அந்தஸ்தில் பூசைக்குரிய பொருளாகப் போற்றப்பட்டது. மாட்டுச் சாணகம் கிருமிகளைகப் கொல்லும் இயல்பு கொண்டது எனக்கருதப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. பண்டைத்தமிழர் போரொழுக்கத்திலும் அரசர்கள் ''ஆநிரை'' கவர்தல் என்ற செயற்பாட்டிற்கு ஊடாகப் போருக்கான முன்னறிவிப்பைப் பிரகடனம் செய்தனர்.

### மக்களின் வாழ்க்கையில் மாடு வளர்ப்பு

யாழ்.மக்களின் வாழ்க்கை முறையில் விவசாய மரபிலும் மாடு வளர்ப்பு மிக முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தது. முன்னர் விவசாயிகளினால் பெரிய அளவில் மாடுகள் வளர்க்கப்பட்டன. மாட்டுச்சாணகமும் சலமும் பயிர்ச் செய்கைக்காகப் பசளையாகக் கொள்ளப்பட்டன. அன்று மக்களின் உணவில் சகல நிலையிலும் பால் பயன்பட்டது. பால், தயிர், மோர், நெய், வெண்ணெய் என ஒப்புடைய விதத்தில் உணவில் சேர்த்துக் கொள்ளப்பட்டதோடு குடிபானமாகவும் குளிர்பானமாகவும் மோர் பயன்படுத்தப்பட்டது.

அந்தக் கால சமூக மக்களில் உணவில் பால் பொருள்கள் தாராளமாக பயன்படுத்தகப்பட்டமையினால் ஆரோக்கிய துறையிலும் மேல்நிலை காணப்பட்டது. நவீன நோய்த் தாக்கம் இல்லாதவர்களாக மக்கள் வாழ்ந்தனர்.

ஆனால் இன்றைய நிலை மிக மிக மாறுபட்டதாகக் காணப்படுகின்றது. பால்மா பைக்கற்றைத் தேடி அலையும் நிலை ஏற்பட்டதுடன் நாளுக்கு நாள் அதன் விலையும் அதிகரிக்கின்றது. பால் பயன்பாடு குறைவடைந்தமையினால் போசாக்கின்மை நாளாந்த வருமானத்தில் கணிசமான தொகை பால் மாவுக்குச் செலவிட வேண்டிய நிலை. இப்படிப் பல்வேறு சிக்கல்கள் இப்போது ஏற்பட்டுள்ளன.

வீட்டுக்கொரு பால் மாடு வளர்ப்போமானால் இந்நிலையை முற்றாக மாற்ற முடியும். வீட்டிலேயே சுத்தமான சுகாதாரமான முறையில் பெறப்பட்ட தரமான பாலை எமது சுய தேவைக்குப் பயன்படுத்துவதோடு மிகுதியாக உள்ளதை மாடு வளர்க்க முடியாத உறவுகளுக்குக் கொடுத்து கணிசமான அளவு வருவாயையும் பெற்றுக் கொள்ளமுடியும். எனினும் நாம் இன்னும் அதனை உணரவில்லை.

### வருமானத்திற்கும், விவசாயத்திற்கும் மாடு வளர்ப்பு முக்கியமானது

சொந்தமாகச் சுயதேவையை நோக்கமாகக் கொண்டு பால் மாடுகளை வளர்க்கும் போது பெருமளவு நெருக்கடியைச் சந்திக்க வேண்டிய அவசியமில்லை. சுற்றுப்புறங்களிலுள்ள புல் மற்றும் இலை தழைகளை மாட்டிற்கு உணவாகக் கொடுப்பதோடு எமது உணவில் பயன்படுத்தாத கழிவுகளை மாட்டிற்கு உணவாகப்பயன்படுத்தலாம். மாட்டிலிருந்து பெறப்படும் சாணத்தை பயிர்களுக்குப் பசளையாக பயன்படுத்துவதோடு வீட்டிலுள்ள பயிர்கள் மற்றும்பூமரங்களின் வளர்ச்சிக்கும் பயன்படுத்தி வருமானத்தையும் பெற்றுக் கொள்ள முடியும்.

யாழ்.மாவட்டத்தின் பால் பயன்பாட்டிற்குத் தனி மனித குடும்ப முயற்சியின் மாடு வளர்ப்பு அருகிவிட்டது. அதனை சிலர் குடும்பத் தொழிலாக, பண்ணையாக மாடுகளை வளர்ப்பதன் மூலம் கணிசமான அளவு பால் உற்பத்தியை மேற்கொள்வதோடு மக்களுக்குத் தேவையான பாலின் அளவில் கணிசமான அளவு பங்கை நிறைவு செய்து வருகின்றனர். இவர்களிடமிருந்து பாலைக் கொள்வனவுசெய்து விற்பனை செய்வதோடு பாலைப்பயன்படுத்தி பல்வேறு உணவுப் பொருள்களையும் தயாரித்து சந்தைப்படுத்தும் நிறுவனமாக யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் விளங்குகிறது.

### மாடு வளர்ப்போர் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள்

அண்மைக்கால யுத்தச் சூழ்நிலையில் அசாதாரண நெருக்கடி நிலையில் பால்மாடு வளர்ப்போர் பல்வேறு விதமான நெருக்கடிக்கு உள்ளாகி வருகின்றனர். கால் நடைத் தீவனங்களுக்கான தட்டுப்பாடு, மருந்து வகைகளுக்கான தட்டுப்பாடு மற்றும் அவற்றின் விலையேற்றம் என்பன பால்மாடு வளர்ப்போரைப் பாதிப்புக்குள்ளாக்கி இருப்பதோடு வருமான ரீதியில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்.குடாநாட்டில் மந்தைகள் மேய்வதற்கான புல்வெளி வசதிகள் இல்லாத நிலையிலும் பயிர்ச்செய்கை நிலங்களிலும் பயன்படுத்தாத நிலங்களிலும் தான் குறிப்பிடத் தக்களவுக்கு மாடுகளைப் புல்மேய விட முடியும். இந்தவகையில் பண்ணை அமைப்பில் பால் மாடுகளை வளர்ப்போர் சந்திக்கின்ற நெருக்கடிகள் பல. பண்ணை அமைப்பு என்னும்போது 4, 5 மாடு வளர்ப்போரைத் தான் குறிக்கின்றது. வெளிநாடுகளிலுள்ள பண்ணை அமைப்பு முறையில் யாழ். குடாவில் பால் மாடு வளர்க்கப்படுவதில்லை. அதற்கான ஏது நிலைகளும் இல்லை.

### யாழ்கோ நிறுவனத்தின் தீவனம் கை கொடுக்கின்றது

பால் மாடுகளை வளர்ப்பதில் உள்ள சமகால நிலைப்பாடு பற்றி எஸ். கணபதிப்பிள்ளை (கோப்பாய்) என்பவர் பின்வருமாறு கூறுகின்றார்:

பால் மாடுகளை வளர்ப்பதன் மூலம் எனது குடும்பத்தில் ஜீவனோபாயத்தை வளமான நிலையில் ஓட்டிய காலம் என 2006 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்திற்கு முந்திய காலப்பகுதியைக் கூறலாம். அதற்குப் பின்னரான காலப்பகுதியில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. நெருக்கடி நிலைக்கு முந்திய காலப்பகுதியில் மாடுகளுக்கான தீவனங்கள்,

## செந்தாளன்

மருந்து வகைகள் என்பனவற்றை போதியளவு பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது. பாலை விற்பதன் மூலம் எனது குடும்பத்தை வளமான முறையில் பேணக்கூடியதாக இருந்தது.

தற்பொழுது தீவனங்களின் விலை அதிகரித்துள்ள சூழ்நிலையில் 2006ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்திலிருந்து 2007 ஒகஸ்ட் வரையான ஒரு வருடகாலப்பகுதிக்குள் பலத்த நெருக்கடிகளைச் சந்தித்தேன். தற்பொழுது யாழ்கோ நிறுவனம் உள்ளூரில் தயாரித்து வழங்கும் மாட்டுத்தீவனத்தை 50கிலோ ஆயிரத்து675 ரூபாவிற்குப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது. தரமாக உள்ள இந்தத் தீவனத்தை நெருக்கடியில்லாமல் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது. பாலையும் யாழ்கோ நிறுவனத்திற்குக்கொடுப்பதோடு அவர்களிடமிருந்து மாடுகளுக்கான தீவனத்தைக் கடன் அடிப்படையிலும் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் பால்மாடு கொள்வனவு செய்வதற்கு அங்கத்தவர்களுக்கு 25 ஆயிரம் ரூபா வரை குறைந்த வட்டிக்கு கடன் வழங்கப்படுகிறது. கடன் ஒருவருட காலப்பகுதியில் தவணை முறையில் திருப்பிச் செலுத்த முடியும். எனது குடும்பம் போசாக்கு நிலையில் வாழ்வதற்கு, கைகொடுத்தது நான் வளர்க்கும் பசு மாடுகள் தான். தற்பொழுது எந்தவிதமான நெருக்கடியும் இல்லாமல் பால்மாடுகளை வளர்க்கக் கூடியதாக உள்ளது.

பால் மாடுகளுக்கான தீவனத்தை காலத்துக்குக் காலம் மாறிமாறி பயன்படுத்துவதால் மாடுகள் பாதிக்கப்படுவதோடு பால் உற்பத்தி அளவும் திடீர் திடீரென வீழ்ச்சி அடையும். எனவே யாழ்கோ நிறுவனம் தொடர்ச்சியாக கால்நடைத் தீவனத்தை எந்த நெருக்கடி நிலையிலும் தாராளமாக விற்பனை செய்யக் கூடிய தயார் நிலையில் இருக்க வேண்டும். இது அவர்கள் பால் மாடு வளர்ப்போருக்கு செய்யும் பெரிய உதவியாக இருக்கும். கொழும்பில் இருந்து கொண்டுவரப்படும் மாட்டுத் தீவனத்திலும் பார்க்க யாழ்கோ நிறுவனம் தயாரிக்கும் தீவனம் விலையும் மிகக் குறைவு. தரமும்கூடியது - என்றார்.

### நல்ல வருமானம் தரும் பால் மாடு வளர்ப்பு

பால் மாடு வளர்ப்புத் தொடர்பாக கொக்குவிலைச் சேர்ந்த திருமதி அன்னமுத்து கருத்துத் தெரிவிக்கையில்:

நான் வளர்க்கும் இரண்டு பசு மாடுகளும் கோமாதா மட்டுமல்ல, என் குல மாதாக்களும் அவையே தான். பால் மாடு வளர்ப்பதற்கு முன்னர் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்த எனது குடும்பம் மாடு வளர்க்க தொடங்கிய பின்னர் எந்தவிதமான நெருக்கடியுமின்றி வளமான நிலையில் வாழக்கூடியதாக உள்ளது. நான் மாடுகளுக்குப் பெருமளவில் தீவனம் வைப்பதில்லை. புல், இலைகுழையோடு குறைந்தளவில் தான் மாட்டுத்தீவனம் பயன்படுத்துகின்றேன். எதிர்பார்த்த அளவிலும் பார்க்க நல்ல பயன் கிடைக்கின்றது. எனது குடும்பத்திற்கும் போசாக்கு உணவு கிடைப்பதோடு நல்ல வருவாயும் கிடைக்கிறது. பால் மட்டும் தான் வருமானமல்ல. மாடுகளைப் பொருத்தமான முறையில் சினைப்படுத்தல் செய்வதன் மூலம் இரண்டு மாடுகளிலிருந்து வருடம் முழுவதும் பால் கிடைப்பதோடு மாடுகள் ஈனும் கன்றுகளையும் நல்ல விலைக்கு விற்கக் கூடியதாக இருப்பதால் ஆண்டு தோறும் அதன் மூலமும் கணிசமான அளவு வருமானம் கிடைக்கிறது. பால்மாடு வளர்ப்பது தொடர்பாக நான் கூறக்கூடிய ஆலோசனை என்னவென்றால், பால்மாடு வளர்ப் பதைத் தொழி லாகவோ சுமை யாகவோ கருதாது பொழுதுபோக்காக வளர்க்கலாம்.

எமக்கு ஆர்வம் இருக் குமானால் அதில் எப்போதும்தோல்வி இல்லை. பால்மா விலை கூடிவிட் டது என்றோ தட்டுப்பாடு என்றோ கவலைப்படத் தேவையில்லை. எந்த நேரமும் மகிழ்ச்சியாக இருப்பதற்குப் பால்மாடு வளர்ப்பு மிகவும் நல்ல முயற்சி - என்றார்.

### யாழ்கோ நிறுவனத்தின் பணிகள் இவைதான்

பால் உற்பத்தி சந்தைப்படுத்தல், பால் பொருள்களின் தயாரிப்புக்கள் தொடர்பாக யாழ். மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் (யாழ்கோ) கணக்காளரும் பதில் பொது முகாமையாளருமான தி.ஜெயகணேஸ் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்டத்தின் பால்ப் பொருள்களை உற்பத்திசெய்தல், விற்பனை செய்தல், பாலைக் கொள்வனவு செய்தல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளும் நிறுவன மயப்படுத்தப்பட்ட அமைப்பு யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தான்.

சங்கத்தின் தலைமை அலுவலகம் திருநெல்வேலி கொலனிப்பகுதியில் (கோப்பாய்) அமைந்துள்ளது. எமது நிறுவனம் தீவன உற்பத்தி, பால் பதனிடல், ஐஸ்கிறீம் தயாரித்தல், யோக்கட் தயாரிப்பு, பாலிலிருந்து கொழுப்பு நீக்கல், நெய் உற்பத்தி, பதனீர் தயாரிப்பு என்பனவற்றை மேற்கொண்டு வருகின்றது. நிறுவனத்துடன் இணைந்த நிலையில் பண்ணை, பண்ணைக்கான புல் வளர்ப்பு, கோழிப் பண்ணைக்கான கட்டட வசதி என்பனவற்றைக் கொண்டுள்ளது.

தற்போது நாம் 24 கிளை நிலையங்கள் மூலம் குடாநாடு முழுவதிலும் -வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் உட்பட -பால் கொள்வனவு, பால் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்தல் போன்றவற்றை மேற்கொண்டு வருகின்றோம்.

2 ஆயிரம் பேர் பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களாக உள்ளனர். சராசரி 700இற்கு மேற்பட்ட அங்கத்தவர்களிடம் இருந்து காலை வேளைகளில் பால் கொள்வனவு செய்யப்படுகின்றது. மாதாந்தம் சராசரியாக 71 ஆயிரம் லீற்றர் பால் கொள்வனவு செய்யப்படுகிறது. அங்கத்தவர்களிடம் இருந்து 37 ரூபாவிற்கு லீற்றர் பால் கொள்வனவு செய்யப்பட்டு லீற்றர் 45 ரூபா வீதம் விற்பனை செய்யப்படுகின்றது. லீற்றருக்கு ஒரு ரூபா வீதம் அங்கத்தவர்களின் பெயரில் சேமிப்புச் செய்யப்படுகின்றது.

### அங்கத்தவர்களுக்குக் கடன் வசதிகள்

அங்கத்தவர்களுக்கு இலகுகடன் வசதி, குறைந்த வட்டியில் ஒரே தினத்தில் வழங்கப்படுகிறது. இரண்டு உறுப்பினர்களின் ஒப்பம் இடுவதன் மூலம் கடனைப் பெற்றுக் கொள்வதோடு 12 மாதத் தவணையில் திருப்பிச் செலுத்தவகை செய்யப்பட்டுள்ளது. அங்கத்தவர்களின் நன்மைக்காக முழுமையாகச் செயற்படும் யாழ். மாவட்ட கூட்டுறவுச்சங்கம் பால் பொருள் தயாரிப்பில் தற்பொழுது ''பநீர்'' என்ற புதிய தயாரிப்பினை அறிமுகம் செய்துள்ளது.



தயிரை மூலப் பொருளாகக் கொண்டு தயாரிக்கப்படும் பநீர் கறி சமைப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. இது 150 கிராம் 50 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றது.

சங்கத்தின் வளர்ச்சிப் பாதையில் போர்க்காலச் சூழ்நிலை பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்தினாலும் கால் நடைத்தீவன உற்பத்தி விற்பனை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சங்கத்தின் செயற்பாடுகளுக்கு யாழ். மாவட்ட அரசஅதிபரும் தொண்டு நிறுவனங்களுக்கு் வழங்கி வரும் உதவிகள் மூலம் திட்டமிட்டபடி பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன - என்கிறார் ஜெயகணேஸ்.

யாழ்.மாவட்டத்தில் கால்நடைகளை வளர்ப்பதற்கு உதவி இல்லை என்றோ வள வசதி இல்லை என்றோ சோர்ந்திருக்காமல் குடும்பத்திற்கு ஒரு பால் மாட்டை வளர்க்க எல்லோரும் முன்வரவேண்டும். பால்மாடு வளர்ப்பதனால் குடும்பத்திற்கு தேவையான பாலைப் பெறுவதோடு, பால்மா வாங்குவதற்கு ஏற்படும் மேலதிக செலவினையும் தவிர்த்துக் கொள்ளலாம். அத்துடன் பால் விற்பனை மூலம் வருமானத்தையும் ஈட்டிக் கொள்ளமுடியும். மாடு எங்களது செல்வம் என்ற பண்டைய மக்களின் கருத்து நிலை உருவாக்கும் மீண்டும் எமது மண்ணில் உருவாவது எமது மண்ணுக்கு வளம் சேர்ப்தோடு குடும்ப நலத்துக்கும் வளம் சேர்ப்பதாக அமையும். ✱

## மொத்தத் தேவையில் 10 சதவீதம் மட்டுமே வீட்டுப் பசுக்கள் மூலம் கிடைக்கின்றன

யாழ். மாவட்ட மக்களுக்கான பால் உற்பத்தியும் பயன்பாடும் தொடர்பாக கால்நடை உற்பத்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் திருமதி வக்சலா அமிர்தலிங்கம் கருத்துத் தெரிவிக்கையில் பின்வருமாறு கூறினார்.

சாதாரண வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதரும் நாளாந்தம் 150 தொடக்கம் 200 மில்லி லீற்றர் அளவு பாலைக் குடிக்கவேண்டும். இந்த வகையில் நோக்கும்போது ஒரு நாளைக்கு யாழ்.மாவட்ட மக்களுக்குத் தேவையான பாலின் அளவு

$$\frac{\text{மக்கள் தொகை X 175 மில்லி லீற்றர்}}{\text{1000 மில்லி லீற்றர்}} = \text{X X X லீற்றராக இருக்கும்.}$$

இந்த வகையில் யாழ் மாவட்ட மக்களுக்குத் தேவையான பாலின் மொத்த 10 சத வீதமான அளவு பாலை மட்டுமே உள்ளூரில் வளர்க்கப்படும் பசு மாடுகளில் இருந்து பெற்றுக் கொள்ள முடிகிறது.

மிகுதி இறக்குமதி செய்யப்படும் பால்மா வகைகள் மூலம்தான் நிறைவு செய்யப்படுகின்றது.

சொந்தமாக ஒரு பசுவை வளர்த்து அதில் இருந்து சுத்தமான பாலைப் பெற்றுப் பயன்படுத்தும் மனோபாவம் மக்களிடம் அதிகம் ஏற்பட வேண்டும். இந்நிலை ஏற்படாமை கவலைக்குரியது - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்



# தொண்டைமானாறு
# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம்




எம்பெருமான் ஆலய புணர்நிர்மான வேலைகள் கடந்த (24.01.2008) வியாழக்கிழமை பாலஸ்தாபன நிகழ்வுகளுடன் ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் துரிதகதியில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மிக விரைவில் கும்பாபிஷேகம் நடைபெறஇருப்பதனால் முருகன் அடியார்களும் உங்களின் பங்களிப்பினைச் செலுத்தி திருப்பணியில் பங்கு கொள்ளுமாறு வேண்டுகின்றோம். பங்களிப்பினை செய்ய விரும்பும் அடியார்கள் ஆலய முகப்பில் உள்ள திருப்பணி உண்டியல் மூலமாகவும் அல்லது திருப்பணிக்காரியாலயத்திலும் நேரிலே வழங்கி பற்றுச்சீட்டினை பெற்றுக் கொள்ளலாம். வங்கிமூலம் நிதியினை செலுத்த விரும்பும் அடியார்கள் செலான்வங்கி, யாழ்ப்பாணம் க/கு.இல. 0850-01308424 101 எனும் கணக்கிலும் இலங்கை வங்கி மூலம் செலுத்த விரும்புவோர் இலங்கைவங்கி, பருத்தித்துறைக் கிளை க/கு.இல.7345848 எனும் கணக்கிலும் செலுத்தலாம் என்பதை சந்நிதியான் அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

திருப்பணிச் சபையினர்,
செல்வச்சந்நிதி ஆலயம்,
தொண்டைமானாறு.

(70998)

# திருமண அழைப்பு

அன்புடையீர்
நிகழும் மங்களகரமான சர்வசித்து வருடம் தைமாதம் 28ஆம் நாள் (11.02.2008) திங்கட்கிழமை காலை 9.40 மணி தொடக்கம் 10.05 மணி வரையுள்ள ரேவதி நட்சத்திரமும், சார்த்வீக யோகமும் கூடிய மீன லக்கின சுபமுகூர்த்த சுபவேளையில்

எங்கள் சிரேஸ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**சிவஸ்ரீ.முகுந்தன் குருக்கள்**

எங்கள் சிரேஸ்ட புத்திரி
திருநிறை செல்வி
**லோகிதா**

ஆகிய இருவருக்கும் இறைவன் திருவருள் துணைகொண்டு பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு திருமணம் அல்லையம்பதி சிவசுப்பிரமணியம் தேவஸ்தான "வடிவேலர் மணிமண்டபம்" இல் நடைபெற இருப்பதால் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசிர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்**

திரு.திருமதி நவரத்தினம் குடும்பம்
நி.மு.: ஸ்ரீ ஞானதுர்க்கை அம்பாள் தேவஸ்தானம்,
ப.ம.தி.மிருசுவில்.
த.மு.: நெல்லியடி கிழக்கு, முடக்காடு, கரவெட்டி

(இரு வீட்டார் அழைப்பு)

திரு.திருமதி சிறிதரன் குடும்பம்
(அத்துளு அம்மன் பூசகர்)
"அரித வாசா"
நுன்னாலை வடக்கு, கரவெட்டி

பிற்குறிப்பு: வரவேற்பு உபசாரம் மணமகள் இல்லத்தில் பிற்பகல் 4 மணியளவில் நடைபெறும்.

## தவறிவிட்டது

சிதம்பரப்பிள்ளை தர்மலிங்கம் என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம், விசேட அடையாள அட்டை மற்றும் 500 - 2778 இலக்கமுடைய மோட்டார் சைக்கிளிற்கு இராணுவத்தால் வழங்கப்பட்ட பாஸ் என்பன யாழ்ப்பாணத்திற்கும் நல்லூரிற்கும் இடையில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இல 31 முதலாம் குறுக்குத் தெரு - நல்லூர் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(71006)




# புத்தகச் சாலை

### ஒருநோர்வே தமிழரின் அருமையான அனுபவங்கள்



புலம்பெயர்ந்து நோர்வேயில் வசித்து வரும் ஆசிரியர் நல்லையா சண்முகப்பிரபு தனது 50ஆவது அகவை நிறைவில் தான்கண்ட அனுபவங்கள், அதனூடு பெற்றுக்கொண்ட படிப்பினைகளைக் கவிதைகளாகவும் கட்டுரைகளாகவும், நேர்காணல்களாகவும் உருவாக்கி, தொகுத்து இந்நூலை ஆக்கியுள்ளார். இந்நூலை சென்னை மணிமேகலைப் பிரசுரத்தினர் வெளியிட்டுள்ளனர்.

### ஆண்டிகேணி ஐயனார் புராணம்



காரைநகர் வியாவில் ஆண்டிகோணி ஐயனாரின் மேல் வட்டுக்கோட்டையூர் பண்டிதர் க.மயில்வாகனார் பாடிய தலபுராணம் நூல் வடிவில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூலின் உரை ஆசிரியராக இளவாலையூர் சைவப்புலவர் சு.செல்லத்துரை பணியாற்றியுள்ளார்.

காரைநகர் மணிவாசகர் சபை இந்த நூலை வெளியிட்டுள்ளது.

### நீங்களும் எழுதலாம்



மனிதர்களிடமுள்ள படைப்பாற்றலை வெளிக்கொண்டு வரவும், ஊக்கப்படுத்தவும் தூண்டு கோலாக வெளிவருகின்றது நீங்களும் எழுதலாம் இதழ்.

இரு மாதக் கவிதை இதழாக வெளிவரும் இந்த இதழின் ஆசிரியராக எஸ்.ஆர். தனபாலசிங்கம் பணியாற்றுகின்றார்.

### வெள்ளிமலை



வலிகாமத்தின் பிரதேச வளங்கள், திறன்கள் என்பவற்றை வெளிக்காட்டும் சஞ்சிகையாக இது வெளிவருகின்றது.

3மாதங்களுக்கு ஒரு தடவை வெளிவரும் இச்சஞ்சிகையை வலிகாமம் தெற்குப் பிரதேச வாசகர் வட்டம் வெளியிட்டு வருகின்றது.

### கவிதைக் கலவசம் பல்வகைப்பாடல்கள்



வட்டுக்கோட்டையூர் கலைஞர் நா.புவனசுந்தரம் பாடசாலை மாணவர்களுக்கும் சஞ்சிகைகளுக்கும் என எழுதிய பாடல்களின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது.

வட்டுக்கோட்டை தமிழ் இலக்கிய மன்றத்தார் வெளியிட்டுள்ள இந் நூலில் 32 பல்வேறு வகைப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

### இலாபம் தரும் நவீனவிவசாயம்



விவசாயத் துறையில் பல்வேறு தொழில்நுட்பங்கள், குறைந்த செலவில் நிறைந்த பொருளைப் பெறும் வழிகள் போன்றவை குறித்து விளக்கும் இந்நூலை மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனத்தின் பொருளாளர் ந.கணேஸ் எழுதி வெளியிட்டுள்ளார்.

### குருகவி ம.வே.மகாலிங்கசிவம் வரலாறும் ஆக்கங்களும்



தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றிய குருகவி ம.வே.மகாலிங்கசிவம் வாழ்வு, பணி என்பவற்றை உலகறியச் செய்யவும் அவரது ஆக்கங்களைத் தமிழுலகம் பெற்றுக் கொள்ள வகை செய்யவும் இந்நூலை பா.மகாலிங்கசிவம் தொகுத்துள்ளார்.

இந்நூலை பட்டப்படிப்புகள் கல்லூரி வெளியிட் டுள்ளது.

இந்நூலின் குருகவியன் ஆக்கங்களுடன் அவரைப்பற்றி பல்வேறு புலமையாளர்களும் எழதிய ஆக்கங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

### அவசர முதலுதவி
(உடனடித் தேவையான பயிற்சி நூல்)




அவசர காலத்தில் ஒவ்வொருவரும் தெரிந்திருக்க வேண்டிய, உடனடியாக செயற்படுத்த வேண்டிய முதலுதவிகள், அந்த உதவிகளுக்குத் தேவையான பொருள்கள், சுகாதார கவனிப்பு, உளவள முதலுதவி, உடற்கூறு, உடற்றொழியியல் போன்ற பல்வேறு முக்கிய அம்சங்களையும் உள்ளடக் கியதாக இந்நூல் வெளியிடப்பட்டுள் ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளையால் வெளியிடப்பட்டுள்ள இந்நூலைக் கிளையின் தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் தொகுத்துள்ளார்.

## கண்ணீர் அஞ்சலி



முன்னாள் யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரியும் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அதிகாரியும் புகழ்பூத்த சகலதுறை விளையாட்டு வீரருமான அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய

**அமரர் றோகான் இராஜசிங்கம்**

அவர்கள் சென்னையில் திடீர் மரணம் அடைந்ததையிட்டு நாம் அதிர்ச்சி அடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த கவலையையும் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின் றோம்.

யாழ்.மாவட்ட விளையாட்டு துறை
உத்தியோகத்தர்கள்

(71004)

## மரண அறிவித்தல்

### A.E செல்வராசா

(ஓய்வுற்ற பிரதம லிகிதர் மாவட்ட செயலகம் கிளிநொச்சி)



இரண்டாம் குறுக்குத்தெரு யாழ்ப் பாணத்தைப் பிறப்பிடமாகவும், 60/1, கோயில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட A.E. செல்வராசா கனடாவில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசைப் பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான திரவியம் பிலிப் - மரியம்மா தம்பதியரின் மருமகனும் லூட்ஸ் புஸ்பராணி (கனடா)யின் அன்புக் கணவரும் இவோன் (ஜேர்மனி), கிளஸ்ரன் (கனடா), விஜேந்திரா (கனடா), ஆகியோரின் அன்புத் தந்தையும் வரதராஜன் (ஜேர்மனி)மாலினி (கனடா), நிலுவர் (கனடா) ஆகியோரின் மாமனாரும் யசிந்தா காலஞ்சென்ற வெனிற்ரா ஆகியோரின் மைத்துனரும் A.V. சூசைதாசனின் சகலருமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் கனடாவில் இன்று (10.02.2008) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
A.V.சூசைதாசன் (சகலன்)
T.P. கனடா 001-4162851567

60/1, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

(70997)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தமிழர் தேடும் சுதந்திரம்

மேற்கிந்திய வல்லாதிக்கங்களான காலனித்துவ சுரண்டல் சக்திகள், கிண்டிக் கிளறி ரணகளப்படுத்தி விட்டுப் போனதால் எழுந்த தீராத வலிகளில் இருந்து மூன்றாம் மண்டல நாடுகள் இன்னும் விடுபட்டுக் கலூன்றி எழுந்து நிற்கவில்லை. காலனித்துவம் விதைத்து விட்டுச் சென்ற விஷத்தின் நீண்டகால விளைவுகளை இன்னமும் அனுபவித்துத் தட்டுத்தடுமாறித் தள்ளாடிக் கொண்டிருக்கின்றன.

பூமியின் முகத்தைக் காலனித்துவம் கோரமாக - அகோரமாக - ஆழமாக - சிதைத்துவிட்டே மூன்றாம் மண்டல நாடுகளிலிருந்து அகன்றிருக்கின்றது.

தன்னுடைய ஆதிக்க, அதிகார வலுவால் பூமியின் பிற பிராந்தியங்களை ஆக்கிரமித்த காலனித்துவம், ஒரு புறம் தேசங்களை - தேசியங்களை - பிரித்து, சமூகங்களைப் பிளந்து, பண்பாடுகளைச் சீர்குலைத்து, சுதேசிகளைச் சின்னாபின்னப்படுத்திய அதேசமயம் -

மறுபுறம், வெவ்வேறு தனித்துவமான பண்பியல்புகளைக் கொண்ட தேசியங்களை வல்வந்தமாக இணைத்து, ஒன்றின் கீழ் மற்றையதை அடிமையாக்கி, அச் சமூகங்களை எதிரி வர்க்கங்களாக உருவேற்றி, உசுப்பேற்றி, நாகரிகங்களை ஒன்றையொன்று கபளீகரம் செய்ய வைத்து, தேசியங்களை நிரந்தர விரோத சக்தியாக - பகையுறவுப் பங்காளிகளாக - மாற்றிவிட்டுச் சென்றிருக்கிறது.

இந்தப் பின்னதன் விளைவைக் கொடூர யுத்தமாக - சுலபமாகத் தீர்க்க முடியாத இனச் சிக்கலாக - பேரழிவு தரும் கொடூரப் போராக - இன்றும் அறுவடை செய்து கொண்டிருக்கும் அபாக்கிய பூமியில் இலங்கைத் தீவும் அடங்கும்.

சரித்திர காலம் தொட்டே தனித்தனிப் பண்பாடு, மொழி, பழக்க வழக்கம், தெளிவாக அடையாளப்படுத்தப்பட்ட பாரம்பரியத் தாயகப் பூமி ஆகியவற்றோடு விளங்கிய இரு தேசியங்களை - சிங்களம், தமிழர் தாயகம் ஆகிய இரு தேசங்களை - தனது ஆட்சி அதிகார நலனுக்காக ஒன்றிணைந்த காலனித்துவம், தனது ஆதிக்கப் பிடியைத் துறந்த சமயத்தில் கூட நீதியாக நடந்து கொள்ளாததன் விளைவை இன்று இலங்கைத் தீவு விரும்பியோ விரும்பாமலோ எதிர்கொண்டபடி இருக்கிறது.

சுதந்திரத்துக்காகவும், கௌரவ வாழ்வுக்காகவும், நீதிக்காகவும் ஈழத் தமிழர்கள் இன்று நடத்தும் வாழ்வா, சாவா என்ற உயிர்ப் போராட்டம் இந்த இலங்கைத் தீவை ஆக்கிரமித்த மேற்குலகக் காலனித்துவம் - குறிப்பாக பிரிட்டிஷ் சாம்ராச்சியப் பேராதிக்கம் - இத் தீவில் விதைத்து விட்டுச் சென்ற நச்சு விதையின் பெறுபேறன்றி வேறில்லை.

மனிதன் உணர்வற்ற, உயிரற்ற, விருப்பு - வெறுப்பற்ற, அசைவற்ற, வெறும் ஜடப்பொருள் அல்லன். அவன், சுயவுணர்வுடன், சுயவிருப்பு - வெறுப்புகளுக்கு ஏற்ப, சுய முடிவுகளை எடுத்து, சுய பிரக்ஞையுடன் தனியனாகவும் அதேசமயம் குடும்பம், கிராமம், நகரம், சமூகம் என்று கூட்டாகவும் வாழ உரிமையுடைய ஆறறிவு ஜீவன்.

'மனிதன் சுதந்திரமாக வாழ விதிக்கப்பட்டிருக்கின்றான்' (Man is Condemned to Freedom) என்றுரைத்திருக்கின்றார் பிரெஞ்சு தத்துவ வித்தகர் சாத்தர். அது அவனது வாழ்நிலை உரிமை மட்டுமல்ல, தலைவிதியும் கூட. அதற்காகவே அவனது வாழ்நிலைப் போராட்டமும் முடுக்கி விடப்பட்டிருக்கின்றது.

மனித வாழ்வைப் பொறுத்தவரை சுதந்திரம் என்பது வெறும் உணவும், உடையும், உறைவிடமும், பொழுது போக்கும் கட்டுப்பாடின்றிப் பெறுவதல்ல. அதேபோல் அபிவிருத்தியையும், வசதிகளையும் ஈட்டுவதை மட்டும் அது குறிக்கவில்லை. அதற்கு அப்பாலும் அதில் அனேகம் உண்டு.

சுதந்திரம் என்பது மனவுலகத்தின் வெறும் மானசீகப் பொருளும் அல்ல.

அது, சமூக வாழ்வியல் நிலையோடு ஒன்றிணைந்து பின்னிப்பிணைந்தது. ஒருபுறம் அகவயமாகவும், மறுபுறம் புறநிலையாகவும் அனுபவித்து, அறியப்பட்ட உரிமையுள்ள விவகாரம் அது. அடிமைத்தளையிலிருந்து - ஆதிக்க சக்திகளின் பிடியிலிருந்து - அதிகார விலங்குக் கட்டுகளிலிருந்து - ஒடுக்குமுறை நெருக்குவாரங்களில் இருந்து மனிதன் விடுபட்டு, சமூகத்தில் ஒத்திசைவாகவும், கௌரவ வாழ்நிலையோடும், பிற மனிதனுடன் சம அந்தஸ்துடனும் சமத்துவமாகப் பரிமளிப்பதை குறிக்கின்றது இந்த வாழ்வியல் சுதந்திரம்.

அதிகார ஆதிக்கப் பிடிகள் அற்றுப்போக, அடக்குமுறைச் சுவர்கள் தகர, தனி மனிதனின் அக வாழ்வும், புற வாழ்வும் தேவையற்ற தளைகள் நீங்கித் தழைத் தோங்க வழி செய்யப்படுவதே உண்மையான சுதந்திரமாகும்.

மதம், மொழி, இனம், சாதி, பால், நிலை ஆகியவை காரணமாகப் பாகுபடுத்தலுக்கு உள்ளாக்கப்படாமல் -

தன்னுடைய சமூக, இனப் பண்பியல்புகளைக் கட்டிக் காத்து, தனது மத நம்பிக்கையைப் பேணி, கருத்து வெளியிடும் சுதந்திரம் உட்பட அடிப்படை உரிமைகளை அனுபவித்து, உணர்வுபூர்வமாக ஒரு மனிதன் வாழ்வதற்கு உரித்துடையவன். இது உறுதிப்படுத்தப்படுவதே உண்மைச் சுதந்திரம் ஆகும்.

காலனித்துவ ஆதிக்க சக்திகளில் இலங்கைத் தீவின் பெரும்பான்மையினரான தேசியத்திடம் அடிமை சாசனமாக எழுதி ஒப்படைக்கப்பட்ட தனது இந்த உரிமைகளை - அதாவது தனது தேசியத்தின் இறைமையை - மீட்டெடுப்பதே தனது சுதந்திர மீட்பு எனத் தமிழக தேசம் கருதுகின்றது. அந்தச் சுதந்திரத்தையே தமிழர்கள் தேடுகின்றனர். அதன் பொருட்டே இந்தப் போராட்டம் எல்லாம்.

# சிவிலியன் இலக்குகளை தாக்குவதைத் தவிர்க்குக!

## செஞ்.சர்வதேசக் குழு வேண்டுகோள்

கொழும்பு, பெப்.10

இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது பொதுமக்கள் இலக்குகளைத் தாக்குவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

செஞ்சிலுவைக் குழு நேற்றுமுன்தினம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இது பற்றிக் கூறப்பட்டுள்ளது.

இலங்கையில் இவ்வருட ஆரம்பத்திலிருந்து பொதுமக்களின் உயிரிழப்பு அதிகரித்துள்ளதை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அவதானித்துள்ளது.

நாட்டின் வடக்கு, கிழக்கு மற்றும் தென்பகுதியில் மேற்கொள்ளப்படும் கண்மூடித்தனமான தாக்குதல்கள் காரணமாகவே இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.

மேலும் இதன் காரணமாக இடம்பெயரும் மக்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

அதிகரித்துள்ள வன்முறைகள், பொதுமக்கள் மீது ஏற்படுத்தும் தாக்கம் ஆகியன குறித்துத் தாம் கவலையடைந்துள்ளார் என செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் இலங்கைக்கான தலைவர் டூன்வன்டன் ஹோவ் தெரிவித்துள்ளார்.

மோதலில் எவ்வகையிலும் பங்கெடுக்காத பொதுமக்கள், காயமடைந்தவர்கள் மற்றும் காயமடைந்து கைதுசெய்யப்பட்ட படை வீரர்கள் போன்றோரை சர்வதேச மனிதாபிமான சட்டங்களின் கீழ், சகல சூழ் நிலைகளிலும் பாதுகாக்க வேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களின்படி மோதலில் சம்பந்தப்பட்டுள்ளவர்கள் பொதுமக்களையும், பொது இலக்குகளையும் வித்தியாசப்படுத்தி அவற்றைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் -

மேலும் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது இது குறித்த கவனம் அவசியம் -

வடக்கு, கிழக்கில் அதிகரித்து வரும் மோதல்கள் மனிதாபிமானப் பணியாளர்களுக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளதுடன் மனிதாபிமான உதவி வழங்குவதையும் பாதித்துள்ளது. - என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

## கரப்பந்தாட்டப் போட்டி பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,பெப்.10

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் பதிவு செய்த கழகங்களுக்கிடையில் இன்று நடைபெறவிருந்த இருபாலாருக்குமான கரப்பந்தாட்டப் போட்டி பிற்போடப்பட்டுள்ளது என பிரதேச செயலாளர் சு.முரளிதரன் தெரிவித்தார்.

இப்பிரதேச செயலகத்தின் முன்னாள் விளையாட்டு உத்தியோகத்தரும் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அலுவலருமான றொகான் ராஜசிங்கம் காலமாதை அடுத்தே இப்போட்டி பிற்போடப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (202)

## மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப்.10

கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் மு.மகேந்திரன் தலைமையில் நடைபெற்றவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் நா.உலகநாதன் கலந்துகொள்வார். (202)

* * *

நவாலி,பெப்.10

ஆனைக்கோட்டை அ.மி.த.க.பாடசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி நாளை திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் சி.நாகையா தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி திருமதி ஜோய்மகிழ் மகாதேவாவும் கலந்துகொள்வார்.

(202- 100)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.10

சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு பாடசாலை அதிபர் சே. இராஜ்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சங்கானை கோட்ட கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசு பிரதம விருந்தினராக கலந்துகொள்கிறார். (அ-2-29)

## நாளை

| | |
|---|---|
| தை - 28 | 11.02.2008 |
| | திங்கட்கிழமை |
| திதி : பஞ்சமி | பின்னிரவு 3.48 |
| நட்சத்திரம் : | ரேவதி |
| | பின்னிரவு 6.11 |
| சுபநேரம் : | 12.34-02.04 |
| ராகுகாலம் : | 08.04-09.34 |

## ஓடையில் ஓட்டோவுக்குள்ளிருந்து வெள்ளியன்று மீட்கப்பட்ட சடலங்கள் மட்டு. இளைஞருடையவை

கொழும்பு,பெப்.10

மட்டக்களப்பு - பொலநறுவை மாவட்டங்களின் எல்லையில் வெலிகந்தை செவனப்பிட்டியவில் உள்ள ஓடை ஒன்றுக்குள் வீழ்ந்து கிடந்த ஓட்டோவுக்குள்ளிலிருந்து நேற்று முன்தினம் மீட்கப்பட்ட சடலங்கள் இரண்டும் மட்டக்களப்பைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களுடையவை என இனங்காணப்பட்டுள்ளன.

26 வயதான எஸ்.மாணிக்கவாசகம் மற்றும் 19 வயதான கே.கதிரீசன் ஆகிய இருவரின் சடலங்களே அவை என்று அடையாளம் காணப்பட்டுள்ளதாக வெலிகம உதவிப் பொலீஸ் சுப்பிரின்டென்ட் ஏ.ஜி.குணரத்னா தெரிவித்தார்.

இளைஞர்கள் இருவரும் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்ட பின்னர், அவர்களின் சடலங்கள் ஓட்டோவுக்குள் வைக்கப்பட்டு ஓடைக்குள் தள்ளப்பட்டிருப்பதாக விசாரணைகள் மூலம் தெரியவந்திருப்பதாக பொலிஸ் தரப்பில் கூறப்பட்டது.

இச்சம்பவம் குறித்து முழு அளவில் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டிருப்பதாகவும் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

## வாழும்போதே மனம் மாறுவோம்

ஒப்புரவின் காலமாகிய தவக்காலம் எமக்கு பல்வேறு அழைப்புகளை விடுக்கிறது. மனிதன் - மனிதனோடும் மனிதன் - இறைவனோடும் திறந்த மனதோடு ஒப்புரவு கொள்ள வேண்டும் என்பது ஒருவகை அழைப்பாகும்.




நாம் பிறக்கும் போதே இறக்கும் திகதி எழுதப்பட்டுவிட்டது. இந்தப் பூமி எமக்கு ஒரு தங்குமிடம் போன்றது. எமது வாழ்வுக்கு எந்நேரமும் முற்றுப் புள்ளி வைக்கப்படலாம். நாம் எதிர்பாராத வேளையில் இறைவன் எமது பயணத்தை முடித்து வாவென அழைப்பார் அப்போது பாவிகளாய் அல்ல தூய மனத்தவராய் எந்நேரம் மரணத்தை எதிர்கொள்ளத் தயாராய் இருக்க வேண்டும். எனவே இறுதிவரை காத்திராது இன்றே மனமாற்றம் பெறவேண்டும்.

எனக்கு இன்னும் காலம் இருக்கிறது இறுதியில் ஏற்புடைய வாழ்வு வாழலாம்; அதுவரை அனுபவிப்போம்; பட்டம், பதவி, புகழ் சேர்ப்போம் என்று எண்ணுவது தவறாகும்.

கடிகாரம் முன்னோக்கி ஓடிக்கொண்டிருக்க எமது ஆயுள் பின்னோக்கி சென்று கொண்டிருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது.

இயற்கை அனர்த்தங்களும், சமகால மரணங்களும் வயது வித்தியாசம் பார்த்தா நடக்கின்றன. மழலைகள், சிறுவர்கள், இளைஞர்கள், முதியோர், மதவாதி, மிதவாதி, இனவாதி, மொழிவாதி என்று எவரையும் விட்டுவைக்கவில்லை. இந்தச் சம்பவங்கள் நாம் அனைவரும் இறப்பிற்குரிய வர்கள் என்பதை எந்நேரமும் நினைவு படுத்துகின்றன.

மரணம் வாழ்வின் முடிவல்ல. நித்திய வாழ்வின் ஆரம்பம். எனவே எமது வாழ் நாளில் எஞ்சியுள்ள நாள்களையாவது தகுந்த முறையில் பயன்படுத்துவோம். மனிதன் உயிர்பெற அதற்கான ஆன்மீக கட்டுமானங்களை கல்வாரியின் அடித்தளத்தில் இருந்து தொடங்குவோம். - எஸ். யோகதாஸ் (கொழும்புத்துறை).

## நாட்டின் சுதந்திரத்துக்காக உழைத்த சேர். பொன். அருணாசலம் ஏமாற்றப்பட்டார்



1914ஆம் ஆண்டு பெப்ரவரி பதின்மூன்றாம் திகதி சேர் பொன். அருணாசலம் சேர் பட்டம் பெற்ற நாளாகும்.

பொன்னம்பல முதலியாரின் கடைசி மகனும்சேர் முத்துக்குமாரசாமி, சேர் பொன். இராமநாதன் ஆகியோரின் சகோதரனுமான அருணாசலத்திற்கு 1914 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் பதின்மூன்றாம் திகதி பிரித்தானிய அரசு சேர் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

பிரிட்டிஷ் அரண்மனையான பக்கிங்ஹாம் பலஸில் வைத்து அப்போதைய பிரிட்டிஷ் அரசர் அருணாசலத்திற்கு சேர் பட்டம் வழங்கியிருந்தார்.

**இன்றும் நினைவில் கொள்ள..... அன்றைய ஞாபகம் .... இங்கே!**

பொன்னம்பல முதலியாரின் பிள்ளைகள் மூவருக்கும் சேர் பட்டம் வழங்கியுள்ளது பிரிட்டிஷ் அரசு. சேர் முத்துக்குமாரசாமி, சேர் பொன். இராமநாதன், சேர் பொன். அருணாசலம் ஆகியோரே அந்தச் சகோதரர்கள்.

இலங்கைத் தேசியகாங்கிரஸ் உருவாக்கப்பட்ட போது அப்போது இருந்த சிங்கள அரசியல் தலைவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து (சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமரான டி.எஸ். சேனநாயக்க உட்பட) சேர்.பொன். அருணாசலத்தை தலைவராகத் தெரிவுசெய்தனர்.

அப்போது ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்பன உருவாகவில்லை. இலங்கைத் தேசிய காங்கிரஸ் மட்டுமே இலங்கையில் வாழ்ந்த அனைத்து மக்களின் உரிமைகளுக்காகவும் குரல் கொடுக்கும் அமைப்பாக விளங்கியது.

இலங்கை சுதந்திரமடையும் தருணத்தில் டி.எஸ்.சேனநாயக்க இலங்கைத் தேசிய காங்கிரஸிலிருந்து விலகி, ஐக்கிய தேசியக் கட்சியை ஆரம்பித்தார்.

சகோதரன் இராமநாதனின் சொல்லையும் மீறி சிங்களத் தலைவர்களுடன் உறவாடி இலங்கையின் சுதந்திரத்துக்காக உழைத்த சேர். பொன்.அருணாசலம் பின்னர் சிங்களத் தலைவர்களால் ஏமாற்றப்பட்டார்; ஓரங்கட்டப்பட்டார்.

- தாண்டவன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்ட யோசனையை இனப்பிரச்சினைக்குரிய தீர்வாகக் கொள்ளமுடியாது

## சமசமாஜக் கட்சி அறிக்கை

கொழும்பு, பெப். 10

ஜனாதிபதியால் சிபார்சு செய்யப்பட்டுள்ள 13ஆவது திருத்தச்சட்டம் ஒரு பிரேரணையே தவிர இனப்பிரச்சினைக்கான தீர்வாக அது முன்வைக்கப்படவில்லை என லங்கா சமசமாஜக் கட்சி தெரிவித்துள்ளது.

சமசமாஜக் கட்சி இப்பிரேரணைகளை இனப்பிரச்சினைக்கான தீர்வாக நோக்கவில்லை. 13ஆவது திருத்தச் சட்டத்திற்கான அமுலாக்கமாக மட்டுமே அதனை நோக்குகின்றது. என்றும் அது குறிப்பிட் டுள்ளது.

இது தொடர்பாக லங்கா சமசமாஜக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கட்சிகளால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில் பிரேரணைகள் சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

மேலும், அப்பிரேரணைகள் கட்சிகளுடன் கலந்தாலோசிப்பதற்கும் அரசாங்கத்தின் ஆதரவைப் பெறுவதற்குமாகவே அவை சமர்ப்பிக்கப்பட்டன. மேலும், அரசியல் தீர்வு யோசனைகள் என்பதை அக்கட்சிகள் மறுத்துள்ளன.

மேலும், சர்வகட்சிக் குழுவில் தயாரிக்கப்பட்ட முக்கியமான பிரேரணைகள் உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வோர் அரசாங்கமும் மாகாண சபை முறையை முழுமையாக அமுல்படுத்தவே முயற்சித்தன. விசேடமாக இம்முறை நிறைவேற்று அதிகாரத்தின் மூலம் இந்த மாகாண சபை முறையை அமுலாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எனினும், கடந்த 20 வருட காலத்தில் ஆட்சிப் பொறுப்பிலிருந்தவர்கள் மாகாண சபை முறையை உறுதிப்படுத்துவதற்குப் பதிலாக இன்னும் சீர்கெட்டுப் போகவே வழிவகுத்துள்ளனர்.

20 வருடங்களுக்குப் பின்னர் 13ஆவது திருத்தம் உரிய முறையில் அமுல்படுத்தப்படுமாயின் அது தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதற்கான ஓர் ஆரம்ப முயற்சியாக இருக்கும்

நாடு முகம் கொடுத்துள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டுமாயின் தமிழ்ப் பேசும் மக்களின் எதிர்பார்ப்புக்கு அமைவாக அரசமைப்பில் மாற்றங்கள் கொண்டுவருவதே இதற்கான ஒரே வழியாகும். (சி)

# மன்னாரில் மோதல்கள்

மன்னாரில் நேற்று சனிக்கிழமை இரு முனைகளில் ஸ்ரீலங்காப் படையினர் மேற்கொண்ட முன்னகர்வுகள் முறியடிக்கப்பட்டன என்று புலிகள் அறிவித்துள்ளனர்.

மன்னார் கட்டுக்கரைக்குளம் அணைக்கட்டுப் பகுதியிலும் அடம்பன் பகுதியிலும் நேற்று சனிக்கிழமை காலை இராணுவத்தினர் பெருமெடுப்பிலான முன்னகர்வுத் தாக்குதலை மேற்கொண்டனர். புலிகள் கடும் எதிர்த்தாக்குதலை மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதல் 3 மணிநேரம் நீடித்தது. இதில் படைத்தரப்புக்கு பலத்த இழப்புகள் ஏற்பட்டுள்ளன என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இத்தாக்குதல் தொடர்பான படைத் தரப்பின் தகவல்கள் எவையும் நேற்றிரவு இச்செய்தி எழுதப்படும்வரை கிடைக்கவில்லை. (அ-2)

# களுவாஞ்சிக்குடியில் நேற்று மோதல்

கொழும்பு,பெப்.10

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடியில் கொடுவாமடுப் பகுதியில் நேற்றுக்காலை 5 மணிக்கு விசேட அதிரடிப்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றுள்ளது என ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

மோதலின் பின் படையினர் மேற்கொண்ட தேடுதலில் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரின் சடலமும் ரி-56 ரக ஆயுதமும் மூன்று மகஸின்கள், ஒரு கைக்குண்டு ஆகியனவும் மீட்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

# கொழும்பு சென்ற 19 டாக்டர்களும் அடுத்த வாரம் மீண்டும் வருகிறார்கள்

யாழ்ப்பாணம்,பெப்.10

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நியமனம் பெற்ற தென்னிலங்கை டாக்டர்கள் 19 பேரும் மீண்டும் தமது பதவிகளை அடுத்த வாரம் பொறுப்பேற்க உள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலையில் பணிபுரிவதற்கென மொத்தம் தென்னிலங்கையைச் சேர்ந்த 42 டாக்டர்கள் கடந்த வருடம் டிசெம்பர் 20ஆம் திகதி தொடக்கம் நியமனம் செய்யப்பட்டிருந்தனர்.

அவர்களில் 19 பேர் தங்குமிட வசதி, உணவு, பாதுகாப்பு ஆகிய காரணங்களைக் காட்டி சுமார் இரண்டு வாரங்களில் கொழும்பு திரும்பியிருந்தனர்.

அவர்கள் தமது பிரச்சினைகள் தொடர்பாக வைத்திய அதிகாரிகள் சங்கத்திடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

அவர்களின் பிரச்சினை தொடர்பாக சுகாதார அமைச்சில் கடந்த வியாழக்கிழமை கலந்துரையாடல் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் தென்னிலங்கை டாக்டர்கள் பணியாற்றுவதில் உள்ள சிக்கல்கள் குறித்து அங்கு எடுத்துக்கூறப்பட்டது.

அவர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்க சுகாதார அமைச்சு ஏற்பாடுகளைச் செய்வதாக உறுதிமொழி வழங்கியது. அதனை அடுத்து அவர்கள் அடுத்த வாரம் மீண்டும் தமது கடமைகளைப் பொறுப்பேற்க உள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலையில் பணிபுரியவுள்ள டாக்டர்களுக்கு அளிக்கப்படவேண்டிய வசதிகள் குறித்து சுகாதார அமைச்சு வைத்தியசாலை நிர்வாகத்துக்கு சில அறிவுறுத்தல்களை விடுத்துள்ளது.

### உள்ளகப் பயிற்சி பெற 14 பேர் வந்தனர்

இதேவேளை -

யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ளகப் பயிற்சிக்கென நியமிக்கப்பட்ட வைத்தியர்களில் 14 பேர் தமது பணியை ஆரம்பித்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

போதனா வைத்தியசாலையில்உள்ளக் பயிற்சிக்கென 17 வைத்தியர்கள் நியமனம் செய்யப்பட்டனர். அவர்களில் 14 பேர் தமது பயிற்சியை ஆரம்பித்துள்ளனர். இவர்களில் மூவர் குடாநாட்டைச் சேர்ந்தவர்கள். ஏனைய 11 பேரும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த தமிழ், சிங்கள வைத்தியர்கள் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-1-50)

# கிளிநொச்சியை இராணுவம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் 15,000 பேரை இந்த வருடம் சேர்க்கத் திட்டமிட்டிருக்கின்றோம். இராணுவத்துக்கு ஆள்திரட்டுவது தற்போது இலகுவான காரியமாகிவிட்டது. ஆனால் கடந்த காலங்களில் இராணுவத்துக்கு ஆள்திரட்ட நாம் மிகவும் கஷ்டப்பட்டோம்.

### புலிகளை கட்டம் கட்டமாகவே வெற்றி கொள்ள முடியும்

விடுதலைப் புலிகளை கட்டம் கட்டமாகவே வெற்றிகொள்ள முடியும். அவர்கள் 25 வருட கால கெரில்லா அனுபவத்தை வைத்துப் போரிடுவார்கள். எனவே விடுதலைப் புலிகளைக் கட்டம் கட்டமாகவே வெற்றிகொள்ளவேண்டும். அது அடுத்த மாதத்தில்(மார்ச்) சாத்தியப்படாது.

விடுதலைப் புலிகள் தமது அமைப்பில் 5,000பேரை மட்டுமே கொண்டுள்ளனர். தற்போது விடுதலைப் புலிகளின் அரைவாசிப் பேரை அழித்துவிட்டோம். மீதம் அதில் உள்ளவர்களையும் அழிக்கவேண்டும்.

### முன்னரைப் போன்று கைப்பற்றிய பின்னர் விலகமாட்டோம்

கிளிநொச்சியைக் கைப்பற்றுவதே எமது திட்டம். நாம் ஏற்கனவே மேற்கொண்ட நடவடிக்கைகள் பல்வேறு தலையீடுகளால் நிறுத்தப்பட்டன. இந்தியா ஒரு தடவை தலையிட்டு எமது முயற்சியை தடுத்தது. முன்னாள் அரச தலைவர்களான ரணசிங்க பிரேமதாசாவும் சந்திரிகா குமாரதுங்கவும் இந்த முயற்சிகளை எடுத்தனர். ஆனால் அவர்கள் அரசியல் அழுத்தங்களால் அந்த முயற்சியைக் கைவிட்டுவிட்டனர்.

ஆனால் இந்தத் தடவை நாம் கிளிநொச்சியைக் கைப்பற்றுவோம். கைப்பற்றிவிட்டு கடந்த காலத்தைப் போன்று விலகமாட்டோம். தொடர்ந்தும் அங்கு நிலைகொள்வோம். எனது இராணுவத் தளபதி பதவிக்காலத்தில் சிறந்த இராணுவத் தளபதி என்ற நிலையுடன் பதவி விலகுவேன். அற்குப் பின்னர் அரசியலில் ஈடுபடமாட்டேன். அந்த அனுபவம் எனக்கு இல்லை - என்றார் அவர். (அ)

# முன்னாள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தம்புத்தேகம வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

படுகாயமடைந்த மற்றும் ஒருவர் தம்புத்தேகம வைத்தியசாலையில் இருந்து அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனினும் அவரும் அங்கு உயிரிழந்தார்.

ஸ்ரீபதி சூரியாராய்ச்சியின் மெய்ப்பாதுகாவலர்கள் இருவரும் படுகாயமடைந்த நிலையில் தம்புத்தேகம வைத்தியசாலையிலும் அநுராதபுரம் வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மரணம் தொடர்பான பிரேத பரிசோதனைகளை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

அமைச்சர்களான துமிந்த திஸநாயக்கா, பந்துல பஸ்நாயக்கா ஆகியோர் சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டுள்ளனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்காக முன்னின்று உழைத்தவர்களில் ஸ்ரீபதி சூரியாராய்ச்சியும் ஒருவராவார்.

மக்கள் சுதந்திர முன்னணிக்குள் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக மங்கள சமரவீரவுடன் இணைந்து வெளியேறி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மக்கள் பிரிவு என்ற மாற்றுக் குழுவை ஸ்தாபித்து போட்டி அரசியலில் ஈடுபட்டுவந்தார்.

அதன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து உருவாக்கப்பட்ட தேசிய சபையிலும் ஸ்ரீபதி சூரியாராய்ச்சி செயலாற்றி வந்தார்.

இவர் மஹிந்த ராஜபக்ஷவின் அரசில் திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சராக இருந்தவர். அதற்கு முதல் சந்திரிகா அரசில் (2004 இல்) இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை பிரதி அமைச்சராக பணிபுரிந்தவர். இவர் சட்டத்தரணி ஆவார். அதற்கு முதல் கடற்படை அதிகாரியாகவும் கடமையாற்றியவர். (அ-2)

# கோதுமை மா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனைத் தொடர்ந்து கோதுமை மாவின் விலை தற்போது கிலோ 81 ரூபாவாக நிர் ணயம் செய்யப்பட்டுள்ளது.

ப.நோ.கூ. சங்கக் கிளைகளில் தேவை யான அளவு மாவைக் கொள்வனவு செய்ய இயலும் என்று யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் தெரிவித்தார்

இதற்கிடையில் புதிய விலையில் கோதுமை மா விற்பனை செய்யப்படுமாயினும் பாணின் விலை உயர்த்தப்படவில்லை என்றும் எதிர்வரும் 20ஆம் திகதி வரை அதன் விலை அதிகரிக்கப்படமாட்டாது என்றும் தற்போதைய விலைப் படியே பாண் விற்பனை செய்யப்படும் என்றும் அரச அதிபர் தெரிவித்தார்.

குடாநாட்டில் நேற்றுவரை கோதுமை மா கிலோ 68ரூபா 50 சதத்துக்கும் பாண் 43 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டு வந்தது. (அ-1-203)


அனைவருக்கும் நன்றி
DMI
கிளை நிறுவனம்
154 A, நாவலர் வீதி (நாவலர் வீதி, பிறவுண் வீதிச் சந்தி), யாழ்ப்பாணம்.

NOW AVAILABLE
Unipro
Intel P4 3.0/2m,
Intel 945 MB
512Mb DDR2
80Gb Sata HDD,
Combo
15" SS/VS Monitor
Keyboard
Mouse
Speaker
UPS
Processors
Mother Boards
Memories
UniCore
Intel C2D 2.2/2m,
Intel 945 MB
1 Gb DDR2
160Gb Sata HDD,
DVD-RW
17" LCD Monitor
Keyboard
Mouse
Speaker
UPS
UniDual
Intel Dual 3.0/4m
Intel 945 MB
1 Gb DDR2
80Gb Sata HDD,
DVD-RW
15" LCD Monitor
Keyboard
Mouse
Speaker
UPS
Printers
Laser
Dot Matrix
InkJet
UNIT
மனோகரா சந்தி
347, K.K.S Road, Jaffna
4590720, 2228844

விற்பனைக்கு வந்துவிட்டது



★ 2 வருட உத்தரவாதம் (30000KM)
★ 3 இலவச சேவிஸ்
TVS SCOOTY PEP +
TVS LANKA (PVT) LTD இன் அங்கீகாரம் பெற்ற விற்பனை முகவர்
யசோ மோட்டார்ஸ்
163, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

விற்பனைக்கு வந்துவிட்டது
HERO STREAM 49 CC



யசோ மோட்டார்ஸ்
163, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.02.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.